KALKI 9.1.94 ரூ. 3.00

கல்கி

பொங்கல் ஸ்பெஷல்!
(இலவச இணைப்புடன்)



குடும்ப உறவுகள் சிறப்பிதழ்!


Happy Pongal
एअर इंडिया
AIR-INDIA






பொல்லாத பொங்கல் வாழ்த்துக்கள்!

யார் யாருக்கு அனுப்பலாம்? யோசனை செய்தபடி படிக்கவும்!





* வையகமெங்கிலும் இன்பம்
தங்கிடணும் சாமி!
கோவினம் வழங்கிடும் பால்
பொங்கிடணும் சாமி!


* பகலவன் பல் இளிக்க,
இயற்கை முகம் மலர,
பாலின் புன்னகையில்,
பொங்கலின் சிரிப்பு - எங்கும்
நிறையட்டும் நகைப்பு





* கல் தள்ளிவைத்த நெல்லோடு
நுனி தள்ளிவைத்த கரும்போடு
நீர் தள்ளிவைத்த பாலோடு
இடர் தள்ளிவைத்த இன்பம் பொங்குக!

* ஒளி வாழப் பாடிய ஞாயிறை
நிலம் வாழப் பாடிய நெல்லை
இனிப்பு வாழப் பாடிய கரும்பை
இனிதே வாழப் பாடிப் பொங்குவோம்!





* கவரின் மீது வெள்ளையடித்தால்
பொங்கல் என்று அர்த்தம்
தை பிறந்து விட்டதென்றால்
மார்கழி முடிந்ததென்று அர்த்தம்
மாட்டுக் கொம்பில் வர்ணம் அடித்தால்
மாடு முட்டவில்லை என்றே அர்த்தம்
பல்லில் கொஞ்சம் கல்லு கிடைத்தால்
பொங் 'கல்' என்றே அர்த்தம்! அர்த்தம்!





* 'அடி தின்னே செத்த' நெல்லில்
உமியை 'ஓட விரட்டிய' அரிசியோடு
'உதைப்பட்டு' கறந்த பாலில்
'கருஞ்சட்டி பானைத் தலை'யில்
கருப்பட்டி இனிப்புப் பொங்கல்!

– ஏ. கே.என்.

(யோசித்தும் புரியாதவர்கள் 74 ம் பக்கம் போகலாம்.)



தலையணை மந்திரம்

சினிமாக்களிலும் கதைகளிலும் காதலின் ஊற்றுக் கண்ணாகவும் கிளுகிளுப்பின் உறைவிடமாகவும் சித்திரிக்கப்படும் படுக்கையறைகள், நிஜ வாழ்க்கையில் எப்படி என்பது மணமான அனைவருக்குமே தெரியும். பூச் சூடப்படுவதும் படுக்கையறையில்; பூகம்பம் வெடிப்பதும் அதே அறையில்! இதற்கு எந்த வீட்டுப் படுக்கையறையும் விதிவிலக்கல்ல என்பது பெரிய சமாதானம்!


பூகம்பத்தின் சாத்தியக் கூறு களைக் குறைக்கப் பேருதவியாக இருக்கக் கூடியது ● Care ● Share ● Dare என்ற மூன்று அம்சக் கொள்கை - அதாவது அக்கறை காட்டுதல், பகிர்ந்து கொள்ளுதல், துணிவுடன் இருத்தல் என்ற புதிய தலையணை மந்திரம்.

அக்கறையை வெளிப் படுத்த மனைவிக்கு நாள் முழுதும் பல சந்தர்ப்பங்கள். காலையில் காப்பியுடன் எழுப்பி, பிடித்ததைச் சமைத்து, முன்யோசனையுடன் கர்சீப் எடுத்து வைத்து, உடம்பு சரியில்லாவிட்டால் கவனித்து... இப்படி சிறிதும் பெரிதுமாக ஏராள விஷயங்களில் அது வெளிப்படுகிறது. எதிர்பாராத ஒரு சமயத்தில் அதே கவனிப்பும் பராமரிப்பும் அவளுக்கும் பதிலுக்குக் கிடைக்குமானால், எவ்வளவு இதம்! அதைப் பகல்போதில் பகிரங்கமாக செய்யக் கூச்சப்படும் கணவன்மார்கள் படுக்கை அறையின் தனிமையிலாவது வெளிப்படுத்தலாமே?

அடுத்தது sharing. பகிர்ந்து கொள்வது. இதுவும் அக்கறை காட்டுவதன் ஒரு பரிமாணமே. பொருள்களையும் பணத்தையும் பகிர்ந்து கொள்ளுவதில் எவ்வளவு தியாகமும் விட்டுக் கொடுத்தலும் இருக்கிறதோ, அதே அளவுக்கு உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதிலும் தேவை.

புலம்பல்களைப் பொறுமையுடன் கேட்பதும், 'அலுத்துப் போச்சு' 'என்னால் முடியலை' 'ஆளை விடுங்க' 'அந்த மானேஜர் கிழம் இருக்கே...' என்ற முத்திரைகள் பதித்த டயலாக்குகளை மீண்டும் மீண்டும் கேட்பதும் கூட பகிர்தலில் தான் சேர்த்தி. சந்தோஷப் பகிர்தலுக்கு மனம் விட்டுச் சிரித்து, அலுப்பு பகிர்தலுக்கு அனுதாபம் காட்டி ஆறுதல் கூறுவது படுக்கையறை அமைதிக்குப் பேருதவி.

கடைசியாகத் துணிவு. இது கைவருவது கொஞ்சம் கஷ்டம்; என்றாலும் மிக முக்கியமானது. கணவன் - மனைவியுள் யாரேனும் ஒருவர் மனமுடைந்தோ நொறுங்கியோ



போகும் சந்தர்ப்பத்தில் அடுத்தவர் காட்டும் துணிவே ஊன்றுகோல்; அவர் மீண்டும் நிலைக்கு வந்து முன்னேற உதவும் ஏணிப்படி. இந்தத் துணிவின்

பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் படுக்கையறை விளங்க முடியும்.

'சரி. இப்படி பொறுமை, பகிர்தல், விட்டுக் கொடுத்தல் என்று ஒரு 'யோக' நிலைக்குப் போய்விட்டால் 'செளிமா சமாசாரமெல்லாம் என்னாவது...?' என்ற கேள்வி எழும்.

இதற்குப் பதிலாக, ஒரு டாக்டர் அளித்த விளக்கத்தைச் சொல்லலாம்: 'செக்ஸ் உணர்வில் தொண்ணூறு சதத்தை மனம்தான் நிர்ணயிக்கிறது. மீதி பத்து சதவிகிதம்தான் உடலின் உந்துதல்' என்றார் அவர்.

மனத்தின் சோர்வும் கொதிப்பும் அடங்கிய நிலையில் குதூகலம் பிறக்க, தாம்பத்யம் சிறக்கும். இதையே புரட்டிப் போட்டுச் சொல்வதென்றால் சமன்பட்ட மனநிலை இல்லாதபோது ஏற்படும் உடலுறவு நிச்சயம் திருப்தி தராது.

வாரத்தின் சில நாட்களை 'no complaint days', no work days' என்று வகுத்துக் கொள்ளலாம். இந்த நாட்களில்

புதிய பார்வை!

புகார்கள், புலம்பல்களை மூட்டை கட்டி வைக்கலாம். படுக்கையறைக்கு ஃபைல்கள், புத்தகங்கள் எடுத்து வருவதைத் தடை செய்யலாம்.

பெற்றோர்கள், குழந்தைகளுக்கென்று ஒரு நாளைப் பிரத்யேகமாக ஒதுக்குவதும் அவசியம் - அன்று ஜூனியர்களுக்கு சீனியர் அந்தஸ்து கொடுத்து, அவர்கள் விரும்பும் பொழுதுபோக்கு, விளையாட்டுகளில் கலந்து கொள்ளலாம்.

என்ன செய்ய, மகிழ்ச்சிக்குக் கூட திட்டமிட வேண்டிய ஓர் இறுக்கமான சூழல் இன்று நிலவுகிறது. திட்டமிட்டுப் பழக்கப்படுத்திக் கொள்ளும் விஷயங்களே நாளடைவில் இயல்பாகிப் போய்விடும் என்பது ஆறுதல்.

– மலர்.



சானல் மாற்று சோபாவில் சாய்ந்து!

ரஜினிகாந்த் நடித்த ''படிக் காதவன்'' திரைப்படம் சன் டீவியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. இடையிலே படம் நிறுத்தப்பட்டு, நேயர் களுக்கு ஒரு கேள்வி : ''படத்தில் ரஜினி ஓட்டும் டாக்ஸியின் நெம்பர் என்ன?'' இதற்கான விடையை அவர்கள் குறிப்பிடுகிற எண் ணுக்கு, உடனே போன் செய்து சொல்ல வேண்டும்.


சென்னையில் உள்ள சன் டீ.வி. அலுவலகத்துக்கு, டெலிபோனில் சரியான விடையளிப்பவர்களிலிருந்து, பரிசுக்குரியவரைத் தேர்ந்தெடுத்து, பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரத்தில் உள்ள 'ஒளிபரப்பு நிலைய'த் துக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. மணிலாவிலிருந்து சன் டீ.வி. யைச் சேர்ந்த ரபிபெர்னார்ட், மதுரையில் வசிக்கும் பரிசு பெற்ற அதிருஷ்டசாலி யுடன் டெலிபோனில் தொடர்பு கொள்கிறார். அவர் கேட்கும் கேள்விகளும் அதிருஷ்டசாலி அளிக்கும் பதில்களும் நேரடியாய் ஒளிபரப்பாகின்றன.

மதுரைக்கும் மணிலாவுக் கும் இடையிலான டெலிபோன் உரை யாடல், மணிலா வில் உள்ள ஒளி பரப்பு நிலைய யத்திலிருந்து செயற்கைக்கோளுக்கு அனுப்பப்பட்டு, செயற்கைக்கோள் அதை மீண்டும் பூமிக்கே அனுப்ப, அவற்றை வாங்கிக் கொள்ளும் டிஷ் ஆன்டெனாக்கள், டீவிக்களுக்கு அனுப்புகின்றன. ஆக, மதுரைக் காரர், டெலிபோனில் பேசும் தன் குரலை, தன் வீட்டு டீ.வி.யி லேயே கேட்கிற போது, அவருக் கும் அவரது குடும்பத்தாருக்கும் ஏற்படும் பெரும் ஆச்சரியத்தின் ஆழத்தை டீ.வி. பார்க்கிற அனைவராலுமே உணர முடி கிறது. சென்ற தீபாவளியன்று இப்படி நேயர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய சன் டீ.வி., பொங்கலுக்கு அதை மீண்டும் செயல்படுத்தப் போகிறதாம்.

'டெலிகான்பிரன்ஸ்' என்று சொல்லப்படும் செயற் கைக்கோள் உதவியுடனான இந்த நேரடி ஒளிபரப்பு முறை புதிதல்ல. ஒவ்வொரு தேர்தலின் போதும், பிரணாய் ராயும் விநோத் துவாவும் கையாளுகிற டெக்னிக்தான்.

இரண்டாம் உலகப் போரின் போது, ஆர்த்தர் கிளார்க் என்கிற ராடார் டெக்னீஷிய இளைஞன் கண்ட கனவுதான் இந்த செயற்கைக்கோள் வழி ஒளிபரப்பு. அத னால்தான் வானில் செயற்கைக்கோள் சுற்றி வரும் பாதை கூட 'ஆர்த்தர் பெல்ட்' என்று குறிப்பிடப்

* ஜியோ சேடிலைட் : பூமியின் வேகத்தில் சுற்றுவதால், நிலைத்திருப்பது போன்ற தோற்றம்.



படுகிறது. ஆர்த்தரின் கனவு அறுபதுகளில் நனவாகியது.

இன்று வானில் இன்டெல் சாட், அரப் சாட், கோரிஸோண்ட், ஏசியா சாட், எக்ரன் சாட், இன்சாட் என்று ஏகப்பட்ட செயற்கைக் கோள்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. பூமியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 35 ஆயிரம் கிலோ மீட்டர் உயரத்தில் இவை இருக்கின்றன. இந்த செயற்கைக்கோள்களில், ஏசியா சாட் என்ற செ. கோள் மூலம்தான் ஸ்டார் டீ.வி. நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. (Satellite Television Asian Region என்பதன் சுருக்கம்தான் STAR) இந்தியாவின் தூர்தர்ஷன் நிகழ்ச்சிகள் இன்சாட் உபயம். சன்- டீவி ஒளிபரப்பாவது RIM-GS என்கிற அமெரிக்கன் சாட்டிலைட் மூலம். இது பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு மேலே இருந்து செயல் படுகிறது.



* ''டிஷ்''



* கலாநிதி மாறன்

சீனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற ஒரு சில நாடுகள்தாம் இன்று செயற்கைக்கோள்களை மேலே ஏவக்கூடிய தொழில் நுட்பத்தைத் தெரிந்து வைத்துள்ளன. எனவே, செயற்கைக்கோள் ஏவ விரும்பும் எந்த ஒரு நாடும் இவர்களையே நம்ப வேண்டியுள்ளது. (ரஷ்யா, இந்தத் தொழில் நுட்பத்தை இந்தியாவுக்குக் கற்றுத் தர முன்வந்ததும், அமெரிக்காவின் தலையீட்டால் ஜகா வாங்கியதும் அத்தனை சீக்கிரம் மறந்து விடக்கூடிய விஷயமா என்ன?) ஒரு செயற்கைக் கோளை வானில் ஏவுவதற்கு, 50 மில்லியன் டாலர் வரை செலவாகுமாம்!

''வானில் இருக்கும் செயற்கைக்கோள்களை ஸ்டார் டீ.வி., சன் டீ.வி., ஏசியா நெட் போன்ற நிறுவனங்கள் வாடகைக்கு எடுத்து, அவற்றின் மூலமாகத் தமது நிகழ்ச்சிகளை ஒளி பரப்புகிறார்கள். இப்படி வசிக்கப்படும் வாடகை, ஒவ்வொரு செயற்கைக் கோளுக்கும் ஏற்ப மாறு படும். தோராயமாய்ச் சொல்லவேண்டுமெனில், மணிக்குப் பத்தாயிரம் ரூபாய் முதல் முப்பதாயிரம் ரூபாய் வரை ஆகும்'' என்கிறார் ஏசியா நெட் அமைப்பின் துணைத் தலைவரான மேனன். ரஷ்ய செயற்கைக்கோள் மூலம் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வரும் ஏசியா நெட், ரஷ்யாவில் வாழும் கேரளத்தவர் ஒருவரும் கேரள மாநில தொழில் முதலீட்டு நிறுவனமும் இணைந்து துவங்கிய ஒரு நிறுவனம். கேரள மாநில மின்வாரியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மின்சாரக் கம்பங்களைப் பயன் படுத்தி, கேபிள் கனெக்ஷன் அளித்து, கேரள மாநிலம் முழுக்கத் தனது தினசரி மூன்று மணி நேர மலையாள நிகழ்ச்சிகளை ஏசியா நெட் ஒளிபரப்புகிறது.

''என்ன இருந்தாலும், நமக்குப் புரிகிற மொழியில் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, கிடைக்கிற சந்தோஷமே தனிதான். இந்தக்

அஸ்வினி மஸில் ஆயில்

மூட்டு வலி, சுளுக்கு மற்றும் இதர வலிகளிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது.



அஸ்வினி மஸில் ஆயில்

கடந்த 2 1/2 வருடங்களாக, நான், இடுப்புக்கு வலது புறத்திலிருந்து முழங்கால் வரை தாங்க முடியாத நரம்பு வலியினால் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தேன். பல இங்கிலீஷ் மருந்துகளை உபயோகித்தேன். விளைவாக தற்காலிக குணம் கிடைத்ததே தவிர, பூரண குணம் கிடைக்கவில்லை. மேலும், வலி, அடிக்கடி வந்து கொண்டே இருக்கும்.
'அஸ்வினி மஸில் ஆயிலை' ஒரு மாத காலம் மட்டும் உபயோகித்ததின் காரணமாக, வலி, பெருமளவுக்கு குறைந்து விட்டது. அஸ்வினிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

V.S.V. ரிசாத்,
ஐதராபாத்.

தயாரிப்பாளர்கள்:
அஸ்வினி ஹோமியோ பார்மஸி
முஸாபேட், ஐதராபாத் 500 018

அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில் தயாரிப்பாளர்களின் மற்றுமோர் தயாரிப்பு

இல்லந்தோறும் இருக்கவேண்டிய வலி நிவாரணி

கோணத்தில் சிந்தித்ததன் விளைவு தான் சன் டீ.வி.'' என்கிறார் அதன் நிர்வாக இயக்குனர் கலாநிதி மாறன். சன் டீ.வி.யின் நிகழ்ச்சி நேரம் விரைவில் அதிகரிக்கப்பட விருக்கிறதாம்.

ஸ்டார், சன், போன்றவற்றுக்கு வருவாய் கிடைப்பது விளம்பரங்கள் மூலமாகத்தான். ''இந்திய மார்க்கெட்டில் - குறிப்பாக தமிழ் நாட்டில் - விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்று மட்டுமில்லாமல், அயல்நாடுகளுக்குத் தங்கள் பொருட்களை ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்புகளை எதிர்பார்த்தும், பலர் சன் டீ.வி.யில் விளம்பரம் செய்கிறார்கள்'' என்கிறார் கலாநிதி மாறன்.

''ஸ்டார் டீ.வி.யில் நம் நாட்டுக் கம்பெனிகள் விளம்பரங்கள் தருவதுபோல, வரும் நாட்களில் பல்வேறு அயல் நாட்டுக் கம்பெனிகளிலிருந்தும், இங்கே விளம்பரங்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆக, செயற் கைக்கோள் வாடகையாய் நாம் செலவு செய்வதை விட அதிகமாக, அயல்நாட்டு விளம்பரங்கள் மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கும் நாள் வெகு தூரத்திலில்லை'' என்கிறார் ஏசியா நெட்டின் மேனன். அதோடு நமது ஏற்றுமதி அதிகரிக்கும் வாய்ப்புக்களையும் உருவாக்குகிறோம், விளம்பரங்கள் மூலம். நம் ஊர் சன்-டீ.வியில் வெளிநாட்டு விளம்பரங்கள் எப்படி வர வாய்ப்பு என்று கேட்டால் - சன் டீவி தெரிவது இங்கு மட்டுமல்ல, சுமார் 84 நாடுகளில்!

கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, நம் நாடு சுதந்திரப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்டதன் உடன் விளைவுகளில் ஒன்றுதான், இன்று பல்வேறு டீவி ஒளிபரப்பு நிலையங்களிடையேயும் நிலவுகிற போட்டா போட்டி! டீவி ரசிகர்களுக்கு, 'இது இல்லாவிட்டால் அது' என்று பிடித்தமான புரோகிராமுக்குச் சானல் மாற்றம் செய்ய முடிகிறதே!

– எஸ். சந்திரமௌலி

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985
223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. போன்:582676; 564354

கனகதாரா முதலீட்டுத் திட்டம்

உங்கள் குழந்தைச் செல்வங்களை கோடீஸ்வரனாக்குங்கள்!
ரூ. 50,000/- செலுத்துவீர். 10 ஆண்டுகளில் ரூ. 50,000/-ஐ திரும்பப் பெறுவீர்.
மீண்டும் 20ம் ஆண்டு நிறைவில் ரூபாய் **ஒரு கோடியை** பெறுவீர்.
(ரூ. 12,500/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும்)

வெகுமதி முதலீட்டுத் திட்டம்

ரூ. 580/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ. 40,000/- பெறுவீர்.

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	•5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும். உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம் 15 ஆண்டுகள்

வைப்புத் தொகை	முதல் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	இரண்டாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	மூன்றாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை
ரூ. 6,320/-	ரூ. 6,000/-	ரூ. 6,000/-	ரூ. 56,320/-
ரூ. 25,280/-	ரூ. 24,000/-	ரூ. 24,000/-	ரூ. 2,25,280/-

பென்ஷனர் நலத் திட்டம் - வட்டி 19 1/2%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,25,000/- பெறலாம்
ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்
சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

SURESH

கடன் நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.
வட்டி விதம் ரூ. 1.85


கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

(Friday Weekly Holiday)


இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும் Business Hours :
Week days 8.30 a.m. to 12.30 p.m. &
2.00 p.m. to 6.00 p.m.
Sunday 8.30 a.m. to 12 noon.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி



வருவாய்க்கு ஏற்ப லாவக வாழ்க்கை!



விலைவாசி உயர்வுக்கு ஏற்ப கிராக்கிப்படி அது இது என்று வருவாயும் அதிகரிக்கத்தான் செய்கிறது. ஆனாலும் குடும்ப பட்ஜெட்டை சரிக்கட்ட முடிய வில்லையே?

விவேகானந்தா கல்லூரியின் பொரு ளாதாரப் பேராசிரியர் கே.வி. வரதராஜ விடம் கேட்டோம் - 'சில டிப்ஸ் கொடுங் களேன்!' என்று. சொன்னார் :

முக்கியமான பிரச்னை கடன். மூன்று வட்டி, ஐந்து வட்டி என்று கடன் பெறுகிறார் கள். (ஒரு வட்டி என்பது 12 சதம்.) இதுவே அவர்கள் வாழ்வு பாழாவதில் பெரும் பங்கு கொள்கிறது. வருவாயை நாசம் செய்யும் மற்றொரு விஷயம் குடிப் பழக்கம். இந்த இரண்டும்தான் பல குடும்பங்களில் பெரும் தீங்கு விளைவிக்கின்றன.

முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன் காப்பி குடிப்பது அபூர்வம். இன்று அதுவே சர்வசாதாரணமாகி, வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை விழுங்கி விடுகிறது.

எதிர்பாராதது நடக்கலாம் என்ற அனுமானத்தின் பேரில் சேமிக்க வேண்டும். ஒரு சமயம் உபயோகப்படும். இன்று இப் பழக்கம் ரொம்பக் குறைந்து விட்டது. பலன், ஓர் அவசரத்துக்கு அடகு வைத்துக் கடன் வாங்கி சிக்கிக் கொள்கிறார்கள்.

கன்ஸ்யூமர் மேனியா, மேலைநாட்டின் பாதிப்பு. நம்முடைய வாழ்க்கை முறையே வேறு. தஞ்சாவூர் மகாராஜா இருந்திருக்கிறார். பெரிய வீடுதான். ஆனால் ஓட்டு வீடு. எது அவசியமோ, அது போதும். இப்போது? எல் லாவற்றையும் தவணை முறையில் வாங்கும் பழக்கம் வந்து விட் டது. எல்லாம் தவணையில் கிடைக்கிறதே என்பதால் தேவைக்கு அதிகமாக வாங்கும் பழக்கத்துக்கு அடிமையாகித் தவிக்கி றோம். ஏராள வட்டி கண்ணுக்குத் தெரியா மல் தந்து கொண்டிருக்கிறோம். ஒன்றை வாங்க ஆசைப்பட்டால், பணம் சேமித்து வாங்குவதே நல்லது.



இன்றைய வாழ்வில் வெளியில் சாப் பிடுவதை ஒரு பழக்கமாக மாற்றிக் கொண் டிருக்கிறார்கள். கணவன் மனைவி வேலை செய்பவர் என்றால், வாரத்தில் ஒருநாள் வெளியில் இரவு உணவைச் சாப்பிடுகிறார் கள். இதுவும் செலவை அதிகரிக்கும் இறக்கு மதி கலாசாரமே.

குழம்புப் பொடி, ரசப்பொடி, புளி, ஊறுகாய் என்று எல்லாமே ரெடிமேடாக வாங்குகிறார்கள். நம் கையால் செய்வது எவ்வளவோ விலை குறைவாய் இருக் குமே. ஆரோக்கியமும் கூட. வேலைக்குப் போவதால் நேரமில்லை என்று சொல்வது வெறும் சால்ஜாப்பு. நாம் நினைத்தால் நேரத்தை உருவாக்கிக் கொள்வதா கடினம்?

முதலில் தேவைகளைப் பட்டியலிட வேண்டும். பிறகு வரிசைப்படுத்துதலும் அவசியம். அனாவசிய செலவுகளைப் பட் டியலிட்டுக் குறைக்க வேண்டும். பக்கத்து வீட்டிற்கு அது அவசியமானதாயிருக்க லாம். உங்களுக்கு அது அவசியமா என்று பாருங்கள்.

சேமியுங்கள். நிலையான சொத்து சேக ரியுங்கள். என்றுமே மதிப்புடையவை வீடு, நகை போன்றவை. மதிப்பு உயருமே தவிரக் குறையாது.

வரும் வருமானத்தில் லாவகமாக வாழ்க்கை நடத்த முடியும். மனஉறுதியும் முறையான வழிமுறைகளுமே அவசியம்.

- ஆர்.வி.

நம்பிக்கை மட்டுமின்றி
நற்பயன்களையும் உங்களுக்கு
வழங்குகிறது ஐடிபிஐ!



ஒவ்வொரு மாதமும்.

காலாண்டிற்கு ஒரு முறை.

அனைத்தும் ஆரம்பத்தில்.

அல்லது அனைத்தும் இறுதியில்.

நான்கு-வழி வாய்ப்பு கொண்ட உங்கள் ஐடிபிஐ ஃபிக்ஸட் டெபாசிட் திட்டம்*

வகை	குறைந்த பட்ச டெபாசிட்	ஆதாய அம்சம்
மாதாந்திர வருமானத் திட்டம்	ரூ. 18,000/-	5 வருடத்திற்கான ரூ. 18,000 டெபாசிட்டிற்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 203.
காலாண்டு வருமானத் திட்டம்	ரூ. 10,000/-	5 வருடத்திற்கான ரூ. 10,000 டெபாசிட்டிற்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 338.
லம்ப்ஸம் டிஸ்கௌண்ட் திட்டம்	ரூ. 10,000/-	5 வருட கால வரையுள்ள ரூ. 10,000 டெபாசிட் தொகையின் மேல் உங்களுக்கு ரூ. 4,691 உடனடியாகக் கிடைக்கும்.
க்யூமுலேடிவ் திட்டம்	ரூ. 10,000/-	டெபாசிட் தொகையான ரூ.10,000 5 வருடங்களில் ரூ. 19,423 ஆக வளருகிறது.

* *மேற்குறிப்பிட்ட டெபாசிட்களிலிருந்து ஈட்டப்படும் ரூ. 10,000 வரையிலான வட்டிக்கு வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 80 L ன் கீழ் வரிவிலக்கு உண்டு*

குறைந்த பட்ச டெபாசிட்: ரூ. 10,000

குறைந்தபட்ச தொகைக்கு மேல் நீங்கள் ரூ. 1000 த்தின் மடங்குகளில் டெபாசிட் செய்யலாம். 3 வருட டெபாசிட்டிற்கான அடிப்படை வட்டி விகிதம் 13% ஆகும். 5 வருட காலவரை மற்றும் அதற்கு மேலுள்ள டெபாசிட் 13.5% அடிப்படை விகிதத்தை ஈட்டுகிறது. மேலும் என்ன, இந்தியாவின் பிரதான வளர்ச்சி வங்கியான **ஐடிபிஐ**-ன் உத்தரவாதத்தை இந்த டெபாசிட் திட்டங்கள் பெற்றுள்ளன. இத்தகைய டெபாசிட்கள் **க்ரைஸில்** நிறுவனத்தின் **எஃப்ஏஏஏ** மதிப்பீட்டைப் பெற்றுள்ளதால் மிக அதிக பாதுகாப்பு உள்ளதை இது பிரதிபலிக்கிறது. ரூ. 31,000 கோடிகளுக்கு மேலான மொத்த சொத்து மதிப்பைக் கொண்ட ஒரு நிறுவனம் உங்கள் முதலீட்டை சிறந்த முறையில் கவனிப்பது இயல்பானதே. மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள **ஐடிபிஐ** அலுவலகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட **ஐடிபிஐ** முகவரை அணுகவும்.

CRISIL RATING FAAA

இத்தவ்வாய்ப்பிற்கு உரித்தானவர்கள்: * தனிநபர் * இந்து கூட்டுக் குடும்பங்கள் * கூட்டமைப்பு நிறுவனங்கள் * கம்பெனிகள்/கார்பொரேட் நிறுவனங்கள்/சங்கங்கள் * ட்ரஸ்டுகள்/அசோசியேஷன் ஆஃப் பர்ஸன்ஸ்.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா

தொழில் துறைக்கான வங்கி

ULKA-FUTURES-17350 TAM

தலைமை அலுவலகம்: ஐடிபிஐ டவர், கஃப் பரேட், பம்பாய்-400 005. **மண்டல அலுவலகங்கள்:** பம்பாய்: நரிமன் பவன், 227, விநய் கே. ஷா மார்க், நரிமன் பாயிண்ட், த.பெ. எண். 19970, பம்பாய்-400 021. **கல்கத்தா:** 44, ஷேக்ஸ்பியர் சரணி, த.பெ. எண். 16102, கல்கத்தா-700 017. **குவஹாத்தி:** [illegible] ஜி.எஸ். ரோடு, [illegible], குவஹாத்தி-781 005. **சென்னை:** 480, அண்ணா சாலை, நந்தனம், த.பெ. எண். 1306, சென்னை-600 035. **புது தில்லி:** இந்தியன் [illegible] 1 [illegible] ரோடு, த.பெ. எண். 231, புது தில்லி-110 001. மற்றும் மாநில தலைநகரங்கள்/முக்கிய நகரங்களிலுள்ள 30 கிளைகள்.

நீங்கள் கேட்டவை - தராசு

● க. சேகர், சென்னை.

? ரத்த தானம் என்று பெறப்படும் ரத்தம், தானம் செய்யப்படுகிறதா? விற்பனையாகிறதா?

! அது நீங்கள் தானம் செய்யும் இடத்தைப் பொறுத்தது. மனித உறுப்புக்களே வியாபாரமாகும் இன்றையச் சூழலில் ரத்த வியாபாரம்தானா நடக்காது!

● ப. வெங்கட், வலங்கைமான்.

? தமிழ்நாட்டில் இளைஞர் காங்கிரஸ் என்ன செய்து கொண்டிருக்கிறது?

! அப்படி ஒன்று இருக்கிறதா என்று பலரும் சந்தேகிக்கும் அளவுக்குச் செயலிழந்து கிடக்கிறது. அது சரி, உங்களுக்கு மட்டும் அது எப்படி ஞாபகம் வந்தது?

● பி. ஜெயப்பிரகாஷ், வேட்டைக்காரன்புதூர்.

? 'முலாயம்சிங் யாதவ் போன்று நானும் ஜாதிக் கட்சி தொடங்கி வெற்றி பெறுவேன்' என்று பங்காரப்பா கூறியுள்ளது பற்றி...?

! ஜாதி, மத அரசியல் பெருகப் பெருக ஜனநாயக மரபு அரசியல் தேயும். நாட்டுக்கு நல்லதல்ல.

● எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய்நல்லூர்.

? தாங்கள் கேள்வி கேட்டு நீங்கள் பதில் அளிப்பதால் நாட்டுக்கு ஏதேனும் பயன் உண்டா?

! நிச்சயம் உண்டு. கேள்வி, சிந்தனையால் பிறக்கிறது. பதில் மேலும் சிந்திக்க வைக்கிறது. ஜனநாயகத்தின் அடிப்படையே சிந்தனைச் சுதந்திரம்தான்.

● கே. ரமேஷ் பாபு, சேலம்.

? இனி அரசு விழாக்களில் நாதசுரம் முதல் நிகழ்ச்சியாமே?

! அதிலும் 'ஜிங்சக்'குக்கே முதலிடம்!

● ஹாஜா முஹம்மது நத்தர், அடியக்கமங்கலம்.

? ராஜாஜியின் எளிமையும் ஆற்றலும் 'ஜெ'யிடம் உள்ளது என்று அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் கூறியுள்ளது குறித்து...?

! கு.ப. பேச்சு!

● சி. என். சிவகுமார், கோவை. ❑

? அனைத்து வாக்காளருக்கும் அடையாள அட்டை என்ற தேர்தல் கமிஷன் அறிவிப்பை எந்த அரசியல் கட்சியும் வரவேற்கவில்லையே?

! அரசியல் கட்சிகளின் அடிமடியில் கை வைக்கும் திட்டமாயிற்றே, எப்படி வரவேற்பார்களாம்!

● மு. இரவிச்சந்திரன், சேலம்.

? பாரதியின் கனவுகளை நிறைவேற்ற 'ஜெ' பாடுபடுகிறார் என செல்வகணபதி பேசியிருக்கிறாரே?

! பாரதியின் கனவு காணி நிலம்தான்; காணும் நிலமெல்லாம் அல்ல.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? கல்கத்தா உலகத் திரைப்பட விழாவுக்கு சிவாஜியைச் சிறப்பு விருந்தினராக அழைப்பதை மேற்கு வங்க அரசு எதிர்த்திருப்பது பற்றி...?

! கலைப் பார்வையும் அரசியல் நோக்கும் ஒன்றை ஒன்று இடறி விட, குழப்பம்.

● தி. மா. தமிழழகன், திருச்சி.

? அரசியல் பற்றி கொஞ்சமாவது தெரிந்து கொள்வது நல்லதா? தெரிந்து கொள்ளாமலே இருப்பது நல்லதா?

! தெரிந்து கொள்ளாமலே இருப்பது, அல்


❑ ரூ 25 பரிசு பெறுபவர்:
சி. என். சிவகுமார்,
24, ஆசிரியர் காலனி,
எ.பி.ஓ. காலனி அஞ்சல்,
கோவை - 641 022.



* அலங்காரப் பதவி



* நன்றியின் மறைவு



* பாரதியின் கனவு...



* கு.ப. பேச்சு!




* வங்கத்தில் எதிர்ப்பு



* ஜாதிக் கட்சி

வை.கோ. புதுக்கட்சி தொடங்குகிறாராமே?



✱ பல்டி கட்சி!

லது நன்கு தெரிந்து கொள்வது நல்லது. அரைகுறை ஆபத்து.

● இராம. சுவாமிநாதன், காரைக்குடி.

? இந்தியாவின் அறிவுத் திறமைக்கு எடுத்துக்காட்டு?

! எத்தனையோ சொல்லலாம். மிக எளிய விஷயம் ஒன்று; வாஷிங்டனில் உள்ள சர்வ தேச அரிசி ஆராய்ச்சி நிலையம் அரிசிச் சாதமும் தயிரும் சேர்ந்தால் அதைவிட ஆரோக்கியமான உணவு வேறு கிடையாது என்று அறிவித்திருக்கிறது.

● கே. ஆர். சுந்தரராஜன், கும்பகோணம்.

? இந்த வருடம் (1993) உங்களால் மறக்க முடியாத தினம் - சம்பவம் - டைரிக் குறிப்பு - நபர் என்ன?

! எல்லாமே சேர்ந்த ஒரு நிகழ்ச்சி நண்பர் ஒய். டி. தாத்தாச்சாரியின் மறைவு. ஒய்.டி.டி. என்று அன்புடன் பலராலும் அழைக்கப் பட்ட இந்த பாபா பக்தர், சிறந்த விஞ்ஞானி. அமெரிக்காவில் ஸ்டான்ஃபோர்டில் ஆய்வுகள் பல நடத்தி வந்தார். இந்தியாவுக்கு உதவ நினைத்து வந்து, வழக்கமான பொறாமைப் புகைச்சல்களில் மூச்சுத் திணறி திரும்பினார். ஆவிகளைப் புகைப் படமெடுக்கும் க்ரிலியன் ஃபோட்டோ கிராஃபி, கம்ப்யூட்டர் வழி கர்நாடக சங்கீதம் என்று பல்துறை ஆய்வுகள் நடத்தினார். புற்றுநோய் ஆய்வும் நடத்தி சாதனைகள் புரிந்த அவர், அந்த நோய்க்கே பலியானது வேதனை.

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? பரங்கிமலையில் கன்டோன்மெண்ட் தேர்தல் என்று நடந்ததே, அப்படியென்றால் என்ன?

! நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் மாநில அரசின் கீழ் செயல்படுவன. கன்டோன் மெண்ட் போர்டு ராணுவ அமைச்சகத்தின் கீழ் வருவது. கன்டோன்மெண்ட் தேர்தல் அந்த கன்டோன்மெண்ட் எல்லைக்கு உட் பட்ட பகுதிகளில் நடப்பது. இங்கு வசிக் கும் ராணுவ மற்றும் சிவிலியன் மக்கள் வோட்டளிக்கிறார்கள்.

● பழ. நாகப்பன், சென்னை.

? வை.கோ. புதுக்கட்சி தொடங்கத் திட்டமாமே?

! 'புதுக் கட்சியில்லை, தி.மு.க.வேதான்' என்று பல்டி அடித்து விட்டாரே! ஆக, பிளப்பதுதான் தமக்கு முக்கியம்; கொள்கை அரசியல் அல்ல என்று மீண்டும் நிரூபித் திருக்கிறார்.

● கே. ராஜபாலு, சேலம்.

? சமீபத்தில் கலங்கடித்த விஷயம் எது?

! தூர்தர்ஷனில் சிகரெட் விளம்பரம் அனுமதிக்கப்படுவதுதான். அடுத்து மது விளம் பரமும் ஆரம்பமாகி விடலாம்!

● அகிலா, கீழப்பாவூர்.

? சூரிய ஒளி அடுப்பு பெருமளவில் பயன் படுத்தப்படாதது ஏன்?

! ஐந்து குறைகள் உள்ளன : குடும்பத் தலைவி வெய்யிலில் நின்று சமைக்க வேண்டும்; அரிசி, பருப்பு, சில காய்கறிகள் மட்டுமே சமைக்க முடியும்; வானம் மோடம் போட்டால் சமையல் நஹி; இரவில் பட்டினியா கிடக்க முடியும்? கடப் பண்ணவும் முடியாது; நாலு பேருக்கு மேல் சாப்பிட வேணுமானால் உதவாது. செலவு குறைவு என்பது பிளஸ் பாயிண்ட். குறைகள் நீங்கிய சூரிய அடுப்பு தயாரிக்க ஆராய்ச்சிகள் நடக்கிறது. கே.ச. ரகுநாதன் கணிசமான வெற்றி அடைந்திருக்கிறார். விலைதான் 20,000 முதல் 38,000 வரை அமைந்து பயமுறுத்துகிறது. நாளடைவில் குறைகள் அற்ற மலிவு விலை சூரிய அடுப்பு தயாராகலாம்.

● ராமன், சென்னை.

? ஷெரீஃப் பதவி...?

! அலங்காரப் பதவிதான், அதிகாரப் பதவி அல்ல. அது முதல்வரின் டாக்டர், சொக்கலிங்கத்துக்குப் போய்ச் சேர்ந்ததில் வியப்பில்லை.

மூன்றாவது குழந்தையா? சலுகைகள் கிடையாது!

மூன்றாவது குழந்தையின் பிரசவத்துக்காக மகப்பேறு விடுமுறையோ, சலுகைகளோ கிடையாது என்று அரசு சட்டம் இயற்றப் போகிறது. இதைப் பல பெண் ணுரிமை அமைப்புக்கள் பலமாக எதிர்த்த போதிலும் 'சட்டம் பெண்களுக்கு அனுகூலமானதே' என்று இங்கு வாதாடுகிறார் மாலினி சேஷாத்ரி.

'இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம் என்று சொல்லிச் சொல்லி அலுத்ததுதான் மிச்சம். யாரும் காதில் போட்டுக் கொள்ளுவதாயில்லை. பார்த்தது அரசு. சட்டம் என்கிற முஷ்டியை உயர்த்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்று. மூன்றாவது குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண் ஊழியருக்கு, பேறு கால விடுமுறையோ, சலுகையோ கிடையாது என்று அறிவிக்க முடிவு செய்திருக்கிறது.

இதற்குப் பெண்களிடமிருந்தும், மாதர் சங்கங்களிடமிருந்தும், பெண்ணுரிமை இயக்கங்களிடமிருந்தும் பலத்த எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. இதில் என்ன வேடிக்கை என்றால், தங்களையும் இந்தச் சட்டத் திருத்தம் பல விதங்களில் பாதிக்கும் என்று அறிந்த பிறகும் கூட, ஆண்கள் யாரும் வாயையே திறக்கவில்லை! சரி, எதிர்ப்பில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது?

'மூன்றாவது குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் பெண்கள் மட்டுமே தண்டனைக்கு உள்ளாகிறார்கள். ஏன், பிள்ளை பெறுவதில் கணவனுக்குப் பங்கும் பொறுப்பும் இல்லையா என்ன? இது என்ன நியாயம்?' என்று பெண் உரிமை அமைப்புக்கள் கேட்கின்றன.

நோக்கம், பெரிய குடும்பங்களைக் கட்டுப்படுத்துவதுதான். இது எப்படித் தவறாகும்?

மற்றொரு வாதம் : 'குழந்தைகள் பெற்றுக் கொள்ளுவது அடிப்படை உரிமை. அதில் எப்படிக் கை வைக்கலாம்?

இருக்கட்டுமே. அந்த உரிமையை நிலைநாட்ட உங்கள் கையிலிருந்தே கொஞ்சம் செலவழித்துக் கொள்ளுங்கள் என்றோ, கொஞ்சம் தியாகம் செய்யுங்கள் என்றோ அரசு சொல்லுவதைத் தடுக்க முடியுமா என்ன? உண்ண உணவும் கல்வியறிவும் கூட அடிப்படை உரிமைகள் தாம். இவற்றுக்கெல்லாம் நாம் செலவழிப்பதோ, அல்லது இவற்றைப் பெறுவதற்காகச் சில தியாகங்களை நாம் செய்வதோ இல்லையா?

● மாலினி சேஷாத்ரி



இந்தச் சட்டத் திருத்தம் வரவேற்கத் தக்கதுதான். ஏனென்றால் -

- ரொம்ப வருடங்களாக, சலுகைகளோடு வேண்டுகோள்கள் விடுத்தும் ஓரளவுக்குத்தான் குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில் வெற்றி கிடைத்திருக்கிறது.
- எல்லோரும் வாங்கி உபயோகிக்கும் நிலையில் கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கின்றன. உண்மையில், அவர்களுக்காக வேண்டும் என்றால் தவிர, மூன்றாவது குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் அவசியமே கிடையாது.
- இது, தாய்க்கும் சேய்க்கும் மருத்துவ வசதிகளையோ, கல்வி வசதியையோ மறுப்பது போன்ற மூர்க்கத்தனமான சட்டம் அல்ல. மிக மிருதுவான எச்சரிக்கை. அவ்வளவுதான்.

கி.பி. 2010லாவது நாட்டின் ஜனத்தொகை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டாமா? ஏற்கெனவே நாம் வளர்ச்சியின் பலன்களை இழந்தும், இருக்கிற மூலதனத்தை எல்லாம் ஒரேயடியாகச் சுரண்டியும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தச் சட்டம் பெண்களுக்கு எந்த வகையிலாவது உதவுமா?

நிச்சயம் உதவும்.

- முதல் முறையாக, தனக்குக் குழந்தை வேண்டுமா, வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமை பெண்ணுக்குக் கிடைக்கும்.
- அரசுத் துறையில் வேலை வாய்ப்புகள் குறைந்து வரும் இச்சமயத்தில், பெண்கள் தனியார் துறையை அதிகமாக நாடுவார்கள். அங்கு சலுகைகளெல்லாம் அவ்வளவாகக் கிடைக்காது.


பெண்கள், தங்களுக்கு வேலை கிடைத்தே ஆக வேண்டும் என்று தீவிரமாக இருக்கும்பட்சத்தில், சலுகைகளுக்காக எதிர்ப்புக்குரல் எழுப்ப முடியாது.

எனவே, மூன்றாவது குழந்தைக்குப் பேறுகாலச் சலுகைகள் கிடையாது என்று அரசு மறுக்குமானால், அது நியாயமில்லை என்று குறைப்பட்டுக் கொள்ள முடியாது. சிலருக்குத் தீமை என்பதைவிட, பலருக்கு நன்மை தரும் என்பதே உண்மை.

உலகைச் சுற்றி நடைப் பயணம்!

தடியை வைத்துக் கொண்டு "ஸ்டண்ட் வேலைக்குத் தயார்" என்பது போல் நிற்கும் ஃபையோனா காம்ப் பெல், இரண்டரை ஆண்டுகளாக நடக்கிறார், நடக்கிறார், நடந்து கொண்டேயிருக் கிறார். ஆப்பிரிக்கா நெடுக 16,182 கி. மீ. நடந்திருக்கிறார், இந்த பிரிட்டிஷ் பெண்மணி. தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுனில் தொடங்கி, வடக்கே மொராக்கோ தேசத் தின் டான்ஜிர் நகரில் பய ணத்தை முடித்தார். நடந்தே, உலகைச் சுற்றிவந்த முதல் பெண்மணியாக விளங்க வேண் டும் என்பது இவர் திட்டம். ஏற்கெனவே அமெ ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களின் குறுக்கே 26,551 கி. மீ நடந்தாகி விட்டது. ஆப்பிரிக்கா மூன்றா வது கட்டம். இதனிடையில் தான் அவருக்கு ஒட்டைச் சிவிங்கிகள் வரவேற்புக் கூறின. நான்காவது கட்டமாக ஐரோப்பிய நடைப் பயணத்தை ஆரம்பித்து விட்டார் ஃபையோனா!




காவல்துறை உயர் அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டம்
சட்டம், ஒழுங்கு பிரச்னைன்னு சொல்லி எனக்கு தலைக் குடைச்சல் கொடுக்கப் போறாங்க!
சாது சாதுப்பா வேலை பாருங்க... ஜீப் தர்றேன்... ஃபோன் சேவை... போலீஸ் வேலைக்கு நிறைய ஆள் எடுப்போம்... ஊட்டியில வேலை பார்த்தா வரிப்படி... இன்னும், நாள் 300 ரூ அலவன்ஸ்....
இந்தாங்க, ஒவ்வொரு சூட்கேஸ்லயும் ஒரு கோடி... தொகுதிக்கு கொண்டு போய் பூந்து விளையாடுங்க!
எம்.எல்.ஏ.க்கள்
ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்கும் ஒவ்வொரு வருஷமும், ஒரு கோடி அள்ளிக் கொடுக்கும் வள்ளலே... உனக்கு சூட்கேஸ்ல ஒரு கோடி வச்சிக் குடுத்தா நான் சொன்னது, தப்புத்தான், தப்புத்தான், தப்புத்தான்...
வாழ்த்து மேத்தா
சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயிலே... தி.மு.க. நானேதான் ஒயிலே...
வை.கோ.
திருச்சி பொதுக்குழு
தஞ்சை பொதுக்குழு



கல்கி



1994
ஜனவரி 9
மலர் : 52
இதழ் : 24
ஸ்ரீமுக
மார்கழி 25

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

எம்.பிக்கு ஒரு கோடி;

எம்.எல்.ஏக்கு அரைக் கோடி!

பங்கு மார்க்கெட் ஊழல் விவகாரமே இன்னும் ஒரு முடிவுக்கு வந்த பாடில்லை. அதற்குள் மற்றொரு பல கோடி ரூபாய் ஊழலுக்கு வழிவகுத்திருக்கிறார் பிரதமர். ஒவ்வொரு எம்.பி.யும் தமது தொகுதியில் செலவிட அவருக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படுமாம்! மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது மிக நல்ல திட்டம் போல் தோற்றமளிக்கும் இந்த ஏற்பாடு, பயங்கரமான லஞ்ச ஊழலுக்கே வழிவகுக்கும். ஆண்டொன்றுக்கு ஒரு கோடியெனில், எம்.பி.யின் பதவிக் காலம் முடியுமுன் அவருக்குப் பூந்து விளையாட ஐந்து கோடி ரூபாய் கிடைக்கும்!

பணம் எம்.பியின் கரங்களுக்குப் போகாது என்றும், அபிவிருத்திப் பணிகளை அவர் நிறைவேற்றி வைக்க மட்டுமே உதவும் என்றும் கூறப்படும் சமாதானம் செல்லாக் காசு! திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் பணத்துக்கு எம்.பிதான் உத்தரவாதம் என்னும் போது, அந்த அதிகாரம் துஷ்பிரயோகமாகும் வாய்ப்பு மிக அதிகம். செலவு ஊதிப் பெரிதுப்படுத்தப்படுவதும், பணம் பாக்கெட்டுக்குப் போவதும் சகஜமாகிப் போகும். இதற்குமேல், விண்டுரைக்கத் தேவையில்லை. எல்லா எம்.பிக்களுமே இப்படி என்று கூற முடியாது என்றாலும் இந்த ஆசைக்கு அடிமைப்படாமல் தப்புவது ரொம்பக் கஷ்டம்! பெரிய சோதனை!

எம்.பியாக இருப்பவர் தர்மநியாயப்படி நடந்து கொள்வதாகவே வைத்துக் கொள்வோம். அப்போதும் அந்தத் தொகுதியில் உள்ள மாற்றுக் கட்சியினருக்கு இது பெரிய அநீதியாக முடியும். தேர்தல் சமயத்தில் ஏற்கெனவே எம்.பியாக இருப்பவர், 'நான் அதைச் செய்தேன்; இதைச் செய்தேன்' என்று எடுத்துக்காட்ட முடியும். எதிர் தரப்பினர் உதட்டைப் பிதுக்க வேண்டியதுதான்.

அபிவிருத்தித் திட்டம் ஒவ்வொன்றையும் அரசாங்கத்திடம் சொல்லி நிறைவேற்றுவது என்பது எம்.பிக்கு ரொம்பக் கஷ்டமாக உள்ளது; கால தாமதம் ஏற்படுகிறது; பல தருணங்களில் நடக்காமலே போகிறது என்பதெல்லாம் மெய்தான். ஆனால் அதற்காகக் கையாளப்படும் இந்தக் குறுக்கு வழி, லஞ்ச ஊழலுக்கு ராஜபாட்டை அமைத்துத் தருவது போன்றது. இன்றைய நடைமுறையில், பாதுகாப்பு அம்சங்கள் எவ்வளவோ இருந்தும் அரசு திட்டங்களை நிறைவேற்றும் போது ஊழல் நடக்கிறது. அதைத் தட்டிக் கேட்க வேண்டிய நிலையில் இருப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளான எம்.பிக்கள். இப்போது அவர்களையும் ஊழல் மன்னர்களாக்கி விடவே அரசு இந்தத் தந்திரத்தைக் கையாள்கிறது. தட்டிக் கேட்கும் தார்மிக பலத்தை மக்கள் பிரதிநிதிகள் இழப்பார்கள்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேற்றுமையின்றி அனைத்து எம்.பிக்களுக்கும் இந்தச் சலுகையை அரசு வழங்குவதில் உள்நோக்கம் உண்டு. ஆளும் கட்சியினரோ, ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களோ தவறு இழைக்கும் போது எதிர்க்கட்சி எம்.பிக்களும் இனி தட்டிக் கேட்கத் திராணி இன்றி தவிப்பார்கள்!

எம்.பிக்களை அடுத்து எம்.எல்.ஏக்களும் எம்.எல்.ஸிக்களும் இவ்வாறே நிதி ஒதுக்குமாறு கேட்பார்கள். எம்.பிக்கு ஒரு கோடி என்றால் எம்.எல்.ஏக்கு அரைக் கோடியாவது ஒதுக்க நேரும். நாளைக்கு, 'இந்தத் தொகை போதாது; உயர்த்திக் கொடுக்க வேண்டும்' என்ற கோரிக்கை - கூக்குரல் எழும். இப்படியே போனால் அரசு, அதன் பல்வேறு அமைச்சகங்கள், அதிகாரிகள், பொதுப் பணித்துறை, இதர துறைகள் எல்லாம் எதற்கு?

பண விரயத்தையும் லஞ்ச ஊழலையும் பகிரங்கமாக வளர்க்கும் இந்தத் திட்டத்துக்கு நிதி அமைச்சர் எவ்வாறு நிதி ஒதுக்கப் போகிறார்? இதற்காக பட்ஜெட்டில் மேலும் வரிகளை விதிக்கத்தான் வேண்டியிருக்கும். எம்.பி.க்களால் தாறுமாறாகச் செலவழிக்கப்படும் - உற்பத்திக்கு உதவாத பணம் பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கும். வரி உயர்வும் பணவீக்கமும் கடைசியில் நம்மைத்தான் மூச்சுத் திணற வைக்கும்.

பெறுவீர் சான்மேக் கி:ப்ட் கார்டு.



5 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி
சான்மேக் சிட்ஸ் அளிக்கும் சிறப்புச்சலுகை

சான்மேக் கிஃப்ட் கார்ட்

எந்தவொரு சீட்டு குரூப்பிலும், சேரும் ஒவ்வொரு
சந்தாதாரரும் பெறும் சிறப்புரிமை இது.

இந்த கிஃப்ட் கார்ட் பெறுவதைத் தொடர்ந்து சான்மேக்
சிட்ஸிலிருந்து மட்டுமின்றி மற்ற சான்மேக் குரூப்
நிறுவனங்களிடமிருந்தும் பலப்பல பயன்களை
பெறலாம்.

அறிமுகம்

விசேஷ சீட்டு குரூப்புகள் ரூ.10,000 முதல் ரூ.5 லட்சம் வரை
ஒவ்வொரு சந்தாதாரருக்கும் பரிசு உண்டு.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

SANMAC CHITS

பதிவு & தலைமை அலுவலகம்
'ஜெம்ஸ் கோர்ட்', A-8 முதல் மாடி, 14 காதர் நவாஸ்கான் ரோடு,
சென்னை-600 006. போன்: 8250601/8251232.

கிளை அலுவலகங்கள்: சென்னை அண்ணா சாலை, போன்: 8277363 • தி.நகர், போன்: 8278515, 8258637 • அசோக்நகர், போன்: 4824757 • மயிலாப்பூர், போன்: 4992488 • அண்ணாநகர் மேற்கு, போன்: 6214454 • மேற்கு தாம்பரம், போன்: 401934 (PP) • புரசைவாக்கம், போன்: 6425036, மதுரை போன்: 23334 • கோயம்புத்தூர் போன்: 46375 • திருச்சி போன்: 25324 • திருவண்ணாமலை போன்: 22922, 23333 • கும்பகோணம்: • திருநெல்வேலி போன்: 322032.

BID FOR A BETTER LIFE

ஒரு அப்பா, தாத்தாவாகும்போது...



❋ ஏ. எஸ். ராமமூர்த்தி

பொதுவாகக் குழந்தைகளுக்கு அப்பா, அம்மாவை விடவும் தாத்தா, பாட்டியிடம் செல்லம் அதிகம். பெற்றோரை விடவும், தாத்தாக்களிடமும் பாட்டியரிடமும் அவர்கள் அதிகம் ஈடுபாடு கொள்வதையும் நாம் காண்கிறோம். 'வயது' அவர்களுக்கு ஒரு பொருட்டாக இருப்பதில்லை. 'உப்பு மூட்டை' ஏறுவதிலிருந்து ஊர்க் கதை பேசுவது வரை தாத்தாக்களுடன் அவர்களது அன்னியோன்னியம், ஒருவித கவிதைத்தனம் கலந்த விஷயம்.



❋ டி. வி. ராமஸ்வாமி



அதுசரி; தன் மகனையோ, மகளையோ அதட்டி, உருட்டி, கண்டிப்புடன் வளர்க்கிறவர்கள், தாம் தாத்தா ஆனவுடன் மட்டும் அதெப்படி 'அன்பின் திருஉருவ'மாகி விடுகிறார்கள்? பேரக் குழந்தைகள் அப்படி யென்ன ரசவாதம் புரிந்து விடுகிறார்கள்? அவர்களுக்கு மட்டும் கண்டிப்பும், கணக்கும் இல்லாது போவதேன்?

இந்த 'தாத்தா சைக்காலஜி' வெகுவாக 'உதைக்கிற' விஷயமாகப் பட்டது. இரண்டு தாத்தாக்களைக் கேட்டபோது...

ஏ. எஸ். ராமமூர்த்தி *(வயது 81)* :

அப்பாவாக இருக்கிற போது, 'குழந்தை வளர்ப்பு' என்பது ஒரு கடமை யாகிவிடுகிறது. அவர்களது பிற்கால நல் வாழ்வுக்காக, சில விதிமுறைகளை நாமே நிர்ணயித்து, பிள்ளைகளுக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், கட்டாயப்படுத்தியாவது ஈடுபடுத்தி, தவறு செய்கையில் கண்டித்துத் திருத்தி, அவர்கள் ஒரு 'பொஸிஷனு'க்கு வருகிற வரைக்கும் நம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது அவசியமாகிறது. அதற்காக 'சர்வாதிகாரம்' என்பதல்ல; தேவையான சமயங்களில் விட்டுக் கொடுத்து, கொஞ்சம் கொஞ்சம், சின்னச் சின்ன சுதந்திரங்கள் வழங்கி... அதுவும் அவசியம்தான். ஆயினும் அந்தச் சுதந்திரம், எல்லை மீறாமல் பார்த்துக் கொள்வதும் அவசியம்தானே? அவர்களுக்கும் திருமணமாகி, குழந்தையும் பிறந்துவிட்ட பிறகு - நமது கடமைகளுக்கு 'ரிடையர்மெண்ட்' வந்துவிடுகிறது. அது இளைப்பாறுதலுக்கான நேரம். அப்போது நமது மகிழ்ச்சி, நிறைவு, திருப்தி இவற்றின் வெளிப்பாடுகளை நம் பேரக் குழந்தைகளிடம்தானே காட்ட முடியும்? பையனிடம் காட்டாத சலுகைகளை பேரன், பேத்திகளுக்கு அளித்து மகிழ்கிறோம். அவர்களைக் கண்டித்து வளர்க்கத்தான் அப்பா, அம்மா இருக்கிறார்களே?

டி. வி. ராமஸ்வாமி *(வயது 87)* :

எனக்கே தெரியவில்லை, ஏன் இப்படி மாறிவிட்டேன் என்று. சின்ன வயதில், என் பிள்ளைகளிடம் ரொம்பக் கண்டிப்புடன்தான் இருப்பேன். என் மனைவி, என்னைவிடக் கண்டிப்பு. கல்வி, ஒழுக்கம், பண்பு - இதைத் தான் அப்போதும் இப்போதும் போதிக்கிறோம். என்றாலும், சொல்லும் 'முறை' மாறுபட்டிருப்பது எனக்கே புரிகிறது.

இப்போதும் பேரப் பிள்ளைகளிடம் இதே நல்ல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறேன். எனினும் பொறுமை, இதம் இதெல்லாம் என்னுள் கூடியிருக்கிறது. என் அனுபவத்தில், பிள்ளைப் பாசத்தைவிட, பேரப் பிள்ளைப் பாசம் பெரிதாகத்தான் தெரிகிறது. அவர்களைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ தோன்றுவதே இல்லை. ஒருவேளை, வயதாகிவிட்டதுதான் ஒரு காரணமாக இருக்குமோ, என்னமோ?

- புவனா

ருக்குமணி வண்டி வருது!

அன்று பந்த். எதிர்க் கட்சிகளின் பந்த். அதனால் ஆபீஸ் இருந்தது. பஸ் ஓடவில்லை. பிரதான சாலை வெறிச்சோடியிருந்தது. ஆபீஸை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தேன். இன்னும் ஒரு கிலோ மீட்டர் நடந்தாக வேண்டும்.

பின்னால் 'ட்ரிங்'கென்று சப்தம் கேட்டுத் திரும்பினேன். சைக்கிளுடன் சாம்பமூர்த்தி நின்று கொண்டிருந்தார்.

"என்ன சார் நடந்தேவா வர்றீங்க?" என்றார்.

"ஹி.... ஹி..." என்றேன்.

"சார் இந்த சைக்கிளைப் பிடிங்க சொல்றேன்" என்றவர், கைத்தலம் தந்தேன் என்ற பெருமைமிகு பார்வையோடு அந்த வண்டியின் கரங்களை என் கையில் திணித்தார்.

"நீங்க என் சைக்கிள்ல போங்க... நான் தனசேகரன் சைக்கிள்ல டபுள்ஸ் வந்துடறேன்" என்றவர், பின்னால் வந்து கொண்டிருந்த தனசேகரன் வண்டியில் ராணி சம்யுக்தையாகி விருட்டெனப் பறந்தார்.

அடப்பாவி...! மனம் குரங்குப் பெடலாய்க் குதித்தது. இது என்ன சோதனை.... வெறுங்கையோடு நடப்பதே இந்த நாற்பது வயதில் மூச்சிரைக்கிறது. இந்த அழகில் மஞ்சுவிரட்டுக் காளையின் மூக்கணாங் கயிற்றைப் பிடித்தாற்போல் இது வேறா....! சாம்பமூர்த்தியைச் சபித் தேன். கூடவே முப்பது வருடத்திற்கு முன்னால்,

"கட்டையிலே போறவனே... உனக்குச் கட்டுப்போட்டாலும் சைக்கிள் விடவே வரக்கூடாது" எனப் பிடிசாபம் விட்ட 'மடி'ப் பாட்டியையும் சபித்தேன்.

எனது ஆரம்பகால சைக்கிள் முயற்சிகளில், அநேக தடவை 'இடி'பட்டவள் இந்த மடிப் பாட்டி.

"நாசமாய்ப் போக!" "உன் மேலே இடி விழ" "மூதேவி... படவா" என்றெல்லாம் தோத்திரம் பாடி, அந்தப் பாட்டி விட்ட சாபம்தான், அடுத்த முப்பது வருடங்களாய் முயன்றும் எனக்கு இந்த 'சைக்கிளாலஜி' (சைக்கிள் டெக்னாலஜி) பிடிபடாமல் செய்துவிட்டது.

அதோடு விட்டிருக்கலாம், அந்த சைக்கிள் முயற்சியை. இருபத்தெட்டில் மறுபடியும் முயன்றிருக்க வேண்டாம் நான். அட, தடிகடா வயதாகிறதே, பகல் வேளையில் கற்றுக் கொண்டால் பலபேர் பழிக்கக் கூடுமே என்று இரவில் வேலைக்குச் சேர்ந்த புதிய ஊரில் துவி சக்கரவண்டியின் பயிற்சியைப் புதுப்பித்தேன். என் நண்பன் துணை யோடு அந்தப் பிரதான சாலையில் வண்டியில் ஏறி அமர்ந்த நேரம் பார்த்தா தியேட்டரில் முதல் ஆட்டம் முடிந் திருக்க வேண்டும்? "ஓரம்போ... ஓரம்போ" என்று எச்சரித்தும் அது ருக்மிணியின் காதில் விழாமல், படம் பார்த்து விட்டு வந்த உற்சாகத்தில் என் சைக்கிள் மேல் மோதி என்னை வீழ்த்தினாள். உடனே கூட வந்திருந்த அவள் பாட்டி, குய்யோ முய்யோ எனக் கூச்சலிட்டு ஒரு கூட்டத்தைக் கூட்ட, அந்த சிறிய விபத்து ருக்மிணியை என் தலையில் கட்டும் பெரிய விபத்தாக முடிந்தது.

அதற்குப் பிறகு சைக்கிளைக் கண்டாலே 'சைக்கிளாஜிகலாக' ஒரு பயம் வர, அதை ஓட்ட முயற்சி செய்வது அவ்வளவு உசிதமல்ல என்று விட்டுவிட்டேன். ஆனால் எனக்கு சைக்கிள் விடத் தெரியாது என்ற ரகசியத்தை யாருக்கும் தெரியாமல் பாதுகாப்பது என்பது, பஞ்சரான டயரில் காற்று ஏற்றுவது போன்ற கஷ்டமான சமாசாரமாக இருந்தது.

இதற்கு முன் வேலை செய்த அலுவலகங்களிலெல்லாம் நான் மட்டும்தான் 'சைக்கிள் லோன்' போடாத ஆசாமியாக இருந் திருக்கிறேன். ஏன் என்று கேட்பவர்களுக்கு "நான் எந்த லோனை

யும் அலெவ்ல் பண்றதில்லே... சம்பளம் முழுசா வர வேணாமா?'' என்று பொய் சொல்லப் போய், அதை மெய்ப்பிக்க வேண்டி, நாக்கில் நீர் ஊற, எந்த ஆபீஸ் லோனையும் அனுபவிக்க முடியாத பரிதாபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்.



சென்னைக்கு மாற்றலாகி வந்து மூன்று வருடங்களாகின்றன. இன்றுதான் இக்கட்டாய் இப்படி மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் இந்த சாம்பமூர்த்தியால் ஏற்பட்டுள்ளது. சென்னையில் அனேகமாக எல்லோரும் பஸ்ஸில் ஆபீஸ் வந்து போய் விடுவதால், என் இயலாமை பற்றி யாருக்கும் தெரிந்ததில்லை.

அதுவும் இன்றோடு இந்த ஆபீஸை விட்டு வேறு ஊருக்கு மாற்றலாகிப் போகும் நிலையில், எனக்கு சைக்கிள் விடத் தெரியாது என்பதை பறைசாற்ற வேண்டாமென்ற எண்ணத்தில் தான் என்னை தேற்றிக் கொண்டு ஆபீஸை நோக்கித் தள்ளிக் கொண்டிருந்தேன். சரட்..... சரட்..... சைக்கிள் ஈனஸ்வரமாக சப்தம் போட்டது. சாம்பமூர்த்தியின் முப்பாட்டனார் காலத்து சமாசாரம்....கத்த காயலான் கடைப் பண்டம்... ஆத்திரத்தோடு காற்றை இறக்கிவிட்டேன்.

"என்ன சார் இத்தனை லேட்?'' என்று நான் நினைத்தவாறே சாம்பமூர்த்தி கேட்டார்.

''அட என்னப்பா சைக்கிள்லே காத்தே இல்லாம குடுத்துட்டு வந்துட்டயே!'' முகத்தில் ஒரு போலி எரிச்சலோடு அலுத்துக் கொண்டேன்.

சைக்கிளைப் பார்த்துவிட்டு சாம்பமூர்த்தியும் 'உச்சு' கொட்டி, சாரி சார் என்றார். நான் என் சாமர்த்தியத்தை மெச்சிக் கொண்டேன்.

அன்று மாலை, மாற்றலாகிப் போகும் எனக்குப் பிரிவு உபசாரம் நடந்தது. என் மேல் எல்லோருக்கும் ஒரு தனி அபிமானமுண்டு. மணிசார்தான் நான் வேண்டாமென்று சொல்லியும் கேட்காமல் தடபுடலாக ஏற்பாடுகள் செய்துவிட்டார். இதற்கு வசூல் செய்ய ஆரம்பித்தவர் திக்குமுக்காடிப் போய்விட்டிருக்கிறார். 'நான் நீ' என்று ஆளாளுக்கு இருபது, ஐம்பது என்று போட்டதில், 'டீ பார்ட்டி'க்கு ஏகப்பட்ட ஜட்டங்கள்.

வழக்கமான உபசார வார்த்தைகளைப் பேசி முடித்துவிட்டு, மணி என்னிடம், ''சார், உங்களுக்கு ஒரு சின்ன பிரஸன்ட்....!'' என்றார்.

ஆஹா, என்னவாய் இருக்கும்? அந்தச் சின்னப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். பளபளப்பாய் ஒரு சாவி. என் ஆவல் கண்ணில் தெரிய மணி, வாசல்புறத்தைச் சுட்டிக் காட்டினார்.

அங்கே -

பளபளவென்று புத்தம் புது சைக்கிள்! சைக்கிள் செயினால் அடிபட்டவனாய் மயங்கி விழுந்தேன்!

அகிலா கார்த்திகேயன்

* சங்கரன்



* டாக்டர் ரெட்டி



செக்ஸ் கல்வி அவசியம்தானா?

உயர்நிலைப் பள்ளி வகுப்பறையில் விஞ்ஞானப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். மனித வர்க்கத்தின் இனச் சேர்க்கை பற்றிய உடற்கூறு விளக்கம். பாடத்தை உடனே நிறுத்தும்படியும், அது போன்ற 'அசிங்கங்களை' இனி சொல்லித் தர வேண்டாம் என்றும் தடைவிதித்தார் தலைமையாசிரியை!

'பாடத் திட்டத்தில் இருக்கும் விஞ்ஞான விளக்கத்தை வகுப்பறையில் சொல்ல விடாமல் தடுக்கப்பட்டேன் - இவ்வளவு கூச்சமும் கண்மூடித்தனமான, அதீத எச்சரிக்கை உணர்வும் தவறல்லவா...?' என்று தம் அனுபவத்தை ஆசிரியருக்குக் கடிதமாக நாளிதழுக்கு எழுதினார் விஞ்ஞான ஆசிரியர்.

செக்ஸ் தொடர்பானது என்பதால், பாடத்திட்ட விஞ்ஞானத்தையே புறக்கணிக்கும் மனப்பான்மை கொண்ட நம் சமுதாயத்தில் ஆரோக்கியமான செக்ஸ் கல்வியை ஏற்கச் செய்வது மிகவும் கஷ்டமான வேலைதான்.

ஆனால், ''இன்றைய அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்று செக்ஸ் கல்வி'' என்று அடித்துச் சொல்கிறார் டாக்டர் டி. நாராயண ரெட்டி. இந்தியாவில் பாலியல் மருத்துவத்தை முறைப்படி படித்து, வெற்றிகரமாகப் பிராக்டிஸ் செய்து வரும் மிகச் சில மருத்துவர்களுள் ஒருவர் டாக்டர் ரெட்டி.

''செக்ஸ் கல்வி என்றால் தாம்பத்ய உறவு குறித்த விளக்கம் மட்டுமே என்ற தவறான எண்ணம் இருக்கிறது. இது முதலில் மாற வேண்டும்'' என்கிறார் டாக்டர் ரெட்டி. ''உடற்கூறு, உடல் நலம் பேணுதல், மனோதத்துவம், குடும்பப் பொறுப்பு, சமுதாயப் பொறுப்பு, சமுதாயத்தில் மற்றவர்களுடன் பழகும் விதம், அன்பின் சக்தி என்று பல விஷயங்களை உள்ளடக்கியது தான் செக்ஸ் கல்வி. அன்பு, பரஸ்பர மதிப்பு என்கிற அடித்தளத்தில்தான் நல்ல தாம்பத்யம் அமைய முடியும் என்ற உண்மையை விளக்குவதே செக்ஸ் கல்வியின் நோக்கம்...''

டாக்டர் இப்படிச் சொல்ல, இரண்டு மகள்கள், ஒரு மகனுக்குத் தந்தையான சங்கரனின் கருத்து நேர்மாறாக இருக்கிறது!

''நம் குழந்தைகளுக்குப் படிப்பு தவிர பண்பாடு, கலாசாரம் இவற்றைச் சொல்லித் தருவதுதான் நம் நோக்கமாக இருக்க வேண்டுமேயொழிய, செக்ஸ் கல்வியெல்லாம் நம் நாட்டுக்குத் தேவையில்லாத விஷயம்'' என்கிறார் சங்கரன்.

''ஒரு பெண் 'பெரியவளா'கும்போது வீட்டில் அம்மாவே அவளுக்குப் பரிவோடு எல்லா விஷயங்களையும் விளக்குவதும் திருமணத்துக்கு முன் அறிவுரைகள் வழங்குவதும் ஆண்டாண்டுகளாக நம் நாட்டில் காதும் காதும் வைத்தது போல் நடந்து வருகிறது. மேலை நாட்டு செக்ஸ் கல்வி சமாசாரமெல்லாம் நமக்கு ஏன்...?''

''அரைகுறை அறிவினாலோ, தவறான நம்பிக்கைகளினாலோ நம் குழந்தைகள்தான் பாதிக்கப்படுகிறார்கள்'' என்கிறார் டாக்டர் ரெட்டி. ''பள்ளிக்குச் செல்லும் ஒரு சிறுமிக்கு தான் பார்க்கக் கவர்ச்சியாய் இல்லை என்று குறை. தோழியிடம் அவள் இதைச் சொல்ல, 'கல்யாணமானால் எல்லா பெண்களும் கவர்ச்சியாகி விடுவார்கள்' என்று தோழி சொல்ல, தன் அழகு கூடும் என்ற நம்பிக்கையில் அந்தப் பெண் ஒரு பையனுடன் உறவு வைத்துக் கொண்டு வம்பில் முடிந்து விட்டது! செக்ஸ் பற்றிய தெளிவான அறிவு இருந்தால் இது நிச்சயமாக நடந்திருக்காது...''

- டாக்டர் ரெட்டி சொன்ன போது வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

''நமது கலாசாரத்தில் ஆண் - பெண் சேர்ந்து படிப்பதும் பழகுவதும் நடைமுறையாகியிருப்பது சமீபத்தில்தான். பெற்றோர்கள் நாசூக்கு கருதி சில விஷயங்களைச் சொல்லாமல் விட்டு விடுகிறார்கள். திருமணமானதும் பெண்கள் பயந்து போய் மனநிலை பாதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நம் நாட்டில் இன்னமும் நடக்கின்றன... முறையான கல்வி மூலம் இதையெல்லாம் தவிர்க்கலாம்'' என்கிறார் டாக்டர் ரெட்டி.

- ப்ரியன்

படம் : அன்வர்




ஆபீஸ் விட்டு வந்து விட்டுக்குள் நுழையும்போது சிரிச்ச முகத்தோட வாங்கன்னு மனைவி சொல்லியிருக்கா...
அப்பா ஆபீஸிலிருந்து வந்ததும், ஆஸ்பத்திரிக்குப் போய் புது தம்பிப் பாப்பாவைப் பார்க்கலாம்னு சொன்னேன் அவ்வளவுதான்....
நேத்து மருமகப் பொண்ணு ஆபீஸ் போயிருந்தப்போ நாலு முறுக்கு எடுத்து இங்கதானே வைச்சேன்....
எங்கப்பா, அம்மாவை 'லா பாயின்ட் லலிதா'னுதான் கூப்பிடுவார். உங்க வீட்ல ஆண்ட்டியை நீங்க எப்படிக் கூப்பிடுவீங்க....?
ஆதர்ச குடும்பம் '94

ஓய்வுக்கும் ஒரு பயிற்சி!

பணியிலிருக்கும்போது 'என்று விடுமுறை' என்று காலண்டரை அலசும் மனம், ரிடையரானதும் 'இனி நிரந்தர ஓய்வு' என்பதை ஏற்றுக் கொள்ளத் தடுமாறுகிறது.

தன்னை எல்லோரும் கைவிட்டது போலவும், சுற்றத்துக்கும் சமூகத்துக்கும் தான் ஒரு எக்ஸ்ட்ரா லக்கேஜ் ஆகிவிட்டது போலவும் எண்ணங்கள் தோன்றி ஓய்வு பெற்றவரை அலைக்கழிக்கின்றன.

''இந்த நிலை நெடுநாள் நீட்டித்து, பலருக்கு மனநோய் கூட வந்துவிடுகிறது...'' என்கிறார் சமீபத்தில் ஓய்வு பெற்ற மூத்த ஐ.ஏ. எஸ். அதிகாரியான டி. ஸ்ரீதரன்.

''ஒரு மணிநேரப் பயணம் செய்வதற்குக் கூட நாம் திட்டமிடுகிறோம். ஆனால் ஓய்வு பெற்ற பிறகு என்ன செய்வது என்பது குறித்து யோசிப்பதில்லை. முன்பெல்லாம் 55 வயதில் ஓய்வு பெற்றால் மேலும் பத்தாண்டுகள் சராசரியாக உயிர் வாழ்வார் ஒருவர். ஆனால் இப்போது சராசரி ஆயுட்காலம் 75 வருடங்கள். ஆக, சராசரியில் இருபது ஆண்டு காலத்தை ரிடையர்மென்டில் கழிக்கிறார்! இவ்வளவு நீண்ட காலத்தைச் சரியாகத் திட்டமிடாமல் போனால் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் கடத்த முடியாது!'' என்கிறார் ஸ்ரீதரன்.

இவர் அண்ணா மேலாண்மை நிலையத்தின் (Anna Institute of Management) இயக்குனராக இருந்த போது ஓய்வு பெறப் போகிறவருக்காக அறிவுரை வகுப்புகள் துவக்கியவர். அவை வெற்றிகரமாக அமைந்தன. பின்னர் தலைமைச் செயலகத்தில் நிர்வாக சீரமைப்புத் துறையில்



• ஸ்ரீதரன்

முதன்மைச் செயலராகப் பணியாற்றிய போதும் முதல் நிலை அதிகாரிகள் ஓய்வு பெறுவதற்கு முன்பு, மூன்று நாள் அறிவுரை வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்று அரசாணையே போட்டார்!

சர்வீஸில் இருக்கும்போது - முழுசாய் சம்பளம் வாங்கிய போதே, பொருளாதார ரீதியில் உன்னைப் பிடி என்னைப் பிடி என்ற நிலை. ஓய்வு பெற்றபின் வருமானம் ஒரேயடியாய்க் குறைய, பொருள்கள் வாங்கும் சக்தி குறைந்து போய், இயலாமை கோபமாய் மாற, வார்த்தைகள் தடிக்க, முடிவில் ஓய்வு பெற்றவரின் சுயகௌரவம் தாக்கப்பட, மன உளைச்சலில் வந்து நிற்கிறது விவகாரம். இதையெல்லாம் மாற்றி, ஓய்வு பெறுகிறவருக்கு ஒரு மனப்பக்குவத்தை உண்டாக்கத்தான் வகுப்புகள்'' என்கிறார் ஸ்ரீதரன்.

பொருளாதார நிலை தவிர இதர நிலைகளும் உண்டு. அப்பா ஓய்வு பெறும்போது வாரிசுகள் நல்ல நிலையில் செட்டிலாகி இருப்பார்கள். இவரது அறிவுரை அவர்களுக்குத் தேவைப்படாது. இந்தச் சமயத்தில் இடையே புகுந்து உபதேசிக்க ஆரம்பித்தால் அது எரிச்சலில் துவங்கி, மோதலில்தான் முடியும். இதை உணர்ந்து கொள்வதும் முக்கியம்.

''ரிடையரானவர்கள், தங்களுக்கென்று சில செயல்பாடுகளை வகுத்துக் கொண்டு காலம் கடத்த வேண்டும். உதாரணமாக மகாபாரதம், ராமாயணம் போன்ற காப்பியங்களைப் படித்து, அவற்றிலுள்ள பாத்திரங்களின் தன்மையை ஆராயலாம். சமூக சேவையில் நாட்டமுடையவர்கள், சேவை அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு, நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவு பண்ணலாம். பேரன், பேத்திகளுக்குப் படிப்பில் துணை நிற்கலாம்...

''வயதானவர்களுக்கு வரக்கூடிய நோய்கள்; அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிகள் ஆகியவற்றை முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்வதும் செயல்படுவதும் நல்லது.

''பொருளாதார சுதந்திரமே ஏராளமான தன்னம்பிக்கை அளிக்கும். அதைப் பெற வேண்டுமானால் ரிடையராவதற்குச் சகல வருடங்கள் முன்னரே திட்டமிடத் துவங்க வேண்டும். அவ்வாறு திட்டமிட்டுச் செயல்படுத்தவும் அறிவுரை வகுப்புகளில் கற்றுத் தருகிறோம். ஓய்வு பெற்ற பின்னரும் ஒரு புதுவாழ்வு அமைந்திட வழி காட்டுகிறோம்'' என்றார் ஸ்ரீதரன்.

- ஸ்ரீநிவாசன்



குடிப்பழக்கத்துக்கு குட்பை!

ஏராளமான குடும்பங்களில் சண்டை, சச்சரவுகளுக்கும் பணப் பற்றாக்குறைக்கும் இன்று பரவலாகப் பெருகி விட்டிருக்கும் மதுப் பழக்கமே காரணம். இதிலிருந்து மீண்டு வர வழி இருக்கிறதா?

குடிப்பவர்களைக் கேட்டால் அதற்கு ஏதேதோ காரணங்களைக் கூறி நமது அனுதாபத்தைப் பெறவே முயற்சி செய்வார்கள். ஆனால் உண்மையில் குடிப்பது என்பது ஒரு நோய். இதை முதலில் உணர்ந்து ஒப்புக் கொள்ள வேண்டும். இந்நோய் கட்டுப்பட வேண்டுமானால் மருத்துவச் சிகிச்சை மட்டுமின்றி, மனோதத்துவ சிகிச்சையும் இவர்களுக்குக் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும். அதற்கான மருத்துவமனைகள் உள்ளன.

மருத்துவமனையில் டாக்டர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஒளிவுமறைவின்றி பதில் அளிப்பதும், சிகிச்சையின் போது முழு ஒத்துழைப்பு அளிப்பதும் அவசியம். மருத்துவ மற்றும் மனோதத்துவ ரீதியிலான சிகிச்சை முறைகளினால், மருத்துவமனைகள் குடிநோயாளிக்கு வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்தி, அர்த்தமுள்ள வாழ்க்கையில் ஈடுபடுத்துகின்றன.

சிகிச்சைகள் மூலம் குடியிலிருந்து ஒருவர் மீண்டாலும், அவர் வாழ்நாள் முழுக்க மதுவைத் தொடாமலேயே இருப்பார் என்று ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்துப் போட்டுத் தருவது சாத்தியமில்லை. அவர் மீண்டும் மதுவை நாடாமல் இருக்கச் செய்வதில் குடும்பத்தாருக்குப் பிரதான பங்கு உண்டு.

மதுவுக்கு அடிமையாய் இருந்த போது கணவன் அளித்த பொய் வாக்குறுதிகளை மனத்தில் வைத்துக் கொண்டு, சிகிச்சைக்குப் பின்னும், எதையும் சந்தேகக் கண்ணோடு மனைவி பார்க்கக் கூடாது. வேறு வழியின்றி அதுவரை மனைவி தானே ஏற்றுக் கொண்ட குடும்பப் பொறுப்புகளை கணவருக்குப் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். கணவர் என்ற மனிதருக்குரிய மதிப்பையும், மரியாதையையும் தரத் தவறக் கூடாது. கூடுதலான பாசமும், அன்பும் அவருக்குத் தேவை என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். கணவனும் மனைவியும் பரஸ்பரம் உள்ள திறமைகளையும் நல்ல அம்சங்களையும் பாராட்டி, அடுத்தவர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். கணவர், தனிமையில் இருக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்து சங்கீதம் கேட்பது, படிப்பது, தோட்ட வேலை போன்ற பொழுது போக்குகளில் அவர் மனம் ஈடுபடச் செய்ய வேண்டும்.

பில் என்கிற அமெரிக்கர் குடி நோய்க்கு ஆளான, கடவுள் நம்பிக்கை இல்லாதவர். ஆனால் அவர் குடிநோய்ச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் இருந்த போது, தனக்குத் துணையாய் ஒரு மாபெரும் சக்தி இருப்பதாய் உணர்ந்தார். அந்தச் சக்தியிடம் தன்னை முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்டால், குடிக்காமல் வாழ முடியும் என்ற நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் அவருக்கு ஏற்பட்டன. அவரது முயற்சியால் 1935-ல் உருவாகி, இன்று உலகம் முழுக்கப் பரவியுள்ள அமைப்புதான் 'ஆல்க காலிக் அனானிமஸ்'. சுருக்கமாய் 'ஏ.ஏ.'. குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட இடங்களில், குடி நோயாளிகள் கூடி தம் அனுபவம், நம்பிக்கை, குடிநோய்க்கான தீர்வு வழிகள் இவை பற்றிய விஷயங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். கூட்டுப் பிரார்த்தனை செய்கிறார்கள். இங்கே பணத்துக்கோ, அதிகாரத்துக்கோ, புகழுக்கோ முக்கியத்துவம் கிடையாது.

குடியினால் பாதிக்கப்பட்டவர்களது மனைவி, உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக இயங்கி வரும் அமைப்பு 'ஆல்-அனான்'. இவ்வமைப்பு குடிநோயாளிகளைப் புரிந்து கொள்ளவும் வழிக்குக் கொணரவும் உறவினர்களுக்கு உதவுகிறது. குடி நோயாளிகளுடன் வாழ்ந்தாலும் தங்கள் வாழ்க்கை பாதிக்காதவிதமாய் அமைத்துக் கொள்ள யோசனைகள் வழங்குகிறது.

– எஸ். சந்திரமௌலி

★ நன்றி : டி.டி. ரங்கநாதன் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20.

பொருளாதார முன்னேற்றமும் முட்டுக்கட்டை மன்னர்களும்!

நமது அரசு டிசம்பர் 15-ம் தேதி ஜெனிவாவில் ''காட்'' நிபந்தனைகளில் கையெழுத்திட்டதற்காக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஆட்சேபணை எழுப்பி, வெளிநடப்பும் செய்தன. என்ன இந்த ''காட்?'' எதற்கு வெளிநடப்பு?

எல்லா நாடுகளுமே இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளன. இறக்குமதியை ஈடுகட்ட இவை ஏற்றுமதியும் செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் அந்நியக் கடன்கள் நாட்டை விழுங்கி விடும்.

இறக்குமதியாகும் பொருள்கள் மீது அரசு இறக்குமதி வரி, சுங்க வரி ஆகியன விதிக்கிறது. இதனால் அரசுக்குக் கணிசமான வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு இறக்குமதிக்கு வரி விதிப்பதை ஒரு சீரான நிலையில் வைத்திருக்கத்தான் உலக நாடுகள் பல சேர்ந்து, ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இதன்படி, இறக்குமதியையே ரொம்பவும் குறைக்கும் அளவுக்கு இறக்குமதி வரி விதிக்காமல், ஒரு வரம்புக்கு உட்பட்டு விதிக்க வேண்டும் என்று ஒப்புதல் அளிக்கப்படுகிறது. உதாரணமாக, நமது ரெடிமேட் ஆடைகளுக்கு அமெரிக்காவில் தேவை அதிகமாக இருக்கிறது. இதற்கு அமெரிக்கா ஏகப்பட்ட இறக்குமதி வரி விதித்தால், நமது ஏற்றுமதியில் சுணக்கம் ஏற்படும். இவ்வாறே மற்ற நாடுகளும் மற்ற பொருள்களுக்குச் செய்தால் சீக்கிரமே நமது அந்நியச் செலாவணி நிலைமை ஆபத்தான கட்டத்தை அடைந்து விடும். இம்மாதிரி ஒருதலைப்பட்சமான நடவடிக்கையை எந்த நாடும் எடுக்க முடியாமல் செய்து, உலக வர்த்தகத்தை ஊக்குவிக்கத்தான் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும், சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் ஒன்றுசேர்ந்து, சீரான வரி விதிப்புக் கொள்கையை உருவாக்கின.

இதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு முன்னணியில் நின்றது, அமெரிக்காவும் இதர அபிவிருத்தி அடைந்துள்ள ஐரோப்பிய நாடுகளும்தான். காரணம், இவர்களுடைய பொருளாதாரமே சமீபத்தில் இலேசாக ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குத் தங்கள் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் சுணக்கம் ஏற்படுவதை அவை விரும்பவில்லை. அந்நாடுகளையும் இணைத்துக் கொண்டு ''காட்'' ஒப்பந்தம் உருவாவதற்கு முயற்சி மேற்கொண்டன.

இதனை எதிர்த்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கூக்குரல், அரசியல்ரீதியானதே! பொருளாதார யதார்த்தம் என்று பார்த்தால், 'காட்' ஒப்பந்தத்தை ஏற்காமல் இந்தியா மட்டும் தனித்து நிற்க முடியாது. அப்படிச் செய்தால், ஒவ்வொரு நாட்டுடனும் தனித்தனியே வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள நேரும். இது ரொம்பக் கால தாமதத்தை ஏற்படுத்தும் என்பது ஒருபுறமிருக்க, நமக்குச் சாதகமாகவே ஒவ்வொரு ஒப்பந்தமும் அமையும் என்றும் கூற முடியாது. இந்தியாவின் நலன் என்ன என்று பார்க்கும் போது, இதர நாடுகளின் பொருளாதாரத்துடன் நமது பொருளாதாரத்தை இணைத்துக் கொண்டு, சம வாய்ப்புப் பெற்று, போட்டா போட்டியில் இறங்கி, வெற்றி பெறுவதுதான். சில அம்சங்களில் இந்தியாவுக்குச் சாதகமாக ''காட்'' ஒப்பந்தம் அமையவில்லை என்றாலும், உலக வர்த்தகத்தின் போக்கை அனுசரித்துத்தான் நாம் நடந்து கொள்ள முடியும்.

அமெரிக்கா வற்புறுத்தும் இன்னொரு அம்சம், அவர்கள் நாட்டில் மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு உருவாகும் மருந்துகள் போன்றவற்றை இந்தியாவில் உற்பத்தி செய்வதெனில், அவற்றை உருவாக்கிய அறிவாற்றலுக்கு மதிப்பளித்து, 'ராயல்டி' தொகை தர வேண்டும் என்பது. விவசாயப் பொருள்களுக்குத் தரப்படும் மான்யங்களைக் குறைந்தபட்சமாக்க வேண்டும் என்பது மற்றொரு அம்சம். பின்னதில் இந்தியாவுக்கு அதிகக் கவலை இல்லை. இங்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு வரும் மான்யங்கள் ''காட்'' ஒப்பந்தம் நிர்ணயித்துள்ளதை விடவும் மிகவும் குறைவுதான்.

இந்தியாவின் குரல் பொருளாதார ரீதியில் ஓங்கி ஒலிக்க, ஜப்பான், டாய்வான் போல் நாமும் பொருளாதார ரீதியில் பலமடைய வேண்டும். அதற்கான முயற்சிகளில் முழுமூச்சுடன் ஈடுபடாமல், சலுகைகளுக்காகவே தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருந்தால், உலக அரங்கில் நம்மை யாரும் மதிக்க மாட்டார்கள். எதிர்க்கட்சிகள், உலகப் பொருளாதாரத்துடன் நமது பொருளாதாரத்தை இணைத்துப் பலப்படுத்த ஒத்துழைப்புத் தர வேண்டுமே தவிர, முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

- வி. கோபாலன்

உ

தமிழர்தம் திருநாள் தைப்பொங்கல் நன்னாள்
தமிழ்நாட்டில் வளம் கொழிக்க வேண்டும்
தரணி எங்கும் செழிக்க வேண்டும்
தங்கள் வாழ்வும் சிறக்க வேண்டும்

COCK BRAND FILE

TRADE MUTHUVEL MARK

- ✳ LEVER FILE
- ✳ CLIP FILE
- ✳ TAG FILE
- ✳ FIBRE BOARD FILE
- ✳ WRITING PAD

தங்கள் முன்னேற்றத்தில் உற்ற தோழன்... 1947 முதல்

வைப்பு நிதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்
ஆண்டுக்கு வட்டி விகிதம்

24%

குறைந்த அளவு அசல்	:	ரூ 3000.
குறைந்த அளவு காலம்	:	12 மாதங்கள்
வட்டி அனுப்புதல்	:	ஒவ்வொரு மாதமும்

முத்துவேல் தொழிலகம், கோப்பு தயாரிப்பாளர்கள்,
அங்கப்ப செட்டியார் தொழில் வளாகம், 20A, வட்டச்சாலை,
அ.பெ.எண். 32, திண்டுக்கல் 624001. தமிழ்நாடு.
✆ அலுவலகம் : 23316, 25260 & 27637 வீடு : 25643 & 23726



உங்கள் குடும்பத்தில் ஒருவர்!



★ கோவிந்தம்மாள்

வீட்டு வேலை புரிகிறவர்களை 'கரெண்ட் தேவையில்லாத ஒலிபெருக்கி' என்பதாகப் பத்திரிகை ஜோக்குகள் கிண்டலடிப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் ஒருநாள் வீட்டு வேலைக்கு ஆள் வரவில்லையென்றால் உலகமே அஸ்தமித்து விட்ட மாதிரி படபடக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு தம்ளர் காப்பி கொடுத்து விடுவதாலேயே தன் மனிதாபிமானத்தை எவரெஸ்ட் அளவுக்கு உயர்த்திக் கொண்டு விட்டதாக எண்ணிக் கொள்பவர்களும் உண்டு.

வீடுகளில் பணிபுரிபவர்கள், வீட்டுக்காரர்களுடன் ஒருவித 'உறவு'ப் பிணைப்பே ஏற்பட்டு விடுவதாகத்தான் கருதுகிறார்கள். சமயங்களில் அவர்கள் குடும்ப விவகாரங்களில் தலையிடுவதும் அறிவுரை சொல்வதும் (அதனால் வாங்கிக் கட்டிக் கொள்வதும்) இதனால்தான்.

குடும்பத்தில் ஒருவராய் வேலைக்காரர்களை எண்ணி நடத்துவதில் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் அநேகம்! ஆனால் 'வேலைக்காரர்களால் தலைவலி' என்று புலம்புகிறவர்களைத்தான் நாம் அதிகம் பார்க்கிறோம்.

இங்கே சில வீட்டு வேலை பார்ப்பவர்கள், தங்கள் எதிர்பார்ப்புகளை அரங்கேற்றுகிறார்கள்.

பச்சையம்மாள் :

வேறு வழியில்லாமல்தான் இந்த வேலைக்கு வருகிறோம். சில வீடுகளில் காப்பி, சாப்பாடு கொடுக்கிறார்கள். சிலர் ஏதும் கொடுப்பதில்லை. அதுவே தேவலை. ஊசிப் போனதையெல்லாம் எங்கள் தலையில் கட்டி விடச் சிலர் நினைக்கிறார்கள். நாங்களும் மனிதர்கள்தானே? அதை வெளியே கொட்டினால், வீணான

★ பச்சையம்மாள்



★ நாகரத்தினம்



★ ராஜம்



மனக்கசப்பு. எங்கள் வயிறு குப்பைத் தொட்டியல்ல என்பதை மட்டும் இவர்கள் உணர்ந்தால் போதும்.

நாகரத்தினம் :

கணவனும் இல்லாமல், கையில் குழந்தையுடன் இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு வீட்டு வேலையைத் தவிர வேறு எந்த வேலையும் சரிப்படாது. சாப்பாடு, துணிமணி என்று தாராளமாக இருக்கும் சிலரால், லீவு போடுவதை மட்டும் ஒத்துக் கொள்ள முடிவதில்லை. பெண்களுக்கே உரிய இயற்கையான உடல் அசௌகரியங்கள், தொடர்ந்து உழைப்பதால் ஏற்படும் அலுப்பு, களைப்பு இவைகளை எசமானர்கள் உணர்ந்து எங்களுடன் அனுசரித்துப் போனால் நன்றாக இருக்கும்.


கோவிந்தம்மாள் :

விலைவாசி ஏற்றத்தில் வீட்டு வேலை செய்து, வயிற்றைக் கழுவுவதே மிகவும் சிரமமாக இருக்கிறது. இந்த நிலையில் கல்யாண வயதில் பெண் அல்லது நோய் வாய்ப்பட்டிருக்கும் குடும்பத்தினர் இருந்தால், அவர்களின் செலவிற்கு, பணத்திற்கு எங்கே போவது? தொகை சற்று அதிகமானால் எங்களால் திருப்பித் தரவே முடியாது என்று நாங்கள் பணிபுரியும் வீடுகளில் அவர்களே முடிவு செய்து விடுகிறார்கள். மாறாக, எங்கள் நிலை உணர்ந்து உதவலாமே! நாங்கள் எங்கே போய் லோன் போட முடியும்?

ராஜம் :

ஜமானர்களுக்கு சந்தேகப்படும் குணம் இருந்தால் எங்கள் பாடு ரொம்பத் திண்டாட்டமாகி விடுகிறது. வீட்டில் ஏதாவது காணவில்லையென்றால், முதல் பழி எங்கள் மேல்தான்! மேலும் வயசுப் பெண்கள் வேலைக்கு வந்தால், சில வீடுகளில் ஜமானியம்மாள் தன் கணவனுக்கோ, வளர்ந்த பிள்ளைகளுக்கோ அவளால் மனமாற்றம் ஏற்பட்டு விடுமோ என்று பயந்து, எங்கு சென்றாலும் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். இது மிக வருத்தமளிக்கும் விஷயம்.

தொகுப்பு : மாலதி சந்திரசேகரன்



"என்னோட காதலர் ரொம்ப மோசம்டி!"

"ஏன் என்னாச்சு?"

"நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன்னு சொன்னதுக்கு, 'ஆசையே துன்பத்துக்கு காரணம்'னு புத்தரே சொல்லியிருக்காரு தெரியுமில்லன்னுட்டுப் போயிட்டாரு...!"

– உ. ர. சங்கர்



"நடிகை நர்மதாஸ்ரீயோட தாலி நிலைக்கணும்னு தினமும் வந்து பிரார்த்தனை பண்றீங்களே, என்னங்க விஷயம்?"

"நான்தான் அவங்களோட புருஷன்... என்னை 'டைவர்ஸ்' பண்ணிடக்கூடாதுன்னுதான் அப்படிப் பிரார்த்தனை பண்றேன்!"

– சீர்காழி. வி. ரேவதி



"புருசனோட தனிக் குடித்தனம் போறே, அடிக்கடி கடிதம் போடுடி!"

"நான் புருசனை 'அடிச்சா' போடணுமா...? இல்லை புருசன் என்னை அடிச்சா கடிதம் எழுதணுமா அம்மா?"

– ஜூனியர் தேஜ்

தியாக பூமி

ஸ்திரீகள் வண்டியில் அன்று அதிகம் பேரில்லை. மொத்தம் ஐந்தாறு பேர்தான் இருந்தார்கள். ஆகையால் இடம் தாராளமாயிருந்தது. சாவித்திரி தனியாக ஒரு மூலையில் போய் பெட்டியை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவளுக்கு எதிர்ப் பெஞ்சில் உட்கார்ந்திருந்த ஒரு ஸ்திரீ, சற்று நேரத்துக்கெல்லாம் சாவித்திரியிடம் பேச்சுக் கொடுத்தாள். அவள் யார், எந்த ஊர், எங்கிருந்து எங்கே போகிறாள், ஏன் தனியாகப் போகிறாள் என்றெல்லாம் விசாரித்தாள். சாவித்திரி சுருக்கமாகப் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள். "ஐயோ பாவம்! பிள்ளைத்தாச்சிப் பெண்ணைத் தனியா அனுப்பிச்சுட்டாங்களே!" என்று அந்த ஸ்திரீ ரொம்பவும் பரிதாபப்பட்டாள். பிறகு, "கல்கத்தாவிலிருந்து கண்ணை முழிச்சுண்டு வந்திருக்கே! பொட்டியை எடுத்துக் கீழே வைச்சுட்டுப் படுத்துக்கோ, அம்மா!" என்றாள்.

சாவித்திரிக்கும் தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. பெட்டியைத் திறந்து ஒரு புடவையை எடுத்துத் தலைமாட்டில் வைத்துக் கொண்டு படுத்தாள். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் தூங்கிவிட்டாள்.

சாவித்திரி கனவு கண்டாள். அவளுக்குக் குழந்தை பிறந்துவிட்டது. குழந்தை, மனுஷ்யக் குழந்தை மாதிரியே இல்லை. தெய்வலோகத்துக் குழந்தை மாதிரி இருக்கிறது. அதன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்; பசி தாகம் ஒன்றும் தெரியாது. அது சிரிக்கிற அழகைத்தான் என்னவென்று சொல்வது! - சாவித்திரி குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள். அவளைச் சுற்றிலும் எல்லாரும் வந்து நின்று கொண்டிருக்கிறார்கள். அப்பா, சித்தி, பாட்டி, மாமனார், மாமியார் எல்லாருந்தான். மாமியாருக்குப் பின்னால் இவரும் சங்கோசப்பட்டுக் கொண்டு நிற்கிறார். எல்லாரும் குழந்தையை எடுத்துக் கொள்ள ஆவலாயிருக்கிறார்கள். "சித்தெக் கொடுடி குழந்தையை! பாத்துட்டுக் கொடுத்துடறேன்" என்று தங்கம்மாள் கெஞ்சுகிறாள். "நான் உன் குழந்தையை ஒண்ணும் பண்ணிட மாட்டேண்டீ; தேஞ்சு போயிடாதடி, கொடுடி" என்கிறாள் மங்களம்.

அவர்களைப் பார்த்துச் சாவித்திரி, "நீங்கள்ளாம் என் குழந்தையைப் பார்க்க வேண்டாம். என்னை என்னபாடு படுத்தி வச்சயள்? இப்ப மாத்திரம் குழந்தையை எடுத்துக்கிறதற்கு வந்துட்டேளாக்கும்? எங்க அப்பா கிட்ட மாத்திரந்தான் கொடுப்பேன். வேறொத்தரும் என் குழந்தையைப் பார்க்க வேண்டாம். போங்கோ!" என்கிறாள்.

சட்டென்று சாவித்திரி கண்ணை விழித்துக் கொண்டாள். "மாயவரம்! மாயவரம்!" என்று போர்ட்டர் கூவுவது கேட்டது. 'மாயவரம் வந்துட்டதா? இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் புதுச் சத்திரம் வந்துடுமே?' என்று எண்ணிச் சாவித்திரி எழுந்து உட்கார்ந்து, தலைமாட்டில் வைத்திருந்த புடவையை எடுத்துப் பெட்டிக்குள் வைக்கப் போனாள். பெட்டியைக் காணவில்லை!

எதிரிலிருந்த ஸ்திரீயையும் காணவில்லை. அந்தண்டைப் பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்து, "ஏனம்மா! இங்கேயிருந்த என் பெட்டியைக் காணோமே? யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டாள். அவர்களில் ஒருத்தி, "ஐயையோ! உன் பெட்டியா அது? உன் எதிரிலே உட்கார்ந்திருந்தாளே. அந்த அம்மா அதை எடுத்துண்டு சிதம்பரத்திலேயே இறங்கிவிட்டாளே!" என்றாள்.

29. "அப்பா எங்கே?"

சாவித்திரி அதிகாலையில் புதுச் சத்திரம் ஸ்டேஷனில் வந்து இறங்கினாள். இன்னும் பனி பெய்து கொண்டிருந்தபடியால் ஸ்டேஷன் கட்டடம், அதற்கப்பாலிருந்த சாலை, தூங்குமூஞ்சி மரங்கள் எல்லாம் மங்கலாகக் காணப்பட்டன.

தன்னை அழைத்துப் போக அப்பா வந்திருக்கிறாரோ என்று ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தாள். பிளாட்பாரத்தில் ஒரு


அமரர் கல்கி

பிராணியும் இல்லை. வெளியே ஒரு வண்டி மட்டும் கிடந்தது. அதி காலையானதால் ஒரு வேளை நல்லானை மட்டும் வண்டியுடன் அனுப்பியிருப்பார் என்று சாவித்திரி எண்ணினாள்.

நல்ல வேளையாக, அவளிடமிருந்த கொஞ்சம் பணத்தையும் டிக்கட்டையும் பெட்டியில் வைக்காமல் ஒரு பர்ஸில் போட்டு இடுப்பில் செருகிக் கொண்டிருந்தாள். ஆகையால் அவை கெட்டுப் போகாமல் பிழைத்தன.

சாவித்திரி, டிக்கட்டை எடுத்துக் கொடுத்தபோது, தனக்குத் தெரிந்த பழைய ஸ்டேஷன் மாஸ்டரோ என்று ஒரு க்ஷணம் உற்றுப் பார்த்தாள். இல்லை. இவர் யாரோ புதுசு; மீசையும் கிசையுமாயிருக்கிறார். சாவித்திரி வெளியில் போன பிறகு அவர் டிக்கட் குமாஸ்தாவிடம் ''வர வரப் பெண்பிள்ளைகள் எல்லாம் துணிந்து போய் விட்டார்கள்! கொஞ்ச நாள் போனால், நாமெல்லாம் சேலை கட்டிக்க வேண்டியதுதான்'' என்றார்.

அதற்கு டிக்கட் குமாஸ்தா, ''ஆமாம், ஸார்! ஆனால் குழந்தை பெறுகிற காரியம் மட்டும் அவர்கள்தானே செய்ய வேண்டும் போலிருக்கு!'' என்று நகைச்சுவையுடன் பதில் அளித்தார்.



இதைக் கேட்டுக் கொண்டே வெளியில் போன சாவித்திரி, அங்கே கிடந்த ஒரே வண்டியின் அருகில் சென்றாள். வண்டிக்காரன், ''எங்கே அம்மா, போகணும்? வண்டி பூட்டட்டுமா?'' என்றான். அவன் நல்லான் இல்லை. வண்டி, நெடுங்கரை வண்டியும் இல்லை. அது ஓர் ஒற்றை மாட்டு வண்டி.

''ஏனப்பா, நெடுங்கரையிலிருந்து வண்டி ஒன்றும் வர்றலையா?'' என்று சாவித்திரி கேட்டாள்.

''இன்னிக்கு வர்றலீங்க; ஒரு வேளை நாளைக்கு வருமோ, என்னமோ!'' என்றான் வண்டிக்காரன்.

சாவித்திரிக்கு ஆத்திரமும் அழுகையுமாய் வந்தது. அப்பாவா இப்படி அலட்சியமாயிருக்கிறார்? நம்பவே முடியவில்லையே? ஒரு வேளை அவருக்கு ஏதாவது ஆபத்தாயிருக்குமோ? இல்லாமற் போனால் இப்படி இருக்கமாட்டாரே?

வண்டியைப் பூட்டச் சொல்லி, சாவித்திரி அதில் ஏறிக் கொண்டு நெடுங்

தியாக பூமி - முன்கதை

நெடுங்கரை கிராமத்தில் வசிக்கும் சம்பு சாஸ்திரி, தம் மகள் சாவித்திரிக்குப் பல இடங்களில் தேடி, ஸ்ரீதரன் என்கிற கல்கத்தா வரனுக்குக் கடைசியில் மணமுடிக்கிறார். சாஸ்திரியின் இளையதாரமான மங்களத்தால் கொடுமைக்கு ஆளாகப்பட்ட சாவித்திரி, திருமணமாகியும் பலநாள் காத்திருந்துதான் புருஷனோடு வாழக் கல்கத்தா செல்கிறாள். இடையே, ஒரு பெருமழை நாளில் சேரி ஜனங்களுக்கு அக்ரஹாரத்தில் தங்க இடமளித்ததால் ஊரார் சம்பு சாஸ்திரியை ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுகிறார்கள். வெள்ளத்தால் சாஸ்திரியின் வயல்களில் மணலடித்து வெகு நஷ்டமாகி விடுகிறது. இவற்றுடன் மகள் புக்ககம் போய் விட்டதால் ஏற்பட்ட தனிமையினாலும் மனம் கலந்து, சம்பு சாஸ்திரி ஊரை விட்டே புறப்படத் தீர்மானிக்கிறார். பட்டணம் போய், பாட்டு சொல்லிக் கொடுத்துச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் மனைவியைப் பிறந்தகம் அனுப்பிவிட்டுக் கிளம்புகிறார்.

கல்கத்தாவில் ஏகக் கனவுகளோடு வாழச் செல்லும் சாவித்திரிக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. புருஷன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருப்பது தெரிகிறது. மாமியார் அவளை மிகவும் கொடுமைப்படுத்துகிறாள். இந்நிலையில் அவள் கருவுறுகிறாள். மாமனார் கருணை கொண்டு அவளைச் சென்னை செல்லும் ஒரு குடும்பத்தின் துணையுடன் ரயிலேற்றி அனுப்பிவிடுகிறார். நிறைமாத கர்ப்பிணியாக, தந்தையைப் பார்த்தாவது ஆறுதல் பெறலாமென்ற ஆவலுடன் சாவித்திரி நெடுங்கரைக்குப் பயணமாகிறாள்.

இனி.....

கரைக்குப் பிரயாணமானாள்.

வண்டி நெடுங்கரை அக்கிரகாரத்துக்குள் நுழைந்த போது, சாவித்திரிக்கு நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. நெடுங்கரையை மறுபடி பார்க்க வேண்டுமென்று அவள் எவ்வளவு ஆவல் கொண்டிருந்தாள்? புறப்படும்போது எவ்வளவு குதூகலமாயிருந்தாள்? அந்தக் குதூகலம் இப்போது எங்கே போயிற்று? நெடுங்கரைக்கு வந்ததில் ஏன் கொஞ்சங்கூடச் சந்தோஷம் உண்டாகவில்லை?

சாவித்திரியின் கண்களுக்கு நெடுங்கரை அக்கிரகாரம் இப்போது பழைய தோற்றம் கொண்டிருக்கவில்லை. வீடுகள், தென்னை மரங்கள், கோவில், மண்டபம் எல்லாம் முன் மாதிரியேதான் இருந்தன. ஆனாலும், வீதிமட்டும் களை இழந்து காணப்பட்டது.

வீடு நெருங்க நெருங்க அவளுடைய மனம் அதிகமாகப் பதைபதைத்தது. அப்பாவை எப்படிப் பார்ப்பது, என்ன சொல்வது? சித்தியின் முகத்தில்தான் எப்படி விழிப்பது? ஒரு வேளை ஆத்தில் பாட்டியும் இருப்பாளோ? இருந்தால், அவள் ஏதாவது வெடுக்கென்று சொல்வாளோ? அப்புறம், ஊரார்தான் என்ன சொல்வார்கள்? என்ன நினைத்துக் கொள்வார்கள்? தெருவில் பந்து விளையாடிக் கொண்டிருந்த பசங்களை ஏறிட்டுப் பார்க்கக்கூடச் சாவித்திரிக்கு வெட்கமாயிருந்தது.

இதோ, வீடு வந்துவிட்டது. "நிறுத்தப்பா!" என்றாள் சாவித்திரி. வண்டி நின்றது. தன்னுணர்ச்சி இல்லாமலே சாவித்திரி வண்டியிலிருந்து இறங்கினாள். சற்று விரைவாகவே வீட்டை நோக்கிச் சென்றாள்.

வாசற் கதவு பூட்டியிருப்பதைப் பார்த்ததும், ஒரு நிமிஷம் சாவித்திரிக்கு இருதயமே நின்றுவிட்டது போல் தோன்றிற்று! அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

நெடுங்கரை தன்னை எப்படி வரவேற்கும் என்பது பற்றி சாவித்திரி என்னவெல்லமோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். ஆனால், இந்த மாதிரி வரவேற்பை அவள் எதிர் பார்க்கவேயில்லை. வீட்டுக் கதவு பூட்டியிருக்குமென்று அவள் நினைக்கவேயில்லை.

சாவித்திரிக்கு யோசனை செய்யும் சக்தி வருவதற்குச் சில நிமிஷம் பிடித்தது. ஒருவரும் ஊரில் இல்லை போல் இருக்கிறது. ஆனால், எங்கே போயிருப்பார்கள்? அப்பா ஊரில் இல்லாததனால்தான் தன்னுடைய கடிதங்களுக்குப் பதில் இல்லையோ?

இந்தச் சமயத்தில் வீதியில் பசங்கள் விளையாடிக் கொண்டிருந்த பந்து சாவித்திரிக்கு அருகில் வந்து விழுந்தது. பந்தைத் தொடர்ந்து ஒரு பையன் ஓடி வந்தான். அவனைப் பார்த்துச் சாவித்திரி, "ஏண்டாப்பா குழந்தை, இந்தாத்து மாமா எல்லாரும் எங்கே?" என்று கேட்டாள். அந்தப் பையன் பந்து விளையாட்டின் சுவாரஸ்யத்தில், "எனக்குத் தெரியாது, அம்மாமி! அதோ தீக்ஷிதர் மாமா இருக்கார், கேளுங்கோ!" என்று சொல்லி, பந்தை வீசி எறிந்து, "அடே, பிடிடா!" என்று கூவிக் கொண்டே ஓடி விட்டான்.

அப்போது அறுவடைக் காலமாதலால், சாவித்திரி வந்த நேரத்திற்கு அக்கிரகாரத்தில் புருஷர்கள் எல்லாரும் வயல் வெளிக்குச் சென்றிருந்தார்கள். தீக்ஷிதருக்கு அந்த உபத்திரவம் ஒன்றும் இல்லாதபடியால் அவர் மட்டும் வீட்டில் இருந்தார். வாசலில் வண்டிச் சத்தத்தைக் கேட்டு வெளியில் வந்தார். சாவித்திரி தனியாக வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும், அவருக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று. 'இது என்ன கூத்து?' என்று எண்ணிக் கொண்டே,

இந்த வேடிக்கையைப் பூராவும் பார்த்து விடுவதற்காக அவருடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, கையில் ஜப மாலையுடன் ஜபம் செய்யத் தொடங்கினார்.

சாவித்திரி கையில் ஒரு கொசுவிய புடைவையுடன் மட்டும் இறங்கிப் போனது அவருக்கு இன்னும் வியப்பை யளித்தது. அவள் இருந்த கோலமோ சொல்ல வேண்டியதில்லை. 'சரிதான், சரிதான். நாம் நினைத்தபடிதான் ஆயிற்று. இந்தப் பெண் புக்ககத்திலே இருந்து பேர் சொல்லாது என்று நாம் அப்போதே சொல்லவில்லையா? அது பலிக்கப் போச்சு. ஏதோ கெட்ட நடவடிக்கையிலே இறங்கியிருக்க வேணும். இவளாகத்தான் கிளம்பி விட்டாளோ, அவாளேதான் அடிச்சு விரட்டிட்டாளோ, தெரியலை. இதையெல்லாம் ஒரு மாதிரி தெரிஞ்சுண்டுதான், சம்பு சாஸ்திரி ரொம்ப நாளாய்ப் பொண்ணு எங்கிற பேச்சை எடுக்காதிருந்தான் போலிருக்கு....' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார் தீக்ஷிதர்.

வீட்டின் கதவு பூட்டியிருப்பதைப் பார்த்துவிட்டு சாவித்திரி திரும்பியபோது அவள் முகத்தில் தோன்றிய ஏமாற்றமும் துக்கமும் தீக்ஷிதருக்கு மிக்க மகிழ்ச்சியளித்தன. 'வேண்டும்! வாயாடிக் கழுதைக்கு நன்றாய் வேண்டும்' என்று நினைத்துக் கொண்டார்.

இதற்குள் சாவித்திரி வீதியைக் கடந்து அவர் இருந்த இடத்துக்கு வந்தாள். "தீக்ஷிதர் மாமா, எங்காம் ஏன் பூட்டிக் கிடக்கு? எங்க அப்பா எல்லாரும் எங்கே?" என்று கேட்டாள்.

"உங்கப்பன் எங்கே போனானோ, நான் என்னத்தைக் கண்டேன்? எங்கிட்டச் சொல்லிண்டா போறான்?" என்றார் தீக்ஷிதர்.

சாவித்திரிக்கு அழுகை வரும்போல் இருந்தது. அப்பா எங்கே என்பதை எப்படியாவது தெரிந்து கொள்ள அவள் மனம் துடிதுடித்தது தீக்ஷிதருக்கும் தெரியும். ஆனால், சொல்ல மறுக்கிறார் என்பதும் ஒருவாறு தெரிந்தது.

அவளுடைய ஆங்காரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு, பரிதாபமான குரலில், "தீக்ஷிதர் மாமா! எங்கப்பாமேலே உங்களுக்கு ஏதாவது கோபம் இருந்தாலும் எனக்காவது சொல்லப்படாதா?" என்றாள். அப்புறம், இன்னொரு பயங்கரமான எண்ணம் தோன்றவே, "எங்கப்பாவுக்கு... உடம்பு கிடம்பு... ஒன்றுமில்லையே?" என்று கேட்டாள்.

"அவனுக்கும் எனக்கும் உடம்புக்கு என்ன வரப்போகிறது? போன சனிக்கிழமை கூட இருந்தான் கொட்டறாப்புலி மாதிரி. சென்னைப் பட்டணத்துக்குப் போறதாகச் சொல்லிண்டிருந்தான். ஒரு வேளை அங்கேதான் போயிருப்பான்."



"என்னது, உனக்குக் கிடைச்ச வேலை பறிபோகறதுக்கு உங்க தாத்தாவே காரணமாயிட்டாரா?"

"ஆமாம்! அவருடைய சீனியாரிட்டியை மீறி எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலேர்ந்து எனக்குக் கார்டு வந்ததும் கோவிச்சுக்கிட்டுக் கேஸ் போட்டுட்டார்!"

– வேதபுரி எஸ். ரமேஷ்.

"சென்னைப் பட்டணத்துக்கா? என்னத்துக்கு மாமா?"

"பாட்டுச் சொல்லிக் கொடுத்து, பணம் சம்பாதிச்சுண்டு வரப்போறானாம், பணம்!"

உடனே சாவித்திரிக்குப் பழைய ஞாபகம் உண்டாயிற்று. அப்பா ஏற்கெனவே கடன்பட்டிருந்தது, மறுபடியும் தன்னைக் கல்கத்தாவுக்குக் கூட்டி அனுப்பப் பணம் வாங்கிக் கொண்டு வந்தது, அப்போதே நிலத்தை விற்றிருப்பாரோ என்று தான் சந்தேகித்தது - எல்லாம் நினைவுக்கு வந்தன. ஆனால் இதையெல்லாம் பற்றி அவரைக் கேட்பதற்கு மனம் வராமல், "எங்க சித்தி? - அவ கூடவா பட்டணத்துக்குப் போயிருக்கா?" என்று கேட்டாள்.

"உங்க சித்தி - பிறந்தாத்துக்குப் போயிட்டா, பிறந்தாத்துக்கு" என்று சொல்லிவிட்டு, தீக்ஷிதர் எழுந்திருந்தார்.

இவ்வளவு நேரமும் வாசலில் வண்டி நின்று கொண்டிருந்தது. தான் சவாரி ஏற்றிக் கொண்டு வந்த அம்மாளின் நிலைமையைப் பார்த்ததும், சத்தம் வருமோ வராதோ என்ற சந்தேகம் வண்டிக்காரனுக்கு உண்டாகி விட்டது.

"என்னம்மா, எத்தனை நேரம் அம்மா காத்திருக்கிறது?" என்று அவன் கேட்டான்.

சாவித்திரி வண்டியை நோக்கி நடந்தாள். சட்டென்று மறுபடியும் திரும்பி வந்து, வீட்டுக்குள் போய்க் கொண்டிருந்த தீக்ஷிதரிடம், "மாமா, பட்டணத்திலே எங்கப்பா விலாசம் தெரியுமா?" என்று கேட்டாள்.

"விலாசம் யார் கண்டா? எங்கிட்டச் சொல்லிட்டா போயிருக்கான்? அங்கே போய், பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரி வீடுன்னு விசாரிச்சா தானே தெரியறது!"



''கல்யாணமாகி நானும், என் வீட்டுக்காரியும் ரெண்டு வருஷம் சந்தோஷமா இருந்தோம்....!''

''அப்புறம்?''

''அப்புறம் எங்க சண்டையைப் பார்த்து மத்தவங்க சந்தோஷமா இருக்காங்க!''

– வி.சி. கிருஷ்ணரத்தினம்.

என்று சொல்லி விட்டுத் தீக்ஷிதர் உள்ளே போய்ச் சேர்ந்தார்.

இன்னும் கொஞ்ச நேரம் அவளிடம் பேச்சுக் கொடுத்தால், அப்படி இப்படி என்று உறவு கொண்டாடிக் கொண்டு சாப்பாட்டுக்கு உட்கார்ந்துவிடப் போகிறாளே என்று அவருக்குப் பயம். ஒரு வேளைச் சாப்பாடு போடுவது ஒன்றும் பிரமாதமில்லை; வாஸ்தவந்தான். ஆனால் இந்த மாதிரி சாதி கெட்டு, நெறி கெட்டு ஓடி வந்திருப்பவளுக்குச் சாப்பாடு எப்படிப் போடுவது? போட்டுவிட்டு அந்தப் பாவத்தை எங்கே கொண்டு போய்த் தொலைப்பது?

சாவித்திரி மறுபடியும் வண்டியில் ஏறிக் கொண்டாள். வண்டி திரும்பி வந்த வழியோடு போயிற்று. இதற்குள் சமாசாரம் எப்படியோ பரவி, அக்கிரகாரத்தில் பல வீடுகளில் ஸ்திரீகள் வாசற்படியண்டை நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களில் யாரும் வண்டியினருகில் வந்து விசாரிக்கவில்லை. இதுவும் ஒரு காலமா என்று ஆச்சரியப்படும் மனோபாவம் அவர்களுடைய முகத்தில் பிரதிபலித்தது.

வண்டி அக்கிரகாரத்தைத் தாண்டிச் சென்று, அப்பால் இருந்த குடியானத் தெருவின் ஒரு முனை வழியாகப் போயிற்று. சாவித்திரிக்கு அப்போது நல்லானின் ஞாபகம் வந்தது; வண்டியை நிறுத்தச் சொல்லி, அங்கே நின்ற ஒரு குடியானவ ஸ்திரீயிடம் ''பட்டிக்கார நல்லான் ஊரிலேயிருக்கானா?'' என்று கேட்டாள். அந்த ஸ்திரீ, ''இது யாரு? நம்ப சாஸ்திரி ஐயா பொண்ணு சாவித்திரி மாதிரியில்லே யிருக்கு?'' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள். இதைக் கேட்டு இன்னும் சில ஸ்திரீகளும் வண்டியின் பக்கம் வந்தார்கள். மறுபடியும் சாவித்திரி, நல்லானைப் பற்றிக் கேட்டாள். ''அவரு அப்பவே ஊரை விட்டுப் போய்ட்டாரே, அம்மா? உனக்குத் தெரியாதா? சாஸ்திரி ஐயா நிலத்தை வித்தாரோ, இல்லையோ, இந்த ஊரிலே இனிமே இருக்கமாட்டேன்னு போய்ட்டாரு. இப்ப சாவடிக் குப்பத்திலே, அவரு மச்சானோடேயல்ல இருக்காரு?'' என்றாள் அந்தக் குடியானவ ஸ்திரீ.

சாவித்திரிக்கு இப்போது நிலைமை ஒருவாறு தெரிந்தது. அப்பா நிலத்தை விற்று விட்டார். வேறு வருமானமும் இல்லை. ஆகையால், தன்னை வந்து அழைத்து வரக் கையில் பணம் இல்லாமையால்தான் வரவில்லை. சங்கோசப்பட்டுக் கொண்டு, போட்ட கடுதாசிக்குப் பதில் போடாமல் இருந்து விட்டார். இப்போது பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கப் பட்டணத்துக்குப் போயிருக்கிறார். அப்பா! அப்பா! ஒரு வேளை என்னை அழைத்து வருவதற்குத்தான் பணம் சம்பாதிக்கப் புறப் பட்டீர்களோ?

தகப்பனாரைப் பார்க்கும் ஆவல் சாவித் திரிக்கு இன்னும் அதிகம் ஆயிற்று. ''வண்டியை ஓட்டப்பா!'' என்றாள்.

குடியானவ ஸ்திரீகள் கொஞ்ச தூரம் வண்டி பின்னால் நடந்து கொண்டே, ''ஏம்மா, எங்கே வந்தே? இப்படித் தனியா வந்துட்டுப் போறயே? பாவம்! அப்பா ஊரிலே இருக்காருன்னு நினைச்சுட்டு வந்தயாக்கும்! பட்டினியாப் போறேபோல் இருக்கே?''

''ஆனாலும் இந்தப் பாப்பாரச் சாதியைப் போலே பார்த்ததில்லை. வந்த பொண்ணைச் சாப்பிட்டயான்னு கேக்காத கூட அனுப்பிச்சுட்டாங்களே?''

''கொஞ்சம் இறங்கி ஒரு குவளை மோராவது சாப்பிட்டுட்டுப் போயேம்மா!'' என்று இந்த மாதிரி சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

சாவித்திரி, ''ஒன்றும் வேண்டாம், அம்மா! எனக்குப் பசிக்கவே இல்லை. ஊருக்குப் போய்ச் சாப்பிட்டுக்கிறேன். எங்க அப்பாவை அவசரமாய்ப் பார்க்கணும். அதுக்காகத்தான் போறேன்'' என்று சொல்லி, அவர்களை திருப்தி செய்தாள்.

மேலே வண்டி போன போது, ''இந்தக் குடியானவ ஸ்திரீகள் சொன்னது எவ்வளவு உண்மை! இவர்களுக்கு இருக்கிற ஈவிரக்கம், பச்சாதாபம் அக்கிரகாரத்திலே யாருக்கும் இல்லையே? யாராவது வந்து, 'தீர்த்தம் வேண்டுமா?' என்று கூடக் கேட்கவில்லையே?'' என்று சாவித்திரி எண்ணமிட்டாள்.

அதே சமயத்தில் அக்கிரகாரத்து ஸ்திரீகள் ஒருவருக்கொருவர், ''ஏண்டி, அம்மா! அவள் பெரிய மனுஷியோல்லியோ! பெரிய இடத்திலே பிறந்தவள்; பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட்டவள். நம்மை எல்லாம் இலட்சியம் பண்ணி வண்டியை விட்டிறங்கி வந்து ஒரு வார்த்தை பேசுவளோ?'' என்று பேசிக் கொண்டார்கள்.

(தொடரும்)

சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

Fully Computerised A/C Office

(கம்பெனி சட்டத்தின் பதிவு எண் : 18&24962)
பதிவு அலுவலகம் :- 8, கற்பகாம்பாள் நகர், லஸ்
மைலாப்பூர், சென்னை - 600 004 போன் : 4993241/4990953
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003
போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8:30 முதல் மாலை 5:30 வரை
ஞாயிறு காலை 8:30 முதல் பகல் 12:30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 300/- வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்.

1. *Prompt and satisfying service*
2. *Efficient Management*
3. *Financial strength backed by a prosperous and reputed group*
4. *Loans secured by gold and immovable assets.*

இயக்குநர்கள் :

திரு T. V. சீனிவாசன்
திரு P. K. சந்திரசேகரன்
திரு ப்ரவின் கோவிந்தராவ்
திருமதி P. C. சுந்தரவதனி
திரு K. G. கிருஷ்ணன்
திரு P. K. C. ரமேஷ்
திரு D. தனுஷ்கோடி
திரு P. C. பாஸ்கர்
திரு K. R. நிரஞ்ஜன் குமார்
திரு P. C. ஷியாம் சுந்தர்

OUR VALUED DEPOSITORS



Mr. D. B. SAXENA
Past President
The Institute of
Company Secretaries
of India



'இன்னிசைப் பேரரசு'
T. V. SANKARANARAYANAN

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும்

புயல்

முத்துக்குமார் இன்னும் வரவில்லை.

சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு அன்று தான் சற்று சூரிய வெளிச்சம் எட்டிப் பார்த்தது. மலையெல்லாம் பரவியிருந்த ஈரத்தின் ஜில்லிப்பு இனி சற்று ஒதுங்கலாம் என்றிருந்தது. பாதத்தைக் குடைந்த குளிரின் மூர்க்கத்தை வெயிலில் காட்டி இனி விரட்டலாம்.

கண்ணம்மா அந்தப் பெட்டிக் கடை வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தாள்.

இருபத்தி நாலு மணி நேரமும் ஜே, ஜே என்று கொழிக்கும் குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலை வெறிச்சோடிக் கிடந்தது. இப்போதெல்லாம் எல்லா வாகனங்களுமே கோத்தகிரி வழியாக சுற்றிக் கொண்டு போகின்றன என்பதை நேற்றுத்தான் அறிந்திருந்தாள்.

வரிசை வரிசையாக மேட்டுப்பாளையத்திலிருந்து மிலிட்டரி வண்டிகளும் ஆம்புலன்சுகளும் தீயணைப்பு வண்டிகளும் வருவதும், வந்து பத்தாவது கொண்டை ஊசி வளைவோடு நின்று விடுவதும் அவைகள் மீட்புப்பணிக்காக அங்கே வந்திருப்பதும் கேள்விப்பட்டிருந்தாள்.

விபத்தின் உக்கிரத்தை ரத்தினம் விவரித்த போது அரண்டே விட்டாள். மேலே மல்லனூர் எஸ்டேட்டிலிருந்து புறப்பட்ட இடி நீர் வீழ்ச்சியும் ராட்சசப் பாறாங்கல்லும் அடாத மழையில் கீழ் நோக்கி இறங்கி சரிந்து மூன்று கொண்டை ஊசி வளைவுச் சாலைகளையும் பிரயாணிகள் பஸ்கள், லாரி, மாருதி, ஆட்டோக்களையும் ஒரேயடியாய் அள்ளிக் கொண்டு கீழே ஓடியதிலிருந்தே கண்ணம்மாவின் பிழைப்பிலும் மண் விழுந்தது.

கீழே இருந்து மேலே வரும் வாகனங்களோ, மேலே இருந்து கீழே வரும் வாகனங்களோ - இளைப்பாறுதலுக்கும் இயற்கை உபாதைகளுக்கும் பிரயாணிகளுக்கு ஒரு வேடந்தாங்கலாய் இருந்தது பரலியாறு பஸ் நிறுத்தம்.

அங்கே கண்ணம்மாவின் பெட்டிக் கடையைத் தவிர இன்னும் ஏழெட்டுக் கடைகள் இருந்தன. எல்லாம் ஓட்டல், டீக்கடை, வெற்றிலை பாக்குப் பெட்டிக்கடைகள். அந்த வழியே வரும் பிரயாணிகளை நம்பி சுமார் நூற்றைம்பது பேர் பிழைத்துக் கொண்டிருந்தனர். இந்த நிலச்சரிவுக்குப் பின்பு அந்தப் பிழைப்பு சுத்தமாய் அடிபட்டுப் போய் விட்டது.

முத்துக்குமார் - அவள் கணவன் முந்தா நாளே வந்து விடுவதாகச் சொல்லி விட்டுத் தான் மைசூர் அக்கா வீட்டுக்குப் போனான். அவனையும் இன்னும் காணோம்.

கடைக்கு வெளியே ரத்தினம் குரல் கேட்டது. ராணியைத் தொட்டிலில் போட்டு விட்டு கண்ணம்மா வெளியே வந்தாள்.

''ஏன்டீ.... கண்ணம்மா... தூக்கமா?'' என்றாள் ரத்தினம்.

''இந்த மலங்காட்டுல தூக்கம் ஒரு கேடா....'' கூந்தலை அள்ளி முடிபோட்டு வந்தாள்.

''ஆமா, உன் வீட்டுக்காரரு இன்னும் வந்து சேர்லீயா. எங்கே ஆப்ட்டுக்கிட்டு இருக்குதோ. இந்த மழைக்காலத்துலதான் ஓம் புருஷன் வெளியூர் போகணுமா? கைக்கொழந்தையை வச்சுக்கிட்டு தனியாவேற இருக்கறே... ராத்திரிக்கு வந்து தொணைக்குப் படுத்துக் கட்டுமா கண்ணம்மா?'' வாஞ் சையோடுதான் ரத்தினம் கேட்டாள்.

முத்துக்குமார் இல்லாமல் கடந்த ஒரு வாரமாகத் தனியாகப் படுத்து சரியான தூக்கமே இல்லாமலிருந்த கண்ணம்மா சரி சொன்னாள். ''ஒங்கம்மா விடுமா...?''

''எப்படியாச்சும் வந்துர்ரேன்....''

ரத்தினம், பக்கத்தில் இன்னொரு பெட்டிக்கடைக்காரி. விதவைத்தாயோடும் தம்பியோடும் கடை வருமானத் தில் இவளைப் போலவே வயிறு கழுவி வருபவள். இன்னும் கல்யாணம் ஆகாமல் இருபத்தைந்து ஆகி இருந்தாள்.

ரத்தினம் போன பின்புதான் தனது கணவன் முத்துக்குமாரைப் பற்றிய நினைவுக்கு வந்தாள் கண்ணம்மா. மைசூரை



விட்டுப் புறப்பட்டிருப்பாரா? இரண்டே நாளில் வந்து விடுவதாய்ச் சொல்லியிருந் தாரே... ஒருவேளை அதே மாதிரி கூட ஊர் வந்து - ஊட்டி வந்து -

கண்ணம்மாவுக்குத் 'திக்'கென்றது.

முந்தாநாள் அதிகாலையில் தானே அந்த நிலச்சரிவு நடந்தது? அதில் தானே ஊட்டியிலிருந்து வந்த இரண்டு சி.டி.சி. பஸ்கள் பிரயாணிகளோடு மலையோடு உருண்டு காணாமலேயே போய் விட்டன?

ஜில்லிட்ட அந்த சூழலிலும் வேர்த்துக் கொட்டியது கண்ணம்மாவுக்கு. ஓடி உள்ளே வந்து முருகன் படத்தைக் கண் மலங்கிப் பார்த்தாள். கன்னத்தில் நீர் வழிந் தோடக் கும்பிட்டாள். எதிர்பாராமல் குழந்தை வீறிட்டாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு தொட்டிலை ஆட்ட ஆரம்பித்தாள்.

இரவு ரத்தினம் வந்து சேரும் போது சிம்னியை ஏற்றி வைத்திருந்தாள் கண் ணம்மா.

''ரத்னம்... இனி கரண்ட்டாக்கம் எப்ப வரும்?''

''யாருக்குத் தெரியும்? கரண்ட் கம்ப மெல்லாம் ரொம்ப தூரத்துக்கு விழுந்து கெடக்கு... மரப்பாலத்துக்குப் பக்கமா ரெயிலு தண்டவாளங்கூட திருகிக் கிட்டுத் தொங்குதுடீ....''

''ஏர்பின் ரோடெல்லாம் சரி செய்ய றதுக்கு எப்படியும் ஆறுமாசம் ஆகு மில்லே....''

ரத்தினம் அந்த நிலையிலேயே 'உம்' கொட்டினாள்.

''அப்போ இங்கே இருக்குற ஏழெட் டுக் குடும்பத்துக்கும் பொழப்பு என்னடீ? கம்மா கடையைத் தொறந்து வச்சு ஒக்காந் துக்கிட்டிருந்தா வயித்துக்கு என்னா பண்றது?''

ரத்தினம் கால் களைக் கட்டிக் கொண்டு அவளை ஏறிட் டாள்.

''எல்லார்க்கும் இங்கே அதான் கவலை கண்ணம்மா. நாளை, நாளைக் கழிக்க ஒவ்வொரு குடும்பமா காலி யாயிரும்.. அவரவர் ஊர் தேசத்துக்குப் போறாங்க. என் தம்பி கூட நாளைக்கு ஏணிக்கல் எஸ்டேட் போயி டீ பறிக்கிற வேலை கேட்டுட்டுவர் லாம்னு சொல்லிக் கிட்டிருக்கான்....''

அதே நேரம் வெளியே... ஒய்ங்... ஒய்ங்.... என்ற ஓசையோடு ஒரு வேன் சாலையில் போனது.

கண்ணம்மா திகில் கிளம்பப் பார்த்

ஜமாலியா



"இந்தியா விலேயே 1991 - 92ம் ஆண்டில் மிக அதிக வருமான வரி செலுத்தியிருக்கும் நபர் யார் தெரியுமா? ஆடியோ கேஸட் தயாரிப்பில் இன்று இந்தியாவில் நம்பர் ஒன்றாக விளங்கும் சூப்பர் கேஸட் நிறுவன அதிபர் குல்ஷன் குமார்தான். இதிலிருந்து இவருக்குக் கிடைத்த தனி நபர் வருமானம் 3.94 கோடி. அதற்கு இவர் செலுத் திய வருமானவரி மட்டும், ரூ. 2.22 கோடி! அதே ஆண்டில் தமது சொத்து என்று இவர் அறிவித்த ரூ. 17.33 கோடிக்கு, இந்தியா விலேயே மிக அதிகமாக சொத்துவரி செலுத் தியவரும் இவரே. 33 லட்சம் ரூபாய்கள்!

நன்றி : ஸண்டே
- எஸ். ஆலன்.

தான்.

"ஏதாக்கம் பொணம் போகும். இல்லேனா உசுரு போற கேசை எடுத்துக்கிட்டுப் போற ஆஸ்பத்திரி வண்டியா இருக்கும். மேட்டுப்பாளையத்துக்கு இதுவரைக்கும் ஒரு இருபது பேரையாக்கம் கொண்டு போயிருப்பாங்க...." ரத்தினம் சொல்லிக் கொண்டே போனாள்.

"ஜெயலலிதா வர்றாங்களாமில்ல?"

"ஆமா! நாளைக் கழிச்சு எலியாப்டருல வந்து பாத்திட்டு போயிடுவாங்க...."

"இந்தப் பாவி மனுசனை இன்னும் காணோம். நா வயித்துல நெருப்பைக் கட்டி யிருக்கேன்."

"கண்ணம்மா! ஒம் புருசனுக்கு ஒண்ணும் ஆயிருக்காது. மேட்டுப்பாளையத்துக்கு வந்திருக்கும். அங்கே இருந்து கால் நடையாவே வந்து சேரும் பாரு...."

முத்துக் குமார் வந்து விடுவானா?

காலையில் ஆறு நாற்பத்தைந்துக்கு மாநிலச் செய்திகள் பிலிப்ஸில் வந்து கொண்டிருந்தது.

"......ஆகவே அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழையோ, கனத்த மழையோ அல்லது மிதமான மழையோ நீலகிரி முழுதும் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மரப்பாலம் நிலச்சரிவில் இதுவரை பதினான்கு பேருடைய உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மழையினால் மீட்புப்பணி இனி தாமதமாகலாம்...!."

ரத்தினம் கருப்புக் காப்பியைக் குடித்து விட்டுப் புறப்பட்டாள். "சரி கண்ணம்மா வர்ரேன். இன்னக்கி ஏணிக்கல் எஸ்டேட் போறோம். ராத்திரிக்கு வந்துர்ரேன்..."

பனி மூட்டம் வானத்தையும் பூமியையும் செவ்வனே இணைத்திருந்தது. குளிரின் தாக்கம் குதிகாலைக் கூடப் பதம் பார்த்தது.

மதியத்திற்கு மேல் பொழுது போவதே பிரம்மப்பிரயத்தனமாக இருந்தது. அந்த பஸ் நிறுத்தத்தில் ஒரு ஈ காக்கை கூட இல்லை. ரத்தினத்தின் வீடும் பூட்டிக்கிடந்தது. ஏணிக்கல் போயிருப்பார்கள்.

சிறிது நேரத்தில் தூறலாய் ஆரம்பித்த மழை, கம்பிகளைப் போல் பூமித்தாயை ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் துளைத்து எடுத்தன.

குழந்தை ராணி இன்று சற்று வித்யாசமாக அழுதாள். தொட்டிலிலிருந்து குழந்தையை வாரி எடுத்த கண்ணம்மா உடம்பு சூடு கண்டு திடுக்கிட்டாள். ராணிக்குக் காய்ச்சல் கொளுத்திக் கொண்டிருந்தது.

சமையல் கட்டில் குரோசினை தேடிக் கண்டுபிடித்து பாதியை உடைத்து நுணுக்கி, தாய்ப்பாலை சங்கு நிறையுமளவுக்குப் பீச்சி எடுத்து ஆள்காட்டி விரலால் கலக்கி, குழந்தையின் கடைவாயில் திணித்து ஊட்டினாள்.

குழந்தை முரண்டி, போராடி விழுங்கி முடித்த பின்புதான் கண்ணம்மா விகவாசமானாள்.

குபீரென்று காற்று வீட்டுக்குள் நுழைந்தது. கதவைச் சாத்திக் கொண்டியைப் போட்டு விட்டு சற்று கட்டிலில் அயர்ந்து சாய்ந்தாள்.

குழந்தையும் அவளது மார்பைப் பிடித்துக் கொண்டே உறங்கிப் போய் விட்டது.

கதவு தட்டப்படும் ஓசை கேட்ட பின்புதான் அவசரமாய் எழுந்து கதவைத் திறந்தாள் கண்ணம்மா. முத்துக்குமார் வந்தாச்சா? இல்லை.

ரத்தினம் குடையை மடக்கிக் கொண்டே உள்ளே நுழைந்தாள். வெளியே மழை கர்ண கடூரமாய் சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தது.

"கண்ணம்மா! எங்க வீட்ல நாங்க மூணு பேரும் ஏணிக்கல் எஸ்டேட்டுக்கு காலைல பொறப்படுறோம்...."

கண்ணம்மா விளக்கைத் திரி ஏற்றிக் கொண்டிருந்தவள் ரத்னத்தைப் பார்த்தாள்.

"டீஇலை பொறுக்கிற வேலைதான். அந்த எஸ்டேட் மேனேஜரு வரச்சொல்லிட்டாக. ஒனக்கும் கேட்டண்டி. கொழந்த இருக்குறதுனால வேணான்னு சொல்லிட்டாரு...."

கண்ணம்மா விளக்கை சாமி படத் தருகே வைத்துவிட்டு, 'உம்' கொட்டிக் கொண்டே அடுப்படி போனாள்.

"ஏன் கண்ணம்மா, இங்கே இருக்குற

எமது புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்

காஞ்சியின் அழைப்பு...

புண்ணிய நகரம்... பிருதிவித்தலம்... சர்வக்ஞபீடம்...
பல்லவ, சோழ, விஜயநகர சிற்பக் கருவூலங்கள்...!
காஞ்சிபுரம் யாத்திரீகர்கள், உல்லாசப் பயணிகள் கலை அன்பர்கள் அனைவரையும் ஒருங்கே கவருவதில் வியப்பில்லை...!


உங்களை அன்புடன் உபசரிக்கும் :

ஸ்ரீ ராமா லாட்ஜ்

(பஸ் நிலையம் அருகில்) 3195,
காஞ்சிபுரம் - 631 502. போன் : 3995



1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கயிலாசநாதர் ஆலயம்



1. A. C. மற்றும் சாதாரண அறைகள்
2. டெலிபோன்/கலர் டெலிவிஷன் ஸ்டார் & சன் டி.வி.
3. A. C. சைவ உணவகம்

எம்.ஏ.சி. அறக்கொடை

டாக்டர் ராஜா சர்
அண்ணாமலை செட்டியார்
பரிசுத் திட்டம்

எம்.ஏ.சி. அறக்கொடை நிறுவனத்தார் தங்களுடைய இருபதாவது (1994) ஆண்டிற்குரிய பரிசிற்காக 1990-93 ஆண்டுகளுக்கிடையே வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். நூல்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதி நாள் 28-2-1994 பரிசுத் திட்டம் குறித்த முழு விவரங்களை

செயலாளர், நிர்வாகக்குழு,
"டாக்டர் ராஜா சர் அண்ணாமலை
செட்டியார் பரிசு"
எம்.ஏ.சி.ஐ.சி.எச். பிளாக்-2,
வி.எச்.எஸ். வளாகம்,
டி.டி.டி.ஐ. அஞ்சல்,
சென்னை - 600 113.
என்ற முகவரிக்கு எழுதிப் பெறவும்.



பம்பாயி லுள்ள ஆதித்யா இன்வெஸ்ட் மெண்ட்ஸ் அண் கம்யூனிகேஷன் என்ற நிறுவனத் தின் மேனேஜிங் டைரக்டர் ராஜன் தேசாய்.. இவர் தமது 43 வது பிறந்த நாளை சமீ பத்தில் கொண்டாடினார். இவரது நிறு வன ஊழியர்களால் இவருக்கு ஒரு வாழ்த்து 'அட்டை' வழங்கப்பட்டது. அதைப் பிரித்துப் படிக்க இவருக்கு 1/2 மணி நேரம் தேவைப்பட்டது. மொத்தம் 43 மடிப்புகள் கொண்டிருந்தது அந்த அட்டை! நீளம் 129 அடி!

கின்னஸ் புத்தகத்திலும் சாதனை யாக இடம் பிடித்துவிட்டது.

ஆதாரம் : தி வீக்
- எஸ். ஆலன்.

ஜனமெல்லாம் ஒரு குந்த பாக்கியில்லாமே எல்லாரும் கீழே போயிட்டாங்க.... நீ... சரி, ராத்திரிக்குப் படுக்க வர்ரேன். அப்போ பேசிக்கலாம் கண்ணம்மா.''

ரத்தினம் வெளியே போய் மறைந்தாள்.

இரவு வானம் கிழிந்து விட்டதோ என் னும்படியான கொடூர ஊத்தல் தொடங்கி விட்டது. ஆங்காங்கே இடியும் மின்னலும் ஒரு சேர முழங்கிக் கொண்டே ஓடின.

கண்ணம்மா வீறிட்டலறிய ராணியை எடுத்துப் பாலுக்காக வாயில் திணித்து தட் டோடு கட்டிலில் அமர்ந்து பேருக்குச் சாப் பிட்டுக் கொண்டிருந்தாள். குழந்தையின் காய்ச்சல் மார்பில் சுட்டது.

ரத்தினம் வந்து சேரும் போது மணி ஒன்பதிருக்கும்.

எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி விட்டுக் கட்டிலிலேயே முகம் பார்த்துப் படுத்துக் கொண்டனர். குழந்தை நடுவில் இருந்தது. தூங்கியும் விட்டது.

மற்ற இருவரும் தூங்கவில்லை.

''ஏன் கண்ணம்மா! நாளைக்கு நாங்க மூணுபேரும் ஏனிக்கல் எஸ்டேட் போறோம். வீடு இருக்காம். அங்கேயே தங் கிக்கச் சொல்றாங்க. நீ மட்டும் இந்த பார்லி யாரில தனியா இருக்கப் போறியா?''

கண்ணம்மாவுக்கு ஒன்றும் புரிய வில்லை. வீட்டுக்காரனும் வந்த பாட்டைக் காணோம். என்ன செய்யலாம்?

ரத்தினம் சற்று நேரம் கண்ணம்மா வையே பார்த்தாள். அதில் கனிவும் இரக்கமும் இருந்தது.

''நாங்களும் நாளைக்கு இந்த எடத்தை விட்டுப் போறோம். நீ ஒத்தையில என்னமா செய்வே?''

கண்ணம்மா விட்டத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். ''திக்கத்தவங்களுக்கு தெய்வந்தான் தொணை....''

கொஞ்ச நேரத்தில் ஒரு கருப்புக் கம்பளியை இறுகப் போர்த்தித் தூங்கத் தொடங்கினாள் ரத்தினம். இன்னொரு கம் பளியை குழந்தைக்கும் தனக்குமாய் போர்த் திக் கொண்டு மீண்டும் மேல் விட்டத்திலே சஞ்சரித்தாள் கண்ணம்மா.

முத்துக்குமாருக்கு என்ன ஆகி இருக் கும்? கடந்த மூணு வருஷத்திலே ஒருநாள் பிரிஞ்சிருந்ததில்லையே? இவளும் ஒரு நாளாவது தனியா படுத்திருந்திருப்பாளா?

திடீரென்று குழந்தை ஜுரத்தில் சிணுங்கியது. மெல்ல தட்டிக் கொடுத்தாள் கண்ணம்மா.

''ராணிக் குஞ்சு... அப்பா வருவார்... கண்டிப்பா வருவார்... தூங்கும்மா தூங்கு....''

ஐந்தரை வாக்கில் ரத்தினம் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். எழுந்த வேகத்தில் கண்ணம்மாவை எழுப்பினாள்.

''கண்ணம்மா.. கண்ணு.. எந்திரிடீ... நாங்க காலம்பற போனாத்தான் முடி யும்...!''

கண்ணம்மா மெல்ல எழுந்தாள். அவள் கண்ணில் அசதி.

''கௌம்பிட்டியா?''

இருவரும் வெளியே வந்தனர். மழை 'விட்டேனாபார்' என்பதாகக் கிழித்துக் கொண்டிருந்தது.

ரத்தினம் கேட்டாள், ''தனியா எப் படிடீ இருப்பே?''

கண்ணம்மாவுக்கு துக்கம் நெஞ்சுவரை நிறைந்திருந்தது. எந்த கணமும் அழுது விடுவாள் போலிருந்தது.

''இந்த மனுசன் இன்னும் காணோமே?''

''வந்துருவாரு. கவலைப்படாத கண் ணம்மா!''

ரத்தினம் படி இறங்கி, குடை விரித்து கிளம்பத் தயாரானாள்.

தூரத்தில் யாரோ வருவது நிழலாகத் தெரிந்தது. கண்ணம்மா உற்றுப் பார்த்தாள். அடர்ந்த இருள். பேய் மழை. நிழலாய் ஒரு உருவம். நனைந்தபடி வெகு தொலை வில்.... யார்?

''சரி. நான் வரட்டா? சாக்கிரதையா இரு.''

ரத்தினம் போய்விட்டாள்.

தூரத்துப் புள்ளி கண்ணில் பட்டுக் கொண்டிருந்தவரை நம்பிக்கையோடு நின்றிருந்தாள் கண்ணம்மா.

மகளிர்காக மகளிர் நடத்தும் மகளிர் ஸ்பெஷல்

டெல்ஃபின் சிட்ஸ்

வழங்கும் பொங்கல் ஸ்பெஷல் !

வருங்காலத்தை வளமாக அமைத்துக் கொள்ள மகளிர்க்கு உதவும் மகளிரின் கூட்டு முயற்சியால் மகளிர்க்காக மகளிர் நடத்தும் மகளிர் ஸ்பெஷல் டெல்ஃபின் சிட்ஸ்,

சீட்டு உலகில் மற்ற நிறுவனங்களில் இல்லாத அரிய, புதிய வாய்ப்புகளை மகளிர்க்கு அளித்து வரும் டெல்ஃபின் சிட்ஸ் இப்போது வழங்கும் பொங்கல் ஸ்பெஷல், பொங்கல் சீட்டு திருவிழா!

ரூ. 5,000 முதல் ரூ. 1,00,000 வரையிலான சீட்டுகளில் சேர்ந்து, உங்கள் சேமிப்பைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்ளுங்கள். உங்கள் அவசரத் தேவைக்கு ஏற்ப பெரும் தொகைகளையும் பெறலாம். சிறப்புச் சலுகைகளும் பரிசுகளும் உண்டு.

வாருங்கள் இன்றே சேருங்கள் புதுவாழ்க்கையை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்!

பெண்களுக்கான நிறுவனங்களும் அமைப்புகளும் சீட்டுகளில் சேரலாம்.


தங்கம் மற்றும் வெள்ளி பனிவிழா

1.1.94 - 16.1.94

சிறப்பு அம்சங்கள் :



- நுழைவுக் கட்டணம் இல்லை
- காப்புறுதி கொடுப்போரின் வருமானம், எண்ணிக்கை ஆகியவற்றில் சலுகை.
- ஆண்டுதோறும் ஏராளமான பரிசுகள்!
- சேவை உங்கள் வீட்டைத் தேடி
- சந்தாதாரர் புதிய ஒருவரை அறிமுகம் செய்தால் சிறப்பு பரிசு உண்டு.
- திருமணத்திற்கு பண உதவி மற்றும் சந்தாதாரியான கல்யாணப் பெண்களுக்கு சிறப்பு பரிசு!
- உங்கள் பண சம்பந்தமான பிரச்சனைகளுக்கு இலவச ஆலோசனைகள்



மேலும் விவரங்களுக்கு

டெல்ஃபின் சிட்ஃபண்ட்ஸ் (பி) லிமிடெட்,

ஜி – 3, பிருகதீஸ்வரா அபார்ட்மெண்ட்ஸ்,
51, முதலாவது மெயின் ரோடு,
சி.ஐ.டி. நகர், நந்தனம், சென்னை – 600 035

பெண் சக்தி – டெல்ஃபின் சிட்ஸ் துணையுடன்

'ஓம்' என்று சொ

"ஓம்...!"

சொல்லிப் பார்க்கையில் மனம் அடங்கிக் குவிகிறது. இமை மூடி உச்சரிக்க, மனத் திரையில் ஜோதி பிரகாசிக்கிறது.


பிரணவ மந்திரம் என்று போற்றப்படும் 'ஓம்' என்பதன் சிறப்பை மாண்டுக்ய உபநிஷத் விரிவாகச் சொல்கிறது :

உண்மையின் வடிவம் ஓம்
பிரம்மத்தின் வடிவம் ஓம்

அவ்வளவெல்லாம் ஏன்...? காதுகளை மூடிக் கொண்டால் கேட்கிற ஒலி ஓம்!

உலகின் உயிரினங்களுக்கெல்லாம் மூலாதாரம் ஓம் - அந்தப் பிரணவ ஒலி மட் டுமே நிறைந்திருந்த அண்டத்தில், அதிலி ருந்தே சராசரங்கள் பிறந்து பரிணாமம் பெற்றதாக நம்புகிறோம். அதனால்தான் நமக்குள்ளும் அவ்வொலி ரீங்கரித்துக் கொண்டிருக்கிறது.

* குன்றம்



ல்லுவோம்!

கபாலீசுவரர் கோயிலைச் சேர்ந்த விசுவநாத சிவாச்சார்யார் கூறுவதைப் பாருங்கள் :

''அ, உ, ம என்ற எழுத்துக்களின் சேர்க்கை ஓம். இவை முறையே ரிக், யஜுர், சாம வேதங்களைக் குறிக்கின்றன. இவற்றின் 'ஒலி' வடிவமான 'ஓம்' அதர்வ வேதத்தைக் குறிக்கிறது.

''எந்த மந்திரத்தையும் 'ஓம்' என்று சொல்லிய பிறகுதான் உச்சாடனம் செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் அந்த மந்திரத்துக்குத் தனியே சக்தி கிடையாது...



''குரு மூலமாக மந்திர உபதேசம் பெறுவதே முறை. அவ்வகையில் தகப்பன் சிவனுக்கு மகன் முருகனே குருவாய் விளங்கி உபதேசித்த பிரணவ மந்திரம் 'ஓம்' - சுவாமிமலையில் இது நிகழ்ந்தது. சுவாமிநாதசுவாமி 'தகப்பன்சாமி' ஆனது இதனால்தான்...''



எத்தகைய சந்தர்ப்பம் மகனைத் தந்தைக்குக் குருவாக்கியது...?

கயிலையில் சிவனைக் காணச் சென்ற பிரம்மன், பாலமுருகனை வந்தனம் செய்யாமல் அலட்சியப்படுத்தினான். கோபமடைந்த குமரன், பிரம்மாவை அழைத்துப் பிரணவத்தின் பொருளைக் கூறும்படிக் கேட்டான். பிரம்மாவுக்குத் தெரியாமல் போகவே அவனைச் சிறையிலிட்டான் பாலமுருகன். படைப்புத் தொழிலைத் தானே மேற்கொண்டான்.

சிவபெருமான் மகனின் செயல் கண்டு புன்னகை பூத்தார். ''பிரம்மனைப் பொருள் கேட்டாயே; உனக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமா...?'' என்றார்.

''நீங்கள் கேட்கிறபடி இருந்து கேட்டால் நான் சொல்கிறபடி இருந்து

கமலமணிராஜன்

சொல்கிறேன்'' என்றான் முருகன். ''என் தாய்க்கு நீங்கள் முன்னொரு சமயம் பிரணவத்தின் பொருளை உபதேசித்த போது யாரும் அறியாத வண்ணம் சொன்னீர்கள்... நானும் இப்போது அவ்வாறே சொல்கிறேன் என்றான்.

''பாலகனின் இதழ்கள் நோக்கி வலது செவியைச் சாய்க்க மண்டியிட்டு அமர்ந்து கொண்டார் பரமசிவன். அவன் செய்த உபதேசத்தைக் கேட்டு மனமும் மெய்யும் குளிர்ந்து போனார்.

சிவனுக்குப் பிரணவத்தின் பொருள் தெரியாதா என்ன...? சரியாகப் பதில் சொல்லும் மாணவனைக் கண்டு ஆசிரியர் பூரிப்பதில்லையா? தம் குழந்தையின் மழலை கேட்டுப் பெற்றோர் மகிழ்வதில்லையா...? அத்தகைய மகிழ்ச்சிதான் பரமசிவனுடையது. அதனால்தான் உமையம்மையுடன் தம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள நினைத்தார். தம் உடலின் இட பாகத்திலேயே அவள் இருக்கதால் முருகனைத் தம் மறு காதிலும் உபதேசிக்கும்படிச் சொன்னார்.

இதைத்தான் கொஞ்சு தமிழ் திருப்புகழில் அருணகிரிநாதர்,

"சிவனார் மனங்குளிர உபதேச
மந்திரம்இரு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா..."

என்று பாடினார்.

குரோம்பேட்டை, குமரன் குன்றம் கோயிலுக்குப் போகையில் அருணகிரியாரின் மேற்படி வரிகள்தான் நினைவுக்கு வந்தன. குரோம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து பதினைந்து நிமிடப் பயண தூரத்தில் உள்ளது குமரன் குன்றம்.

நுழைந்ததுமே சலசலக்கும் பிரம்மாண்ட அரசமர நிழலில் சித்தி விநாயகர். அவரையும் நவக்கிரஹ மூர்த்தங்களையும் வலம் வந்து படியேறுகிறோம்.

'குமரன் மேடு' என்றே அழைக்கக் கூடிய அளவுக்கு மிகச் சிறிய குன்று. மார்கழி மாத அதிகாலையாதலால் தினசரி வரும் பக்தர்கள் சிலர் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். அதிக சிரமம் வாங்காத அளவான படிகள். அவற்றின் முடிவில் சமதளம். மீண்டும் சில படிகள் ஏற, சுவாமிநாத சுவாமி சன்னிதி.

இடையில் பச்சை வஸ்திரம் சுற்றி, நெற்றியிலும் நெஞ்சிலும் சந்தனம் சார்த்தப் பெற்று, குளிரக் குளிரக் காட்சி தருகிறான் முருகன். இடக் கரம் ஒயிலாய் இடுப்பில் இருக்க, வலக்கரத்தில் வீர வேல். தோளில் சாய்த்து நிறுத்தப்பட்ட தண்டம்.

பிராகாரத்தை வலம் வந்து நிற்கிறோம். குருக்கள் அர்ச்சனையும் தீபாராதனையும் செய்ய, தீப மங்கள ஜோதியாக ஒளிர்கிறான் முருகன்.

பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு சன்னிதியின் எதிரேயுள்ள யானை வாகனத்தைக் கண்டு வியக்கிறோம். சூரசம்ஹாரத்துக்கு முந்தைய கட்டம் என்பதால் யானை வாகனம் என்று விளக்குகிறார் குருக்கள்.

பிராகாரத்தை விட்டு வெளியே வந்து பார்வையைச் சுழல விட்டால் பசுமைக்கு நடுவே முருகன் குடிகொண்டிருப்பது தெரிகிறது. காஞ்சி முனிவரின் அருள் ஆக்ஞையின் பேரில் குமரனுக்குக் கோயில் அமைத்த ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி சத்சங்கத்தினர், அச்சிறு குன்றுப் பகுதியில் மரங்கள் நட்டுச் செழிக்கச் செய்திருக்கிறார்கள். முருகன் சன்னிதியையொட்டி ஒரு கிடுகிடு பள்ளத்தில் இயற்கையாய் அமைந்த சுனையிலிருந்து தண்ணீர் 'பம்ப்' செய்யப்பட்டு, பூஜைக்கும் தோட்டத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

பிரதான சன்னிதியின் இன்னொரு பக்கத்தில் சற்றே கீழ் மட்டத்தில் மீனாக்ஷி சுந்தரேசுவரர் சன்னிதிகள். குரு ஸ்தானம் பெற்ற முருகன் உயரத்திலும், மாணாக்கனாய் மண்டியிட்ட பரமசிவன் கீழேயும் இருப்பது பொருத்தம்தானே!

பிராகாரத்தில் நின்றால், தனித்தனி சன்னிதிகளிலுள்ள மீனாக்ஷி அம்மனையும் சுந்தரேசுவரரையும் ஒருசேர தரிசிக்கும்படியான அமைப்பு. சன்னிதிகள் தூய்மையாகப் பிரகாசிக்கின்றன. வாடாமல்லி நிறப் புடவையில் அம்பாள் பொலிகிறாள். இங்கும் தீபாராதனை. அமைதியான அழகான, சூழலில் மனம் எளிதாகச் சாந்தமடைந்து வணங்குகிறது.

படியிறங்கிக் கீழே வருகையில் சத்சங்க அலுவலர் ஒருவர் கோயில் திறந்திருக்கும் நேரத்தைக் கட்டாயம் குறிப்பிடும்படிச் சொல்கிறார். காலை ஆறு. முதல் பத்தரை வரை. மாலை நாலரை முதல் எட்டு - எட்டரை வரைதான் குமரன் தரிசனம்.

இன்னும் அதிக நேரம் திறந்து வைக்கலாமே...?

''பக்தர்கள் வரவு குறைவுதான். அதனால் உண்டியல் வருமானமும் குறைவு. ஆண்டுதோறும் நன்கொடைகள் பெற்றுத்தான் உத்ஸவம் நடத்துகிறோம். பூச நட்சத்திரத்தில்தான் கும்பாபிஷேகம் நடந்தது. அதனால் தை பூசத்தன்று குரோம்பேட்டை வீதிகள் அனைத்திலும் உலா வருவார். மற்ற விழா தினங்களில் கிரி வலம் மட்டுமே...''

பொருளாதார நெருக்கடியிலும் சத்சங்கத்தார் இரு வேளை பூஜைகளைக் குறைவின்றி நடத்தி வருகிறார்கள். ''இன்னும் எவ்வளவோ செய்ய ஆசைதான்...'' என்று அலுவலர்கள் சொல்கிறார்கள்.

'நீங்கள் குறைவாய்ச் செய்தாலும் நிறைவாய் என் அருள் உண்டு' என்பது போல் மேலே புன்னகை பூத்து நிற்கிறான் முருகன்!

வண்ணப்படம் : கோபிநாத்

முலயம்சிங்கின் முட்டாளாக்கும் சட்டம்!



* முலயம்சிங் யாதவ்

'தன்னை முதல் மந்திரியாக்கினால் காப்பியடிக்கும் பழக்கத் தடைச் சட்டத்தை எடுத்து எறிவேன்' என்று முழங்கிய முலயாம் சிங் யாதவ், பல கட்சிகளின் ஆதரவுடன் பதவியைப் பிடித்தவுடன் முதல் வேலையாக அச் சட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டார். இனி உ.பி. மாணவர்கள் எவ்வளவு காப்பியடித்தாலும் ஆசிரியர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள்! இம் மாநிலத்தில் இன்றைய புள்ளி விவரப்படி 40 சதவீதத்தினருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். அவர்களும் இனி தாராளமாகக் காப்பியடிக்கலாம் என்பதால், பொறுப்பாகப் படித்துக் கற்று அறியும் திறமைக்குத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக இனி ஆக்கிக் கொள்ள மாட்டார்கள். இவர்களே மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களில் வேலைக்கு வருவார்கள் என்பதால், அரசின் திறமை எந்த அளவுக்கு இருக்கும் என்று நாமே யூகிக்கலாம்! கல்வியை இப்படிப் பொறுப்பற்ற அரைவேக்காட்டுத் தலைவர்களிடம் விட்டுவிட்டு, இந்தியா விஞ்ஞானத்திலும் தொழில் துறையிலும் முன்னேற வேண்டும் என்றால் அது எப்படி முடியும்?



* கிரண்பேதி


சிறைக்குள் ஒரு மௌனப் புரட்சி

சில அதிகாரிகள் எங்கிருந்தாலும் அவர்களால் ஒரு வியக்கத்தக்க மாற்றம் நேரும்! அத்தகையவர்களில் ஒருவர் திருமதி கிரண் பேதி. இவரை மத்திய அரசு, ஐ.ஜி. (சிறை) பதவியில் அமர்த்திய போது, சிறைக்குள் அனேக மாற்றங்களைக் கொண்டு வந்தார். இவரது சமீபத்திய முயற்சி, சிறையினுள் யோகாவையும், தியானத்தையும் புகுத்தியது! ஆயுள் கைதிகளோடு, அலுவலர்களையும் ஒன்றுசேர்த்து, 106 பேர்களுக்கு யோகா வகுப்புக்களை ஆரம்பித்தார். இதில் ஒரு பகுதி, ஒன்பது நாட்களுக்கான மௌன விரதம். இப்பயிற்சியில் எந்த மதத்தைப் பற்றிய போதனையும் வராமல் பார்த்துக் கொண்டார். காலை 4 மணிக்கு தியானத்தில் தொடங்கி, இரவு 10 மணிக்கு முடிக்கும் வரை கைதிகள் யாரிடமும் பேசாமல் தியானத்தில் மட்டும் ஈடுபட்டிருந்தனர். ஆசார்யா கோயங்கா, மாலைகளில் நல்வழி போதனை வகுப்புகள் நடத்தினார். 'உன்னையே நீ அறிந்து கொள்' என்ற தலைப்பில் மனித சக்தியின் மேன்மையைப் பற்றிப் பல ஆக்க உரைகள் நிகழ்த்தினார். கொலை கொள்ளைக் குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவிக்கும் கைதிகள் கூடத் தங்களிடம் இதற்குப் பிறகு ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்ததாகக் கூறினார்கள். 'என் மனத்தில் இருந்த பழிவாங்கும் உணர்ச்சி அடியோடு போய் விட்டது' என்றார் ஒருவர்!

டில்லியிலிருந்து : ராஜீவி நரசிம்மன்



* சிறையில் தியானம்



1

என் வாழ்வில்
இடம்பெறும் நோக்கத்
துடன் வசந்த காலத்தில்
வந்து சேருகிறாய். உன்
புன்னகைகளுடனும்
சத்தியங்களுடனும்
- எலிசா பிஷப்


வண்ணத்துப் பூச்சி வேட்டை

பிறந்தபோது எனக்கு ராஜலட்சுமி என்று பேர். அதை அப்பாதான் பள்ளியில் சேர்க்கும் போது ரேகா என்று மாற்றி விட்டார். ராஜலட்சுமி என்றால் நான்கு கைகள் தெரிகிறது என்பார் அப்பா. எனவே ரேகா.

அப்பாவைப் பற்றிச் சொல்ல பல விஷயங்கள் உண்டு. ஜே.என்.யு.வில் நேசுரல் ஹிஸ்டரி ப்ரபஸர். என்னைப் படிக்க வைத்தார். பார்க்க வைத்தார். விளையாட வைத்தார். எதிர்காலத்தில் நம்பிக்கையும் சுதந்திரமும் வருமானமும் வர, தையலிலிருந்து கம்ப்யூட்டர் வரை எல்லா வகுப்புகளிலும் சேர்த்தார். பரதநாட்டியம் ஆடினேன். கொஞ்சம் பாட்டு கற்றுக் கொண்டேன். சித்தார் கூடக் கொஞ்ச நாள் போனேன். ஜப்பானிய மலர் அமைப்பு, கராத்தே... டில்லியில் உள்ள அத்தனை வகுப்புக்களிலும் நான் சேர்ந்து பாதியில் நின்று கொள்வது லஜ்பத் நகர் வட்டாரங்களில் நிலையான ஜோக் ஆகி விட்டது.

“ரேகா இந்த வாரம் எந்த க்ளாஸ்? முதல் உதவியா? இல்லை இகபானாவா?” என்று லஷ்மா என்னைச் சந்திக்கும்போதெல்லாம் விசாரிப்பாள். (அவளை நான் கேலி செய்ய எத்தனையோ விஷயங்கள் உள்ளன. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும் போது கட்டை விரலில் எச்சில் தொட்டுத் தொட்டுப் பிரிப்பாளே அதை நான் கேலி செய்ய எத்தனை நேரமாகும்!)

உண்மை இதுதான். எனக்கு எந்த க்ளாஸிலும் நாட்டமில்லை. அடிப்படையில்



நான் சோம்பேறி. எனக்கு உலகை வெல்லும் ஆசையோ, லோட்டஸ் 1-2-3 கற்கும் ஆசையோ கிடையாது. பள்ளிப் பாடம் கூட பாஸ் மார்க் வாங்கத்தான் படிப்பேன். ஆனால் புத்தகங்கள் கிடைத்து, கொஞ்ச நேரம் அம்மாவிடமிருந்து 'அதை எடுத்து வை - இதைக் கொண்டு வா - இதைக் கற்றுக் கொள்' தொந்தரவுகள் இல்லாமல் இருந்தால் மணிக்கணக்காகப் படிப்பேன்.

இந்தப் பழக்கம் அப்பாவிடமிருந்து வந்தது. அப்பா பாத்ரூமில் கூடப் படிப்பார்! எந்தப் புத்தகம் என்று கணக்கில்லை. ஏதாவது புத்தகம்.

ஒருமுறை நாங்கள் அப்பாவுடன் செமினாருக்கு லக்னோவுக்குப் போயிருந்தபோது ஓட்டலில் ஏதும் கிடைக்காமல் லக்னோ நகரத்தின் ஒல்லியான டெலிபோன் டைரக்டரியையும் அப்பாவின் செமினார் கட்டுரையான DOWN THE RIVER WITH HENRY THOREAU வையும் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் நான் எப்படிப்பட்ட பைத்தியம் என்று தெரிந்து கொள்ளுங்கள். படிக்கவில்லையென்றால் எனக்குத் தூக்கம் வராது. இதைப் பற்றி அம்மாவுக்குச் சம்பிரதாயமான ''எப்பப் பார்த்தாலும் புஸ்தகமா? என்ன பொண்ணு நீ? எப்படிப் போய் மாமியாரிடம் குடித்தனம் பண்ணப் போகிறாயோ'' டைப் கவலை. ''அதுக்குத்தான் ஏதாவது கிளாஸ்ல சேரு என்று அடித்...துக் கொள்கிறோம் நானும் அப்பாவும்'' என்பாள்.

''அம்மா, எனக்கு எதற்கு இதெல்லாம்? கல்யாணம் செய்து கொடுத்து விடுங்கள் நான் சமாளிக்கிறேன். நான் பாட்டுக்கு டீ.வி. பார்த்துக் கொண்டு பச்கபச்க என்று கறிகாய் வாங்கி வேளா வேளைக்குச் சமையல் பண்ணிக் கொண்டு, புத்தகம் படித்துக் கொண்டு, வீட்டில் கட்டின பசு போல இருப்பேன் என்று மாப்பிள்ளையிடம் முன்பே சொல்லி விடு'' என்பேன்.

அந்த மாப்பிள்ளையின் மூஞ்சி எனக்கு இன்னும் தெளிவாகவில்லை. ஆனால் எனக்கு விரைவிலேயே கல்யாணம் என்கிற எச்சரிக்கை மனசாழத்தில் தெரிந்தது. அப்பாவும் அம்மாவும் அதற்காகத் தயார் செய்வதெல்லாம் அரசல் புரசலாகக் காதில் விழுந்தது. அப்பா டைம்ஸ"க்கு விளம்பரம் கொடுப்பதும் (ALLIANCE INVITED FOR FAIR SLIM GOOD LOOKING GIRL 22/173 FROM WELL QUALIFIED AND WELL PLACED NON ATREYA BOYS இத்யாதி) ஸ்பீட் போஸ்டில் கடிதங்கள் அனுப்புவதும் கவனிக்கப்பட்டன.

FAIR SLIM GOOD LOOKING தான் நான். பஸ் ஸ்டாண்டில் அல்லது காலேஜ் வாச

சுஜாதா

யில் பரிசு கிடைக்கும் மாணவர்கள் பஞ்சாபி பெண்களுடன் என்னையும் சேர்த்துத்தான் 'ஹாய்ரே! ஹேமமாலினி, ஸ்ரீதேவி' என்று கலாட்டா பண்ணுவார்கள். பயங்கர அல்ட்ரா மாடர்ன் கல்லூரி. பிரியங்கா படிக்கிறாள் என்று வதந்தி. பெண்கள் எல்லாம் எம்டிவி, செக்ஸ் ஷாருக்கான் இப்படித்தான் எப்போதும் பேச்சு. பாய் ஃப்ரெண்டு இல்லாவிட்டாலும் இருக்கிறதாகச் சொல்லிக் கொள்ள வேண்டும். நிக்கி, பிங்கி, ட்விட்டி என்றெல்லாம் பேர்கள் சகஜம். பலர் டார்மிட்டரி பேஸ்மெண்ட்டில் சிகரெட் குடிப்பார்கள். டில்லி யுனிவர்ஸிட்டியில் ஈவினிங் கிளாஸ் படிக்கும், ஸல்மான்கான் போல பங்க் கிராப் வைத்துக் கொண்டிருக்கும் தயிர்வடை பையன் தூரத்திலிருந்து என்னைப் பார்த்துக் கொண்டே இருப்பான். எனக்குப் புதுக்கவிதை எழுதி ஜெயந்தி மூலம் அனுப்பியிருக்கிறான். கவிதை அப்படி ஒன்றும் மோசமில்லை (இங்கிருந்து நீ அத்தனை தூரம்-சுமா-ஆனால் இதயத்தில் எத்தனை அருகே!) அவனை இப்போதெல்லாம் காணோம். மாற்றிப் போய் விட்டானோ அல்லது ஜூஜூடியில் சேர்ந்து விட்டானோ என்னவோ... எப்படியோ க்ராப் வெட்டிக் கொண்டு கவிதை எழுதுவதை அவன் நிறுத்தியிருக்க வேண்டும்.

காதல் என்பதெல்லாம் புத்தகங்களில் தான் நடக்கும் என்பது எனக்குத் தெரியும். பெண் சுதந்திரமும் அப்படியே. எனக்குச் சுதந்திரம் கொடுத்தாலும் விடுதலை என்று வெளியே விட்டாலும் எடுத்துக் கொள்வேனா என்பது சந்தேகம்.

எனக்கு ஒரு பெண்ணாக, மனைவியாக இருப்பதில், க்ரோசரி பையைத் தூக்கிக் கொண்டு ஷாப்பிங் பண்ணுவதில் ஏதும் கௌரவக் குறைவு இருப்பதாகத் தெரியவில்லை. சின்னச் சின்ன சித்திர வேலைகள் பொறுமையாக டிசைன் பிரதியெடுத்து அதை ப்ரேம் போட்டு அலங்கரிப்பது பிடிக்கும். என்னைச் சும்மா விட்டால் மணிக்கணக்கில் என்னுடன் நிம்மதியாக இருப்பேன். சுத்தமாக நகங்களை வெட்டிக் கொள்வேன். டிசம்பர் வெயிலில் உட்கார்ந்து கொண்டு விவிதபாரதிக்குக் கார்டு எழுதிப் போட்டு, கிஷோர் குமாரின் பாட்டுக்கள் கேட்பேன். நகங்களுக்குப் பாலிஷ் போடுவது, விளம்பரங்களை நம்பி எல்லா க்ரீம்களையும் தடவிக் கொள்வது பிடிக்கும். அப்பா அம்மா என்னைச் சின்ன வயசிலேயே தனியாக விட்டு விட்டு வெங்கடேசுவரர் கோயில், சந்தானம் கச்சேரி என்று போய் விடுவார்கள். நான் சமர்த்தாகப் பால் வாங்கி வைப்பேன்.

என்னவோ என் ஜீனில் தப்பு இருக்கிறது என்று இந்தக் காலத்து நாகரிகப் பெண்கள் சொல்லலாம். பெண் என்கிற பாத்திரத்தை முழுக்க ஒப்புக் கொள்ளத் தயாரானவர்கள் இந்தக் காலத்தில் அபூர்வம்.

அம்மா ஜாதகம் பரிமாற்றி, அப்பா டைம்ஸ் ஆஃப் இண்டியா விளம்பரம் செய்து, கரோல் பாகில் ஜாதகப் பரிவர்த்தனை செய்து, இரண்டு மூன்று ஜாதகங்கள் பொருந்தி, முதன் முதல் என்னை வந்து பார்த்தவர் அர்ஜுன்.

பாங்கில் ஆபீசர் என்று சொன்னார்கள். எனக்குப் பாங்கு பற்றி அதிகம் தெரியாது. எப்போதும் பணம் இருக்கும்; எல்லாரும் எழுதிக் கொண்டிருப்பார்கள் என்று தெரியும். சம்பளம் ஒழுங்காக வரும். அவ்வளவு தான் எனக்கு வங்கிகளைப் பற்றிய அறிவு.

அர்ஜுன் என்னைப் பார்த்தபோது சம்பிரதாயமாகப் பாட்டு, பஜ்ஜி, சொஜ்ஜி எல்லாம் நடக்கவில்லை. அவருடைய அப்பா அம்மா பத்ரி போகிற வழியில் வந்திருந்தார்கள். இவர் ட்ரெய்னிங்குக்கு வந்திருந்தாராம். நாங்கள் ரெண்டு பேரும் அருகாமையில் உள்ள பார்க்கில் போய்க் கொஞ்ச நேரம் பேசினோம். அங்கே சிறுமிகள் பாவாடை விரிய சறுக்கிக் கொண்டிருக்க ''உன் பேரு ரேகா, ரைட்?'' என்றார்.

''ஆமாம்'' என்றேன்.


''எம்பேர் தெரியுமா?''

அர்ஜுன் தனக்கு மொத்தம் பிடிப்பு எல்லாம் போக எத்தனை சம்பளம் வருகிறது என்று சொன்னார். சரியாக ஞாபகமில்லை. கொஞ்சம் பிரமிப்பூட்டும் தொகை தான். பணம் சேர்த்து வைத்திருப்பதாகவும் 'வாழ்க்கையில் உனக்கு என்ன ஆதர்சம்?' என்றும் கேட்டார். நான் அதற்குச் சரியாகப் பதில் சொல்லவில்லை. ''தெரியவில்லை'' என்றேன். ''உனக்கு என்ன பிடிக்கும்? வாழ்க்கையில் ஏதாவது அடைய விரும்புகிறாயா?'' என்றார்.

''எதுக்கு எம். எல். ஏ. சீட் கேட்டு வர்றவங்களை 'தொப்பை'யைக் குறைச்சிட்டு வாங்கன்னு மேலிடம் கண்டிஷன் போடுது...?''

''தொப்பை போட்டிருக்கிறவங்க நெடுஞ்சாண்கிடையா, இஷ்டப்பட்ட இடத்திலே விழுந்து கும்பிட முடியாதில்ல... அதான்!''

- எஸ். கோவிந்தன்



எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ''நிறைய புத்தகம் படிப்பேன்'' என்றேன்.

''அதைப் பற்றி யோசித்ததே இல்லையா?'' என்றார்.

அதுதான் உண்மை. அர்ஜுன் என்னிடம், ''எனக்கு ஒரு ஆசை இருக்கிறது சொல்லட்டுமா? எனக்கு இப்போது இருபத்து ஏழு வயசு. முப்பத்து ஐந்து வயசுக்குள் முப்பத்தைந்து லட்சம் சம்பாதிக்கப் போகிறேன். தர்ட்டிஃபைவ் - தர்ட்டிஃபைவ்! இந்த மாதிரி டார்கெட் வேண்டும் வாழ்க்கையில்.

நான் மௌனமாயிருக்க, ''என்ன யோசிக்கிறாய்?'' என்றார்.

ஜுலாவில் ஆடிக் கொண்டிருக்கும் பெண்ணைச் சுட்டிக்காட்டி ''அந்தப் பெண்ணை எனக்குத் தெரியும். அவள் பேர் கனீத்'' என்றேன்.

அந்தப் பெண் என்னிடம் அட்டகாசமாக ஓடி வந்து, ''ரேகா நீ!'' என்று பின்னால் மறைந்து கொண்டு, அவள் சகோதரன் செய்யும் விஷமத்தைப் புகார் சொல்லி விட்டு, அர்ஜுன் மேல் புழுதியுடன் விழுந்து தப்பித்துக் கொண்டு ஆரவாரமாக ஓடினாள்.

''உனக்குக் குழந்தைகள் பிடிக்குமா?''


''பிடிக்கும்.''

''எனக்குக் குழந்தைகளைப் போட்டோவில்தான் பிடிக்கும்'' என்று அவர் சிரித்த போது அதில் என்ன ஜோக் இருக்கிறது என்று புரியவில்லை. சிரித்திருக்க வேண்டும் என்று அப்புறம் தோன்றியது. அர்ஜுன் அழகாக இருந்தார். தோற்றத்தில் ஒரு எளிமை இருந்தது. என் க்ளாஸ்மேட் பையன்கள் போல இல்லாமல் அர்ஜுன் கொஞ்சம் கண்ணியமாக இருந்தார். இவர் புழங்குவது வேறு உலகம் என்பது போல் இருந்தார். விளம்பரத்தில் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு லேசாக நடந்து வருவார்களே, அவர்கள் போல. அவரை 'அவன்' என்று சொல்லத் தோன்றவில்லை.

''மெட்ராஸ்ல எனக்கு ஃப்ளாட் இருக்கு; கொஸ்மாபாலிட்டன்ல மெம்பர். எனக்கு எல்லாமே திட்டமிட்டுச் செய்யணும்'' என்றார்.

நான், ''போலாமா, காத்துண்டிருப்பா'' என்றேன்.

அர்ஜுனைப் பார்த்ததும் எனக்குக் காதல் உண்டாகி விடவில்லை. அவரைப் பற்றி மற்ற விஷயங்களில் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் அவரை மனத்தில் எந்த இடத்தில் வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை. வீட்டுக்குப் போனதும் அப்பாவிடம், ''உங்க பொண்ணுக்கு எதிலயுமே இண்ட்ரஸ்ட் இல்லை போல இருக்கு. She is easily diverted'' என்றார்.



''ஏங்க, மணி என்னங்க ஆகுது?''
''பத்தொன்பது இருபதுங்க!''
''சரியாச் சொல்லுங்க! பத்தொன்பதா, இருபதா?''

- சூர்யா செந்தில்

''எதுக்கும் நாங்க பத்ரி, கேதார் போய், திரும்ப மெட்ராஸ் போன கையோடு லெட்டர் போட்டுர்றோம். ஜாதகம் எங்க கடையநல்லூர் ஜோஸ்யர்கிட்ட காட்ட வேண்டும், கன்பர்மேஷனுக்கு'' என்று சொல்லி விட்டு அவர்கள் போனதும், அம்மா என்னை, ''பார்க்கில் என்ன நடந்தது?'' என்று விசாரித்தாள்.

நான், ''ஒன்றுமே நடக்கவில்லை; கம்மா பேசிக் கொண்டு இருந்தோம்'' என்றேன்.

''ஏன் ஒரு மாதிரி விட்ட குறை, தொட்ட குறையா சொல்லி விட்டுப் போகிறார்கள்?'' என்றாள்.

''எனக்கென்ன தெரியும்?''

அப்பாவைப் பார்த்து, ''இதான் இவகிட்ட பிரச்னை; எதிலயும் அக்கறை இல்லை, பொஸ்தகத்தைத் தவிர.''

அன்றிரவு என்னைப் பற்றி அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வாக்குவாதம் நடந்து, அப்பா சாப்பிடாமல் படுத்துக் கொண்டு விட்டார். ஜெயந்திக்கு வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது, ''நீ கல்யாணம் பண்ணிக்கப் போறயா அக்கா?'' என்று கேட்டாள்.

''அப்படித்தான் ஐடியா போல இருக்கு, யம்மு.''

''என்னை விட்டுட்டுப் போய்டுவியா?'' என்றாள்.

அவள் கண்களில் கண்ணீர் ஜொலித்தது.

''யம்மு ஒண்ணு பண்ணலாம். ரெண்டு பேரும் ஒருத்தனையே கல்யாணம் பண்ணிக்கலாம்'' என்றேன்.

''அது சட்டப்படி குற்றம்'' என்று சொல்லி விட்டுத் தலையணை, விரல் சூப்பும் போர்வையுடன் என் படுக்கையில் வந்து கட்டிக் கொண்டு படுத்தாள் ஜெயந்தி.

(தொடரும்)



“மனைவியை இழந்த ஒருவர், கைக்குழந்தையாக இருந்த தன் மகனை நல்ல முறையில் வளர்த்தல் பொருட்டு இரண்டாம்தாரமாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அந்தப் பெண், சினிமாவில் காட்டும் 'சித்திகள்' போலல்லாமல், அந்தக் குழந்தையிடம் மிக அன்பாகவும் அனுசரணையாகவும்தான் நடந்து கொண்டாள். ஆயினும் அந்தப் பையன் வளர்ந்து, பெரியவனானதும்

* கரேஷ்குமார்



* சகுந்தலா



அந்தப் பெண்ணை ஒரு 'விபசாரி' என்று குற்றம் சாட்டினான்! 'நீ எனக்கு உறவல்ல' என்று ஒதுக்கித் தள்ளினான்!

ஒரு தாயைப் போலவே அவனிடம் நடந்து கொண்டும், அவன் தன்னை இப்படிப் பழிசுமத்தி விட்டானே என்கிற அதிர்ச்சி, அந்தப் பெண்ணை மனநோயாளி ஆக்கியது! முடிவில் எங்களிடம் வந்து ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டு சென்றாள்'' என்றார்கள் மனநல மருத்துவ தம்பதிகளான கரேஷ்குமார் - சகுந்தலா!

மாற்றாந்தாய் உறவு என்பது நம் சமூகத்தில் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வருகிற ஒன்றென்றாலும், அப்படியான கதைகள், நிகழ்வுகள் எல்லாம் பெரும்பாலும் சோகமான சம்பவங்களாகவே சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே ஒரு 'சித்தி'யால் மாற்றாந்தாய்க் குழந்தையை அன்போடும் ஆசையோடும் வளர்க்க முடியாதா? அந்தக் குறிப்பிட்ட உறவில் மட்டும் ஏன் இத்தனை சிக்கல்கள்? இதற்குத் தீர்வே இல்லையா? - இப்படியான கேள்விகளை முன்வைத்த போதுதான் டாக்டர் கரேஷ்குமார் மேற்படி 'கதை கேஸை'ச் சொன்னார்.


''அந்தப் பெண் உண்மையிலேயே மிக நல்லவளாகவும் பையன் மேல் அன்புள்ளவளாகவும் இருந்த போது, அவன் ஏன் அப்படிப் பழிசொல்ல வேண்டும்? நியாயமாக, மனநல மருத்துவரிடம் வர வேண்டியது அவன்தானே?'' நமது சந்தேகத்தைக் கேட்கிறோம்.

''இல்லை. இங்கே பிரச்னையின் ஆரம்பம் உணர்வுபூர்வமானதல்ல. அது சொத்து காரணமாக ஏற்பட்டது. மகனோ, மகளோ வளர்ந்து பெரியவர்களாகியிருந்தால் 'சொத்து' என்பது மிக நுட்பமான ஒரு பிரச்னையாக விஸ்வரூபம் எடுக்கும். 'அப்பாவின் இரண்டாவது மனைவிக்கு ஒரு வேளை எல்லா சொத்தும் போய் விடுமோ' என்று அவர்களுக்குப் பயம். அதனால் 'சட்டப்படி அவள் என் தந்தைக்கு மனைவியில்லை' என்று அந்த உறவைக் கொச்சைப்படுத்தி விடுவார்கள். நான் சொன்ன கேஸிலும் இதுதான் பிரச்னை!''

''இப்படிப்பட்ட சிக்கல்கள் பல நிறைந்திருந்தும் அநேகப் பெண்கள் ஏன் இன்னும் இரண்டாம்தாரமாக வாழ்க்கைப்படச் சம்மதிக்கிறார்கள்?''

''எல்லோரும் இளையதாரம் ஆவதில்லை. பல நாளாகத் திருமணம் ஆகாதவர்

அவர்கள் வாழ்க்கை



கள், வறுமையில் உழல்பவர்கள், அங்கஹீனமானவர்கள், விதவைகள், அனாதை இல்லங்களில் வாழும் பெண்கள் இப்படிப்பட்டவர்கள்தான் இந்நிலைக்கு ஆளாகிறார்கள். கவனித்தால் - ஏதோ ஒரு வகையில் இவர்கள் வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பது புரியும்.

''உறவினர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் - தனக்குள் 'தனிமைப்பட்டவள்' என்ற உணர்வு ஏற்படும் பெண்கள், பாதுகாப்பு கருதி, இரண்டாந்தாரமாகச் செல்வதற்குச் சம்மதித்து விடுகின்றனர். திருமணத்திற்குப் பின் அங்கு அமையும் சூழ்நிலை, அவர்களது மனத்தில் அதுநாள் வரை உருவாக்கி வைத்திருக்கும் 'மணவாழ்வு பற்றிய கனவோடு' ஒத்துப் போகாததால் ஏமாற்றமடைகின்றனர். ஏமாற்றம், எரிச்சலாகிறது. எரிச்சல், கோபமாகிறது. கோபத்தின் வடிகால் - அங்கே அவள் வளர்த்தாக வேண்டிய வேறொருவரின் குழந்தையாக இருந்தால் அதன் மேல் பாய்கிறது.

''மேலும், நாம் என்னதான் அன்பு காட்டினாலும், மாற்றாந்தாய்க்குரிய மரியாதைதானே நமக்கு' என்கிற மரபுரீதியிலான சிந்தனையும் இந்த வெறுப்புணர்ச்சிக்கு ஆதாரம்.

''இது தவிர இப்பிரச்னையில் மாமியார்களின் பங்கும் பிரதான இடம் வகிக்கிறது. முதல் மனைவியையும் இரண்டாவதாக வந்திருப்பவளையும் அவர்கள் அடிக்கடி ஒப்பிட்டுப் பேசுவது அவசியம் தவிர்க்கப்பட்டாக வேண்டிய ஒரு விஷயம்.

''கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கிய விஷயம் - ஆணுக்கு, அவனது இரண்டாவது திருமணத்திற்குப் பின் ஏற்படும் குற்ற உணர்ச்சி. 'குழந்தைக்காக' என்று சொல்லி, மணம் புரிந்திருந்தாலும் சமூகம், அந்தக்

அன்புமயமாக்குங்கள்!




"பக்கத்து வீட்டு பிரேமாகிட்டே, 'காதல்ல நம்பிக்கை உண்டா'ன்னு நேத்து கேட்டது தப்பாப் போச்சு...!"

"ஏன்... என்னாச்சு...?"

"இன்னிக்கு டிபன் டப்பாவுல பஜ்ஜி, சொஜ்ஜி 'பாக்' பண்ணிக் கொண்டுவந்து கொடுத்துட்டா!"

- கே. வி.



"என்னங்க... உங்க பையன் டீ. வி. முன்னாடி உட்கார்ந்துக்கிட்டு... 'இன்று போய் நாளை வா'ன்னு சொல் லிக்கிட்டு இருக்கான்...!"

"ஆமாங்க... இன்னிக்குக் காட்டி னதைத்தானே நாளை பகல் மறுபடி காட்டறாங்க...!"

- ராஜா



"என் லவ் லைஃப்லேயே போன வாரம்தான் ரொம்ப மோசம்டி! என் லவர் ஏழு நாள்லே ஒன்பது சினிமா தான் அழைச்சிட்டுப் போனார்!"

- கார்த்திக் ராஜா

கண்ணோட்டத்தில் பார்க்குமா?' என்கிற பயம்; பரிதவிப்பு. அதனால் அந்தப் பெண் ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் ஒதுங்கிப் போகிறான். இதன் விளைவாக அந்தப் பெண்ணுக்கு நேரும் சலிப்பு - குழந் தையின் மேல் கோபமாக உருவெடுக்கிறது. மேலும், 'நாம் இவள் மேல் அன்பு செலுத்தி னால் நம் குழந்தை எங்கே நம்மை ஒதுக்கி விடுமோ?' என்கிற ஆணின் பயமும் இந்தப் பிரச்னையின் ஆணிவேர்!"

"சரி, இப்பிரச்னைக்கு எதுதான் சரி யான தீர்வாக இருக்கும்?"

"இரண்டாம்தாரமாகத் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணை முத லில் மனத்தளவில் தயார் செய்ய வேண்டும். அவளது எண்ணங்களையும் செய்கைகளை யும் நல்ல கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அவள் உணர்வுகளுக்கும் மதிப் பளிக்க வேண்டும். 'ஏதோ பரிதாபப்பட்டு மனைவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவள்' என்கிற எண்ணம் அவளுக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மிக அவசியம்.

"முழுக்க முழுக்கப் பெண்ணை மட் டுமே குறைசொல்லிப் பயனில்லை. தாயில் லாக் குழந்தை என்று பிள்ளைகளுக்கு அதி கச் செல்லம் கொடுக்கும் பழக்கத்தை மாற்றி கண்டிப்பு, கட்டுப்பாட்டுடன் அவர்களை வளர்க்க வேண்டும். விவரம் தெரிய ஆரம் பிக்கிற வயதில் அவர்களுக்கு விளக்கமாக எல்லாவற்றையும் பக்குவமாகச் சொல்லி விட்டால், பல்வேறு மனக் குழப்பங்களுக்கு அவர்கள் ஆளாவதைத் தவிர்க்கலாம்.

"இளைய தாயார் என்றாலே, அவள் கொடுமைப்படுத்துபவள் என்கிற எண்ணத் தைக் குழந்தைகள் மனத்தில் விளைவிக்கும் சினிமாக்கள், கதைப் புத்தகங்கள் இவை களையெல்லாம் சட்டபூர்வமாகத் தடை செய்து விட்டாலே இப்பிரச்னையில் பாதி தீர்ந்து போய் விடும்!

"எந்தப் பெண்ணும் இயல்பிலேயே கொடுமைக்காரியாக இருப்பதில்லை. பெண் என்றாலே அன்பின் வடிவம்தான். சந்தர்ப்பவசத்தால் இளையதாரமாக ஆகி விட வேண்டிய நிர்பந்தத்தில் சிக்கிக் கொண்டவர்களை அன்போடு அணுக வேண்டும். 'நான் இரண்டாந்தாரம்தானே' என்கிற தாழ்வு மனப்பான்மை அவர்களுக்கு ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் வாழ்வை அன்புமயமாக்க வேண் டும். அதன்பின் இப்படி ஒரு பிரச்னை எழ வாய்ப்பே இல்லை!"

சந்திப்பு : கலாமூர்த்தி

காஸ் ஸ்டவ் பயன்படுத்துவோர் கவனத்திற்கு!



உங்கள் வீட்டு காஸ் ஸ்டவ்
தொல்லைகள் தருகிறதா? ரிப்பேர்
ஆகிவிட்டதா? கவலை வேண்டாம்!

எங்களை அழைக்கவும்

Ph: 483 09 66

எல்லா வகையான காஸ் அடுப்புகளும், வெளிநாட்டு ஸ்டவ்கள் உட்பட ரிப்பேர் செய்யவும், பழுதடைந்த பாகங்களை புதிதாக மாற்றவும், பிசுக்கு நீக்கி சுத்தம் செய்யவும், புதிதாக ஸ்ப்ரே பெயின்டிங் (நீங்கள் விரும்பிய வண்ணங்களில்) செய்யவும், குரோமியம் பிளேட்டிங் செய்யவும், ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் ஸ்டவ் பாலிஸ், பெட்ரோல் ஓவர் ஆயிலிங் செய்யவும், திருமணம் மற்றும் விசேஷ வைபவங்களுக்கு பெரிய காஸ் ஸ்டவ் வாடகைக்குப் பெறவும்

கவனம் தேவை


காஸ் ஸ்டவ் மெக்கானிக் & சர்வீஸ் ஷாப்

140, ரங்கராஜபுரம் மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–24.

கிளை : 7/8, கஸ்தூரிபா நகர், 3 வது குறுக்குத் தெரு, அடையார், சென்னை - 20.

ரிப்பேர் செய்ய தங்கள் ஸ்டவ்வை எடுக்கும்போது
உடனடி உபயோகத்திற்கு மாற்று காஸ் ஸ்டவ்வும் தருகிறோம்.

A well-deserved rest
A well-earned interest



The Pensioner Benefit Deposit Scheme from RPS Benefit Fund Ltd.

20% p.a.

20% interest, cent percent reliability

For further details contact:

RPS BENEFIT FUND LIMITED

(Declared as "NIDHI" by the Central Government)

Vijay Shanthi Complex, First Floor, No. 16, Ramanathan Street, T.Nagar, Madras-17. Ph: 441554

Branches: RR Complex, 11/1, East Kalmandapam Road, (Behind Police Station), Royapuram, Madras-600 013. Ph: 556164.

Harmony Building, 433-F, D.B. Road, R.S. Puram, Coimbatore-2. Ph: 43576.

381/2, 1st Floor, Sampige Road, (Opp. City Central Library) Malleswaram, Bangalore – 560 003.

விஷ்வக்சேனன்

52. அவன் சித்தம்

ஏழாம் பிறைச் சந்திரன் தன் கலைகளை இழந்த சோகத்தில் தனது கிரணங்களை மேகங்களுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டதாலும் காஞ்சி அரண்மனை நந்தவனத்தில் செழித்திருந்த மலர்ச் செடிகளும் மரங்களும் நிழல் பரப்பியதாலும் நந்தவனத்துக்குச் செல்லும் பாதை பெரிதும் இருட்டடித்துக் கிடந்தது. பாதையின் முகப்பில் அமர்ந்திருந்த அம்மங்கையின் முழுமதி வதனத்தில் நிலவிக் கிடந்த சோகத்தின் காரணத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்வது போல் அருகிலிருந்த நித்திய மல்லிக் கொடியின் மலர்களில் ஒன்று அவள் முகத்துக்கெதிரே தன் வெள்ளை வெளேரென்ற முகத்தைக் காட்டி விசாரித்தது. பதிலேதுமில்லை என்பதால் கோபித்து, முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக் கொண்டது.

சற்றுத் தள்ளி நின்றிருந்த பன்னீர் மரத்தின் மலர்களிலிருந்து சுகந்தத்தை அள்ளி வந்த தென்றல், அவளைத் தேற்ற முயன்று தோற்றதால் தயங்கித் தயங்கித் தவழ்ந்து கொண்டிருந்தது. அவளது நீள் விழிகளில் நிறைந்து நின்ற கண்ணீர், எந்த வினாடியிலும் உருண்டு தரையில் விழுந்து விடுவோமென்று அச்சுறுத்தின. பளபளத்து மின்னிய அந்த நீர்த் துளிகளைக் கண்டு வெட்கியதால் அவள் கழுத்திலிருந்த பாண்டிய நாட்டுப் பெருமுத்துக்கள், அவள் அணிந்திருந்த ஆடைக்குள் ஒளிய முற்பட்டன.

தன் மனத்தை நன்றாக உணர்ந்திருந்த தந்தை, அரையனைத் தொலை தூரத்திற்கு அனுப்பி விடச் செய்த ஏற்பாடுகள் அவள் சிந்தையை ஆக்கிரமித்ததால் பொங்கிய துக்கம், அவளை நிலைகுலைய வைத்தது. மக்கள் நலனில் அக்கறை வைத்து, அவர்களுக்குப் பூரண அமைதி கிட்டும் வரை சக்கரவர்த்தியென்று பட்டம் சூட மறுத்த தந்தை, தனது நலனை மறந்திருப்பாரென்று நினைக்க இடமில்லையென்பதை அறிவு ஒருபுறம் உணர்த்திக் கொண்டிருந்தாலும், நடந்த நிகழ்ச்சிகள் எந்தவித நம்பிக்கையும் அளிக்காததால் பெரும் சோகமே அவளைச் சூழ்ந்திருந்தது.

கோட்டாற்றுப் படைக்குத் தலைமையேற்க அரையன் உவகையுடன் ஒப்புக் கொண்டதை நினைத்த அம்மங்கை, அவன் பட்டத்திலும் பதவியிலும் அடியோடு மயங்கி, தன்னைப் பற்றிய நினைவே இல்லாமற் போய் விட்டானென்றே தீர்மானித்தாள். மேகங்களை விட்டு நீங்கி, வெள்ளிக் கிரணங்களை வீசிய சந்திரனோ, குளிர்ந்த தென்றலோ அவள் மனத்துக்குச் சாந்தியளிக்கவில்லை.


மனித மனத்துக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய கரங்கள் இரண்டே பேருடையவை தாம். ஒன்று, தாயின் அன்பு மிக்கக் கரங்கள், மற்றொன்று வாழ்நாள் முழுதும் துணையாக வருபவரது கரங்கள் என்று சாத்திரங்கள் கூறுவதை மெய்ப்பிக்க வந்தன போல், மென்மையான கரங்கள் இரண்டு அவள் தோளில் அமர்ந்தன. அவற்றில், ஒரு கரம் உயர்ந்து மெல்ல அவள் குழல்களைப் பரிவுடன் கோதியது. திரும்பிய அம்மங்கை, தன் பின்புறத்தில் தாய் புவனமகாதேவி நிற்பதைத்தான் முதலில் கண்டாள். அடுத்து, வடக்கே துங்கபத்திரை முதல் தெற்கே குமரி வரை சோழ நாட்டை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்த குலோத்துங்கன், தன் கரங்களை மார்போடு சேர்த்துக் கட்டியபடி நிற்பதைப் பார்த்தாள். உடனே அன்புடன் மரியாதையும் மிக, எழுந்து நின்றாள்.

புவனமாதேவியின் மெல்லிய குரல் பரிவுடன் ஒலித்தது : ''மகளே, ஏனிப்படி தனிமையில் அமர்ந்திருக்கிறாய்?''

பதில் ஏதும் கூறாத அம்மங்கை, நீர் நிறைந்த விழிகளால் தந்தையை ஏறிட்டுப் பார்த்தாள். 'காரணம் அவருக்குக் கூடவா தெரியாது?' என்பது போல.

அவள் பார்வையின் பொருள் நன்றாக விளங்கினாலும் ஏதுமறியாதவன் போல விழித்த குலோத்துங்கன், ''அம்மங்கை!''

பாண்டியன்



மகள்

என்று அழைத்தான்.

எந்தக் குரல் சோழ வீரர்களை காற்றைவிட வேகமாக இயங்க வைக்குமோ, எந்தக் குரல் சாளுக்கியரையும் பாண்டியரையும் சேரரையும் நடுங்க வைக்குமோ, அந்தக் குரல் பெரிதும் கரகரத்து நெகிழ்ந்து ஒலித்தது.

வலிய கரமொன்று உயர்ந்து அவன் விழிகளிலிருந்து வழிந்த நீரைத் துடைத்தது. அவளை மெல்ல நடத்தியபடியே அரண்மனைக்குள் நுழைந்த குலோத்துங்கன், ஒரு

அருள்வாக்கு

திற்காலத்தில் அந்தணை அசுத்தத்துக்கும் கோயில்தான் இடம் என்றாகி விட்டது! பிரகாரத்துக்கு வெளியிலே மட்டுமில்லை; ஸந்நிதிகளிலேயே கொஞ்சங்கூட சுத்தமில்லை. ஸ்வாமி மேலே சார்த்துகிற வஸ்திரமே பிடித்துணிக்கும் கேவலமாக அழுக்கேறியிருக்கிறது.

திருப்பதியில் ரவை ஸல்லாக் கட்டளை என்று பழைய கால ராஜாக்கள் ஒன்று வைத்திருந்தார்கள். ரவை ஸல்லா என்றால் டாக்கா மஸ்லின் மாதிரி நல்ல வெள்ளை வெளேரென்றும் ரொம்ப மெல்லிசாகவும் இருக்கிற துணி.

திருப்பதியில் விக்ரஹத்தை மட்டுமில்லாமல் ஸந்நிதித் தரையையே எவ்வளவு சுத்தமாக வைத்துக் கொண்டிருந்தார்கள் என்றால், பெருமாள் ஸந்நிதானத்தில் முதலில் தடிமனான பழைய வஸ்திரங்களில் ஆரம்பித்து, அதைவிட மேலும் மேலும் சுத்தமான மெலிசான துணிகளால் துடைத்துக் கொண்டே போவார்கள். கடைசியில் ரவை ஸல்லாவைப் போட்டுத் துடைப்பார்கள். துளியூண்டு அழுக்கோ பிசுக்கோ இருந்தால் கூட அந்த வஸ்த்ரம் காட்டிக் கொடுத்து விடும். இன்னொரு ரவை ஸல்லா, அப்புறம் ஒன்று என்று அந்த வஸ்த்ரத்திலும் கொஞ்சம் கூட அழுக்குப் படியாதவரை துடைத்துக் கொண்டே போக வேண்டும் என்று ராஜாக்கள் கட்டளை வைத்திருந்தார்கள். அதில் துளிக்கூட அழுக்குப் படியாமலிருக்கிறதா என்று பரீக்ஷித்துப் பார்ப்பதற்கென்றே ஒரு மணியக்காரன் போட்டிருந்தார்கள். அவ்வளவு சுத்தமாக, மூலவர் பிம்பத்தை வைத்துக் கொள்கிற மாதிரியே அவர் இருக்கிற கர்ப்பக்ருஹத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



வார்த்தை கூடப் பேசாமல் கூடத்தின் வாயிலில் வந்து நின்றான்.

அந்த விசாலமான கூடம் அமளி துமளிப்பட்டுக் கொண்டிருந்தது. வாயிலில் தோரணங்களாக ஆடின, புத்தம் புது மாவிலைகள். குறுக்கும் நெடுக்குமாக பணியாட்கள் நடமாட, வாயிலில் வந்து நின்ற ரதங்களிலிருந்து இறங்கிய வாழையும் மஞ்சளும் இதர பொருள்களும் பின்புறத்து மடப்பள்ளிகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

கூடத்தின் பக்கவாட்டு அறையிலிருந்து வெளிவந்த பல்லவராயர் கரங்களில் ஓலைகள் பல இருந்தன. உடன் வந்த வீரர்களிடம் அவற்றை ஒவ்வொன்றாக அளித்த அமைச்சர், மன்னனை நோக்கித் திரும்பி வந்தார்.

''ஓலைகள் அனைத்தும் அனுப்பப் பட்டு விட்டன'' என்று அறிவித்த அமைச்சரின் விழிகள் அம்மங்கையைக் கண்டு இடுக்கிட்டன.

''இளவரசி வருத்தமாயிருப்பதாகத் தெரிகிறது? மணப்பெண் இப்படி வருந்துமளவிற்கு என்ன நேர்ந்தது?'' என்று விசாரிக்கவும் செய்தார் பல்லவராயர்.

அம்மங்கையின் திகைப்பு அடங்க வெகு நேரமாயிற்று. மெல்ல ஒலித்தது அவள் குரல் : ''மணப்பெண்ணா, நானா?''

கடகடவென்று நகைத்தார் அமைச்சர்.

''நல்ல கேள்வியம்மா இது. நீ மணப்பெண்ணில்லா விட்டால் வேறு யார்?''

அதுவரை மௌனமாயிருந்த மன்னன், ''அமைச்சரே, மணமகன் யாரென்பதையும் கூறி விடுங்கள்'' என்றான்.

அனைத்து ஏற்பாடுகளையும் ரகசியமாகச் செய்து முடித்து விட்டு ஏதுமறியாதது போல் நின்ற தந்தையை அம்மங்கையின் விழிகள் விழுங்கி விடுவது போல் நோக்கின. அவள் பார்வை மகிழ்ச்சி, கோபம், ஆச்சரியம், வெட்கம் எனப் பல உணர்ச்சிகளின் கலவையாயிருந்தது.

''நான் கூறுவது என்ன, அதோ மணமகனே வந்து கொண்டிருக்கிறான் பாருங்கள்'' என்று வாயிலைச் சுட்டிக்காட்டினார் அமைச்சர்.

அரண்மனை முகப்பில் தன் புரவியை விட்டிறங்கி, கையில் ஓலையொன்றுடன் அதிவேகமாக வந்து கொண்டிருந்தான் அரையன் மதுராந்தகன்.

காஞ்சிமா நகரிலிருந்து தெற்கே நீண்டு நெடுந்தூரம் சென்ற அந்தச் சாலை

வெறிச்சிட்டுக் கிடந்தது. இடையே குறுக்கிட்ட கிராமங்களிலிருந்த மக்கள் சாலையின் இருபுறங்களிலும் கைகள் நிறைய மலர்களுடனும் மாலைகளுடனும் காத்து நின்றனர்.

தொலைதூரத்தில் புழுதிப் படலமொன்று எழுந்தது. யானைகளும் புரவிகளும் போருக்குச் செல்வன போல் முழுதும் அலங்கரிக்கப்பட்டு கதிரவன் ஒளியில் மின்னியபடி வந்து கொண்டிருந்தன. புரவிகளில் ஆரோகணித்திருந்த வீரர்களின் வேல்களும் வாட்களும் பளபளவென்று மின்னின. வரிசையாக கண்களுக்கெட்டிய தூரம் வரை நீண்டிருந்த அணிவகுப்பு கிளப்பிய புழுதி, வானை நோக்கி மேகங்களுக்குப் போட்டியாக எழுந்து கொண்டிருந்தது. அணிவகுப்பில் வந்த வீரர்கள், எந்தப் போருக்கும் செல்பவர்களாகத் தோன்றவில்லை. அவர்கள் முகத்திலிருந்த மலர்ச்சியும் உல்லாசமும் ஏதோ கேளிக்கை காணச் செல்பவர்களாகக் கருதச் செய்தன.

அணிவகுப்பின் முகப்பில் சென்ற அந்த அழகிய ரதம் எங்கெல்லாம் நின்றதோ அங்கெல்லாம் மக்கள் கூட்டம் சேர்ந்தது. அவர்கள் அளித்த மலர் மாலைகளையும் அன்புப் பரிசுகளையும் ஏற்றுக் கொண்டு ரதம் மேலே பயணத்தைத் தொடர்ந்தது. முழுவதும் தந்தத்தால் இழைக்கப்பட்டு வேலைப்பாடுகள் நிறைந்திருந்த அந்த ரதம், கண்களைப் பறித்தது. சேரலாதனால் திருமணப் பரிசாக அளிக்கப்பட்ட ரதம் அது.

பார்வைக்கு அலங்காரமாகச் சகல வசதிகளுடன் இருந்த அந்த ரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்த ஜெயந்தன், அதன் படகு போன்ற அமைப்பையும் பக்கவாட்டில் நீண்ட தந்தச் சட்டங்கள் மடக்கி உள்ளே திருப்பும் வகையில் உருவாக்கப்பட்டிருப்பதையும் கண்டு, அது எந்த நேரத்திலும் காற்றை விட வேகமாகச் செல்லும் போர் ரதமாக மாறவல்லது என்பதைப் புரிந்து கொண்டதால், அதை வடித்த சேரநாட்டுச் சிற்பியை மனதுக்குள் சிலாகித்தபடியே புரவிகளைச் செலுத்தினான்.

கோட்டாற்று நிலைப் படைக்குத் தலைவனாகச் செல்லும் அரையன் மதுராந்தகனுக்கு உதவியாகத் தன்னைச் செல்லும்படி பணித்த மன்னன், அரையனையும் அம்மங்கையையும் வெகு கவனமாகப் பாதுகாக்குமாறும் தனக்கு உத்தரவிட்டதை எண்ணிய அவன் முகத்தில் பொறுப்புணர்வு பிரதிபலித்தது.

ரதத்தினுள் அமர்ந்து, சாளரத்தின் வழியே பச்சைப் பசேலென்று மரகதப்பாய்

இலவசமாக ஒரு ஈகிள் டயரி என்றால், வேண்டாமென்றா சொல்லப் போகிறீர்கள்?

- ஒரு வருட கல்கி சந்தா ரூ. 156/- செலுத்துவோருக்கும் மேலும் ஒரு வருடம், சந்தாவை நீட்டித்துக் கொள்ளும் தற்போதைய சந்தாதாரர்களுக்கும் ஓர் அழகிய, கனிசமான மதிப்புடைய ஈகிள் டயரி இலவசம்.
- வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை. மணிஆர்டர் அல்லது டிராஃப்ட், 'மேனேஜர், கல்கி' என்கிற பெயருக்கு அனுப்பவும்.
- இச்சலுகை, ஸ்டாக் உள்ள வரை அல்லது ஜனவரி 20 வரை மட்டும். முந்திக் கொள்வோருக்கு முன்னுரிமை.

கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



''ஏண்டி? நான்தான் ரவை வாங்கிட்டு வர லையே, நீ எப்படி ரவை உப்புமா செஞ்சே?''

''அதான், ரேஷன்ல இருந்து சர்க்கரை வாங் கிட்டு வந்திருக்கேனே!''

- சீர்காழி வி. ரேவதி

விரித்தது போல் விரிந்த வயல்களையும் பின் னோக்கி விரைந்த மரங்களையும் பார்த்த படி, அரையனின் கரத்தில் தன் கரத்தை இணைத்துக் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் அம்மங்கை.

ஏற்கெனவே அம்மங்கை இட்டிருந்த உத்தரவின்படி அதுவரை நேர் தெற்கே விரைந்து கொண்டிருந்த அந்த ரதம், கிழக் கில் திரும்பி திருவகீந்திரபுரத்தை நோக்கி விரையலாயிற்று.

திருவகீந்திரபுரத்து ஆலயம் அன்று ஜாஜ்வல்யமாக ஜொலித்துக் கொண்டிருந் தது. தொடர்ந்து நடந்து கொண்டிருந்த உற்ச வம் காரணமாகவும் வரப் போகும் சோழ இளவரசியையும் மதுராந்தகனையும் வர வேற்பதற்காகவும் அலங்கார தீபங்களும் தோரணங்களும் தேவநாதப் பெருமாளின் அந்த ஆலயத்தையும் விமானத்தையும் பிரகாசிக்கச் செய்து கொண்டிருந்தன. 'புஷ்பபத்ரா' என்றும், பெரிய திருவடியால் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்பட்ட தால் 'கருட நதி' என்றும் வழங்கப்பட்ட நதி, ஆலயத்தை அணைத்து ஓடியதால் காற் றில் ஒரு குளிர்ச்சி கலந்திருந்தது.

வீதி முனையில் ஆரவாரம் கேட்டது. கோயிலதிகாரியும் தலைமைப் பட்டரும் வரவேற்புப் பரபரப்புடன் வாயிலுக்கு விரைந்தார்கள். அரையன் மதுராந்தகனின் இடமான கரத்தைப் பற்றியபடி அம்மங்கை இறங்கினாள். வாயிலில் நின்ற மக்கள் கூட்டத்தின் வாழ்த்தொலி பெரிதாக ஒலிக்க, கரங்களைக் குவித்து வாழ்த்துக்களை ஏற்ற அம்மங்கை, மதுராந்தகனைத் தொடர்ந்து ஆலயத்துள் பிரவேசித்தாள்.

மாறாத அதே புன்னகையுடன் உயர்த் திய அபய ஹஸ்தத்துடன் நின்ற தேவநாதப் பெருமாளைக் கண்கொட்டாமல் பார்த்த அம்மங்கைக்குத் தான் கடைசியாக அந்த ஆலயத்திற்கு வந்ததும் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளும் சித்தத்தில் வலம் வந்தன.

அரையனுடன் இணைந்து பெரு மாளைச் சேவித்தவள், சன்னிதியை விட்டு வெளிப் பிரகாரத்திற்கு வந்ததும் சட்டென்று நின்றாள். நேர் எதிரே அந்தச் சிற்ப மண்ட பம், பல தீபங்களின் ஒளியில் பிரகாசமாகத் தெரிந்தது. தொடர்ந்து வந்து கொண்டிருந்த கோயிலதிகாரியும் தலைமைப்பட்டரும் பார்த்துக் கொண்ட பார்வையில் பழங்கதை கள் நிழலாடின. இருவரையும் நெருங்கிய கோயிலதிகாரி, ''இளவரசி, திட்டிவாசல் தாளிடப்பட்டிருக்கிறது. காவலுக்கு வீரர் களும் இருக்கிறார்கள்'' என்றார்.

கலகலவென நகைத்தாள் அம்மங்கை. ''பட்டரே, அச்ச வேண்டாம்! காவலுக்கு வேறு வீரர்கள் தேவையில்லை. இதோ இவர் இருக்கிறார்'' என்று அருகில் நின்ற மதுராந்தகனை விழிகளால் சுட்டிக் காட்டி னாள்.

அந்த ஆலயத்திலிருந்துதான் அவள் கடத்தப்பட்டு பின் தன்னால் மீட்கப்பட் டாள் என்பது மதுராந்தகனுக்கும் நினைவு வரவே, திரும்பி அவளைப் பரிவுடன் நோக் கினான்.

அவள் முகத்தில் நிலவிய மகிழ்ச்சி அவ னுக்கும் மனநிறைவைத் தரவே, ''அம் மங்கை!'' என்று மெல்ல அழைத்தான்.

''ம்'' - ஒற்றை ஒலியே பதிலாக வந்தது.

''காவலுக்கு நானிருப்பதாகக் கூறி னாய்.''

''ஆம்.''

''காவலுக்கிருப்பது நானல்ல.''

''பின் யார்?''

அரையனின் குரலில் பெரும் அமைதி யிருந்தது. ''உனக்கும் எனக்கும் நம் வாழ் வுக்கும் ஏன், அனைவருக்குமே காவலாய் நிற்பவன் அவன்'' என்று தேவநாதப் பெரு மாளின் சன்னிதியைச் சுட்டிக் காட்டியவன், ''அவன் சித்தமின்றி இங்கு ஒரு அணுவும் அசைவதில்லை, அம்மங்கை'' என்றான்.

அவன் கூறியதை ஆமோதித்த ஆலயத்து மணிகள் 'டணார், டணார்' என்று பெரிதாக முழங்கின!

(முற்றும்)

பி.கு : அறிவுக் களஞ்சியங்களான நூல்களை ஆயிரத்துக்கும் அதிகமாகச் சேர்த்து வைத்திருப் பவரும் மேதை இராமானுஜத்தின் சகோதரர் மகனுமான விஜயராகவன் அவர்கள் கொடுத்து உதவிய நூல்களின் உதவியாலும் குறிப்புக்களா லும் இந்த நாவலை உருவாக்கினேன். ஆதாரங் களாக நான் பயன்படுத்திய நூல்கள் :

1. முதற் குலோத்துங்க சோழன் - டி.வி. சதா சிவ பண்டாரத்தார்
2. சோழ வம்ச சரித்திரச் சுருக்கம் - டி. ஏ. கோபிநாத ராயர்.
3. கலிங்கத்துப் பரணி
4. சங்கர சோழனுலா மற்றும் குலோத்துங்க சோழனுலா
5. மதுரைக் காஞ்சி - பத்துப் பாட்டு.
6. மூன்றாம் குலோத்துங்க சோழன் - வி.ஆர். இராமச்சந்திர தீக்ஷிதர்
7. Madras Ephigraphists' Report.
8. South Indian Inscriptions.

- விஷ்வக்சேனன்

'டாக்டர், தெரியாம நடந்து போச்சு...'

''- அபார்ஷன் செய்து கொள்ளும் முடிவோடு வரும் தம்பதிகள் அத்தனை பேரும் இதைத்தான் சொல்கிறார்கள்...'' என்கிறார் டாக்டர் லக்ஷ்மி நாகராஜன்.

''உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் என்றுதான் நாங்கள் வலியுறுத்த முயற்சி செய்வோம். ஆனால் இருபது சதவிகிதம் பேர்தான் நாங்கள் சொல்வதை ஏற்கிறார்கள்.

''அபார்ஷன் வேண்டாம் என்று நாங்கள் அறிவுறுத்தப் பல காரணங்கள் இருக்கு.



பிறக்கும் உரிமை எங்களுக்கு இல்லையா?

குறிப்பாக, முதல் முறையாகக் கருவுற்ற பெண்ணுக்கு அபார்ஷன் செய்யும் போது நோய்த்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகம். அபார்ஷன் செய்யும் போது கருப்பையில் துளை விழும் அபாயமும் இருக்கிறது. இதனால் கருப்பை நிரந்தரமாக பாதிக்கப்பட்டு, பிற்பாடு குழந்தையே பிறக்காமல் போகக்கூடிய சாத்தியக்கூறு உண்டு. 'Tube pregnancy' என்று அழைக்கப்படும் ஃப்லோபியன் டியூபில் நிகழும் கருச்சேர்க்கைக்கான வாய்ப்புகள் அபார்ஷனால் அதிகரிக்கின்றன. இந்த அசாதாரண நிலை ரொம்பவும் அபாயகரமானதும் கூட.... சரியான நேரத்தில் கண்டுபிடிக்கப்படாவிட்டால் உயிருக்கே ஆபத்தாகி விடும். சிசேரியன் ஆபரேஷனைத் தொடர்ந்து அபார்ஷன் செய்வதும் ரொம்ப அபாயமானது.

''இத்தனை அபாயங்கள் இருக்கும் போது அபார்ஷனை அரசாங்கம் சட்டபூர்வமாக்கியது ஏன் என்று நீங்கள் கேட்கலாம். சட்டபூர்வமான அங்கீகாரம் இதற்கு இருப்பதால்தான் அபார்ஷன் வேண்டுவோர் டாக்டர்களின் உதவியை நாடுகிறார்கள். இல்லாவிட்டால் அரை குறை 'மருத்துவச்சி'களிடம் போய் உயிருக்கே ஆபத்து விளைவித்துக் கொள்வார்களே!''

''டாக்டர், நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அபார்ஷன் வேண்டி வருவோருக்கு அது குறித்து எவ்விதமான வருத்தமோ குற்ற உணர்வோ இல்லை என்றல்லவா தோன்றுகிறது...?''

''குற்ற உணர்வு, திருமணமாகாமல் கருத்தரித்துவிடும் பெண்களுக்குத்தான் ஓரளவு இருக்கிறது. மற்ற பெண்களுள் குற்ற உணர்வினால் தவிப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அப்படியிருந்தால் நாங்கள் அபார்ஷனுக்கு எதிராக அளிக்கும் அறிவுரையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களே! எங்கள் அறிவுரையை ஏற்ற ஓரிரு பெண்கள், குழந்தை பிறந்து வளர்ந்து வளைய வரும் போது உணர்ச்சிவசப்பட்டு எங்களிடம் தனிமையில் சொல்வார்கள்: ''டாக்டர், அன்றைக்கு மட்டும் நீங்கள் என்னைத் தடுத்திருக்கலைன்னா இந்தக் குழந்தை இன்னிக்கு இருக்குமா...! நான் இவ்வளவு சந்தோஷமாய் இருப்பேனா...'' என்று. அத்தகைய நெகிழ்ச்சியான அனுபவம் ரொம்ப அரிதுதான்.''



''அபார்ஷன் செய்து கொள்ளும் முடிவைப் பெண்களே எடுக்கிறார்களா? அல்லது நிர்பந்திக்கப் படுகிறார்களா...?''

''ஐம்பது சதம் பெண்கள் கணவன், குடும்பத்தாரின் கட்டாயத்தின் பேரில் வருகிறார்கள். மற்ற ஐம்பது சதவிகிதத்தினர்தான் முடிவெடுப்

பதில் பங்கு வகிக்கிறார்கள். எனினும் இவ்விரு பிரிவினருமே காலப் போக்கில் குற்ற உணர்வுகளைச் கலபமாக உதறியோ மறந்தோ வாழ்கிறார்கள். பெரிய பாதிப்பு எதுவும் அவர்களிடத்தில் இல்லை.''

''அறியாமைதான் பெரும்பாலும் அபார்ஷனில் கொண்டு விடுகிறாற்போல் தெரிகிறதே, டாக்டர்...?''

''அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்! படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற விதிவிலக்கின்றி எல்லாருமே 'தெரியாம நடந்து போச்சு டாக்டர்' என்பார்கள். முன்பெல்லாம் மணமான தம்பதிகள், முதல் குழந்தை பிறந்த பிறகு ஆறு மாதங்களுக்காவது பிரிந்திருப்பார்கள். இப்போது நவீன வாழ்க்கையில் நாற்பது நாட்களிலேயே தாம்பத்ய உறவை மேற்கொள்கிறார்கள். தாய்ப்பால் புகட்டும் போது கருச்சேர்க்கை ஏற்படாது என்று தவறாக நம்புகிறார்கள். இது சரியல்ல... இந்தக் காலகட்டத்திலும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். இதைச் செய்யத் தவறினால் கருவுறும் வாய்ப்பு நூறு சதவிகிதம் உள்ளது. ஏனெனில், முதல் குழந்தை பிறந்த கையோடு, பெண்ணின் உடல்வாகு கருவுறுதலை ஏற்க முன்னைக் காட்டிலும் மிகத் தயாராய் இருக்கும்... ஐம்பது வயதைக் கடந்த ஒருசில பெண்கள், 'இனி பாதுகாப்புத் தேவையில்லை' என்ற தவறான முடிவுக்கு வந்து கருவுறுவதும் உண்டு...!''

''எத்தகைய குடும்பக் கட்டுப்பாடு முறைகளை மேற்கொள்ள வேண்டும்... பல சமயங்களில் அவை சரியாகப் பாதுகாப்பளிக்காததால் சில பெண்கள் கருவுற்று விடுவதாகச் சொல்கிறார்களே...?''

''அதுவும் உண்மைதான். நூறு சதம் பாதுகாப்பான, பக்கவிளைவுகள் அற்ற ஒரு தற்காலிக கு.க. முறை இல்லை! எனினும் ஆணுறைகள் பயன்படுத்துவதைத்தான் நான் சிபாரிசு செய்வேன் - குறிப்பாக முதல் குழந்தை பிறந்த கையோடு இம்முறையை மேற்கொள்ள வேண்டும். இரண்டாவது குழந்தைக்குப் பின் அனேகம் தம்பதிகள் கு.க. அறுவைச் சிகிச்சை முடிவை மேற்கொள்கிறார்கள்... மூன்றாவது முறையாகக் கருவுற்று, அபார்ஷன் வேண்டி வரும் தம்பதிகளிடம் மட்டும், 'கு.க. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பட்சத்தில் அபார்ஷன் செய்து கொள்ளலாம்' என்று நிபந்தனை விதிக்க முயற்சி செய்கிறோம். அதைப் பெரும்பாலும் அவர்கள் ஏற்கிறார்கள்...''

அபார்ஷன் அவசியமா?

'அபார்ஷன் கிளினிக்' 'இங்கே அபார்ஷன் செய்து கொள்ளலாம்' என்று விளம்பரம் செய்யும் மாரி ஸ்டோப்ஸ் கிளினிக்கின் பொறுப்பாளரான தாரிணி ரமேஷிடம் கேட்டோம்...

''நீங்கள் இப்படி விளம்பரம் செய்வது ஏன்?''

தாரிணி : ''அபார்ஷன் குறித்து விசாரிக்கத் தயங்குவோர், கூச்சப்படுவோருக்கு இந்த விளம்பரம் உதவும். மேலும் எங்கள் நிறுவனம் ஏறத்தாழ சேவை அமைப்புப் போல் செயல்படுகிறது. மாரி ஸ்டோப்ஸ் என்ற பிரிட்டிஷ் சேவை அமைப்பின் ஓர் அங்கம் இது. பெண்கள், குழந்தைகள் நலனுக்காக, மருத்துவ உதவிகளை மிகக் குறைந்த செலவில் அளித்து வருகிறோம்.

அபார்ஷன்கள்தான் எங்களுக்கு அதிக வருவாய் பெற்றுத் தருகின்றன. விளம்பரம் செய்ய இதுவும் ஒரு காரணம். இந்தியா முழுவதும் மாரி ஸ்டோப்ஸின் முப்பத்தோரு கிளினிக்குகள் உள்ளன. அவற்றுள் சென்னை கிளினிக் மட்டுமே அபார்ஷன் மையமாகப் பிரபலமடைந்துள்ளது என்பதைச் சொல்ல வேண்டும்...''

''அபார்ஷன் வேண்டி வரு

''அபார்ஷனே ஒரு கு.க. நடவடிக்கை என்பதை நீங்கள் ஏற்பீர்களா டாக்டர்...?''

''ஒருநாளும் அதை நான் ஏற்க மாட்டேன். இன்னும் சொல்லப் போனால் தனிப்பட்ட முறையில் நான் அபார்ஷனை ஆதரிப்பதில்லை. சில வருடங்களாக அதைச் செய்வதை நிறுத்தியும் விட்டேன். ஆனால், என் பேஷன்டுகள் அதை விரும்பினால் மற்ற டாக்டர்களை சிபாரிசு செய்கிறேன். தொடர்ந்து அவர்கள் உடல்நிலையைக் கண்காணிக்கும் பொறுப்பை நான் ஏற்கிறேன்... அபார்ஷன் என்பது தவிர்க்கப்பட வேண்டிய நடவடிக்கை.''

''நூறு சதவிகிதம் பாதுகாப்பான தற்காலிக கு.க. முறை இல்லை என்னும் போது அபார்ஷனைத் தவிர்ப்பது சாத்தியமா?''

''நூறு சதவிகிதம் தவிர்க்க முடியாவிட்டாலும் செக்ஸ் கல்வி, மற்றும் மருத்து

வோரின் மனத்தை மாற்ற முயற்சி செய்வீர்களா...?''

''முதல் குழந்தையாய் உள்ள பட்சத்தில் அப்படிச் செய்வோம்...''

''அபார்ஷன் — கிளினிக் என்று விளம்பரம் செய்வது எப்படி சரியாகும்? தவிர்க்கப்பட வேண்டிய ஒரு விஷயத்தை விளம்பரம் செய்யலாமா...?''

''இந்த நாட்டில் சிகரெட்டுக்கு விளம்பரம் இல்லையா... அதற்காக எல்லோருமே சிகரெட் பிடித்து விடுவதில்லை! மேலும் அபார்ஷன் என்பது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் ஒரு முறை என்று நாங்கள் நம்புகிறோம். அரசாங்கமே ஐந்து மாதம் வரை அபார்ஷன் செய்வதைச் சட்டபூர்வமாக அனுமதிக்கிறதே.''

''மணமாகாத பெண்களுக்கும் நீங்கள் அபார்ஷன் செய்து கொள்ள வசதி அளிக்கிறீர்கள் அல்லவா...?''

''ஆமாம் ஒரு நாளில் பத்து அபார்ஷன்கள் செய்கிறோம். அவற்றில் சுமார் 4-5 கேஸ்கள் மணமாகாத பெண்களுடையவை...''

'' 'அபார்ஷன் கிளினிக்' என்று விளம்பரப்படுத்தும் போது முறைகேடான உறவுகளுக்கு லைசென்ஸ் வழங்குவதாகாதா?''

''அப்படி நாங்கள் கருதவில்லை. அபார்ஷன், உணர்வுபூர்வமாகவும் வேறு புறக் காரணங்களுக்காகவும் அவசியமாகும்போது ஒரு பெண்ணுக்கு அதைக் கிடைக்கச் செய்கிறோம்... அது எப்படித் தப்பாகும்?''


மேரி ஸ்டோப்ஸ் கிளினிக்கின் அபார்ஷன் எண்ணிக்கைக் குறியீடு வரைந்து வைத்திருக்கிறார்கள்.

'90 — 161

'91 — 705

'92 — 1395

எண்ணிக்கை அதிகரிப்பு நமக்கு மகிழ்ச்சி தரவில்லை.



மேரி ஸ்டோப்ஸ் கிளினிக்கின் சித்தாந்தத்தை விளக்கும் ஒரு போஸ்டரும் சுவரில் தொங்குகிறது : 'தன் மகப்பேறு உரிமையைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் காலம் வரும் வரை எந்தப் பெண்ணும் முழுமையான சுதந்திரம் அடைவதில்லை' என்ற பொருள் கொண்ட ஆங்கில வாக்கியம். (போட்டோ.)

மகப்பேறு அடைகிற அல்லது மறுக்கிற உரிமையில் கணவனுக்கு எவ்வளவு பங்குண்டோ அவ்வளவுக்கு மனைவிக்கும் உண்டு என்பது உணரப்பட்டு, ஆணின் மேலாதிக்கம் தவிர்க்கப்படும் போது மேற்படி வாசகத்துக்கும் அவசியம் இராது. தேவை : கணவனுக்கும் மனைவிக்குமிடையே பரஸ்பர அன்பு, ஒத்துழைப்பு, மனம் விட்டுப் பேசுதல்.

வர்களிடம் தருந்த ஆலோசனை பெறுவதன் மூலம் அபார்ஷன் சாத்தியக்கூறுகளைக் கணிசமாகக் குறைக்கலாம். கூச்சப்படுவதாலும் 'எதுவும் நடந்து விடாது' என்று நம்புவதாலும்தான் பெரும்பாலானோர் அபார்ஷன் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். மேலும் நம் நாட்டில் பெண்கள்தான் கு.க. முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலை ஏறக்குறைய மரபாகவே ஆகி வருகிறது. இதில் அசௌகரியங்களும் அபாயங்களும் அதிகம் - தவிர, அபார்ஷன் நிலைக்குத் தள்ளப்படும் போது பெண்ணின் உடல் நிலைதானே மீண்டும் பாதிக்கப்படுகிறது? இதனால் ஆண்களின் ஒத்துழைப்பும் அனுசரணையும் மிக மிக அவசியமாகிறது. ஆணுறைகள் பயன்படுத்த அவர்கள் தயங்கக் கூடாது.''

''மணமாகாத பெண்கள் அபார்ஷன் கோரி வருவது அதிகரித்து வருகிறது என்பது உண்மையா...?''

''ஆமாம்! அது வருந்தத்தக்க உண்மை. இதில் மிகப் பெரிய சோகம் என்னவெனில் அங்கும் அறியாமைதான் விளைவுகளுக்குக் காரணமாகிறது. எத்தனையோ இளம் பெண்களுக்குத் தாங்கள் ஈடுபடும் செயலின் பின் விளைவு என்னவாயிருக்கும் என்பது தெரிவதில்லை. போதாக்குறைக்கு உணர்வுகளைத் தூண்டும் பத்திரிகை, டி.வி. போன்ற சாதனங்கள்.... விவரம் புரிவதற்குள் இவர்கள் 'அபார்ஷன்' என்னும் விளிம்புக்கு வந்து நிற்கிறார்கள்! அதனால்தான் விஞ்ஞான ரீதியான, - உணர்வுகள் கலப்பற்ற - செக்ஸ் கல்வி என்பது முக்கியமாகிறது. அதுவும் எய்ட்ஸ் அபாயம் பரவி வரும் இந்நாளில் அது அத்தியாவசியமாகிறது. ஆரோக்கியமான குடும்பச் சூழல், பெற்றோரின் அரவணைப்பு - இவையும் முக்கியம்.

தொகுப்பு : சீதா ரவி

கடிகாரம் நமது கையில்!

"டைமே இல்லை!" - இதுதான் இன்று எல்லாக் குடும்பங்களிலும் ஒலிக்கும் காலை கீதம், மாலை வணக்கம், இரவு நேர விடை பெறல்.... எல்லாமே!

"இப்படி குட்மார்னிங், ஹலோ சொல்ற மாதிரி 'டைம் இல்லே' என்று அலுத்துக்கறதை என்னால் புரிஞ்சுக்கவே முடியலை..." என்கிறார் வித்யா (அட்டைப் படம்) இவர் தனியார் பதிப்பகம் ஒன்றின் மார்க்கெடிங் பிரிவில் பொறுப்பான பதவியில் இருக்கிறார். "அதுவும், ஒருநாள் வீட்டு வேலை செய்யும் பணியாள் வரவில்லையென்றால் அவ்வளவுதான்; உலகமே அஸ்தமித்து விட்ட மாதிரி புலம்புகிறார்கள். அன்று முழுக்க மூட் அவுட்; குழந்தைகள் பேரில் எரிச்சல். ஒரு நாளை அப்படியே கசக்கிக் குப்பையில் போட்டு விடுகிறார்கள்!"

- இப்படிச் சாடும் வித்யா, வீட்டு வேலைக்கு ஆள் வைத்துக் கொள்ளாமலே சமாளிக்கிறார்.

"காலையில் ஆறு மணிக்கு எழுந்திருக்கிறேன். எட்டரை மணிக்குள் சமையல் முடித்து, துணி துவைத்து, குளித்து, குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் செய்து, சாப்பிட்டு, மதிய உணவு 'பாக்' செய்து.. எல்லாவற்றையும் நானே முடித்து விடுகிறேன். மாலை வீடு திரும்பிய பின் வீட்டைச் சுத்தம் செய்து, குழந்தைகளுடன் கணிசமாக நேரம் செலவிடுகிறேன். இரவுச் சமையல் செய்து..." - கேட்கும் போதே நமக்கு மூச்சிரைக்கிறது. வித்யாவோ, அந்தப் பின்மாலை நேரத்திலும் டீ.வி. விளம்பரத்தில் தோன்றும் இல்லத்தரசி போலப் பொலிவுடன் இருக்கிறார்...

நேரம் ஒரு பிரச்னை இல்லை என்று வித்யாவைப் போல் சொல்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். வேலைக்குப் போகும் ஏனைய சில பெண்கள் சொல்வதைக் கேட்டோம் :

"நான் குழந்தையாயிருந்த போது என் அம்மா என்னுடன் செலவிட்ட நேரத்தையெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன்... அதில் ஒரு சிறு பகுதியைக் கூட நான் என் குழந்தைகளுக்காகச் செலவிடுவதில்லை. சில சமயம் குற்ற உணர்வு ரொம்ப வாட்டுகிறது..." என்கிறார் கீதா. * இத்தனைக்கும் இவர் பகுதி நேர வேலைக்குத்தான் போகிறார்.

பள்ளி ஆசிரியையான சித்ராவுக்கு இரண்டு குழந்தைகள். "இருவருக்கும் அடிக்கடி உடம்புக்கு வருகிறபோது பெரிய பிரச்னையாகி விடுகிறது. அம்மாவுக்காகக் குழந்தைகள் ஏங்குவதால்தான் இப்படி நோய் நொடி வருகிறது என்று குடும்பத்தினர் சொல்லும்போது அந்த நிமிஷமே வேலையை விட்டுவிட்டு நிம்மதியாகக் குழந்தைகளுடன் இருந்துவிடலாம் என்று தோன்றுகிறது. ஆனால் அந்த முடிவும் தப்பாகி விடுமோ என்று தயக்கமாயிருக்கிறது..."

"மேற்கொண்டு படிக்க ஆசைதான். ஆனால் என் குழந்தைகளுக்கு ஹோம் ஒர்க்கில் உதவி செய்யவே நேரம் சரியாயிருக்கு..." - வேலைக்குப் போகாத தமிழரசியின் ஸ்டேட்மெண்ட் இது.

தாய்க்குலத்தின் டைம் மேனேஜ்மெண்ட் 'குழந்தைகள்' என்ற மையப்புள்ளியைச் சுற்றியே வலம் வருவதைத்தான் இவர்கள் அத்தனை பேரின் வாக்குமூலங்களும் பிரதிபலிக்கின்றன.

இவர்கள் மறந்து விடுகிற முக்கியமான விஷயம் : குழந்தைகளுடன் எவ்வளவு நேரம் செலவழிக்கிறோம் என்பதல்ல; அந்த நேரத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதே. வேலைக்குப் போகாமல் நாள் முழுவதும் குழந்தைகளுக்காகவே செலவிட்டாலும், அந்த நேரம் பயனுள்ளதாக இல்லாவிட்டால் குழந்தையின் உடல், மன வளர்ச்சி சரியாக இராது. ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம்தான் ஒதுக்க முடிகிறது என்றாலும் அதை முழுமையாக அவர்களுக்கென்றே செலவிட்டு, அன்பும் ஆதரவும் காட்டி, அவர்கள் பிரச்னைகளுக்குக் கைகொடுத்து, தன்னம்பிக்கை ஊட்டி, சொந்தக் காலில் நிற்கப் பழக்கி, சிறந்த குடிமக்களாக உருவாக்கலாம்.

'தந்தைக் குலம்' கொஞ்சம் பங்கேற்பதன் மூலம் வாழ்க்கையை எளிமையாக்கக் கூடாதா...?' என்ற கேள்வி கேட்போருக்கு இதோ சில சாம்பிள் பதில்கள் :

"வீட்டுக்கு வெளியே உள்ள அத்தனை வேலைகளையும் நான்தான் செய்கிறேன்."

"குழந்தையைப் பள்ளியில் டிராப் பண்ணி, அழைத்து வந்து விடுகிறேன்..."

"இரவு எத்தனை நேரமானாலும் என் பிள்ளைக்குக் கதை சொல்லிவிட்டுத்தான் தூங்குவேன்..."


"பையனுக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுத்ததே நான்தான். நேரம் செலவு செய்யாமலா அதெல்லாம் முடிகிறது...?"

* வித்யா தவிர மற்ற பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.



இதையெல்லாம் கட்டிக் காட்டிய போது, ''இதெல்லாம் எப்படிப் போதும்...? அன்றாட நடவடிக்கைகளில் எங்களுக்கு என்ன உதவி...? பையனைக் குளிப்பாட்டி, 'உடம்பைத் துடைத்து விடுங்க...' என்று கணவனிடம் சொன்னால், 'எனக்கு டைம் ஆயிடுச்ச' என்று குளிக்கப் போய் விட்டார்... இன்னைக்கு ஒரே சண்டைதான்...'' என்று யுத்த காண்டம் படிக்கிறார் பானு!

''இப்படிச் சின்ன விஷயத்துக்கெல்லாம் மாய்ந்து, மருகி, சண்டை போடுறதாலதான் உருப்படியான விஷயங்களுக்கு நேரமில்லாமப் போகுது...'' என்கிறார் வித்யா. ''ஒரு விஷயத்தை நாம் மறந்து விடுகிறோம். நம் தலைமுறையைச் சேர்ந்த ஆண்களுக்கெல்லாம் வீட்டு வேலையில் பங்கு எடுத்துக் கொள்ளும் மனோநிலை கிடை



யாது - அல்லது மிகக் குறைவு. காரணம் அவர்கள் வளர்க்கப்பட்ட விதம். முப்பது வயதில் அந்த மனோநிலையை மாற்ற முயற்சி செய்வதைவிட நாம், நமது ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் ஒரே வகையான மனோநிலையூட்டி வளர்ப்பதில் கவனம் செலுத்துவது புத்திசாலித்தனம். இதற்கு உதவவும் ஒத்துழைக்கவும் கணவன்மார்களும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களும் முன் வந்தாலே போதும்... போராட்டத்திலும் மனக்கசப்பிலும் நேரம் வீணாகாமல் பாஸிடிவ்வான சூழ்நிலை நிலவும்.''

''சொல்வதற்கு ரொம்பவும் சுலபமாய்த்தான் இருக்கிறது...'' என்கிறோம் வித்யாவிடம்.

''நடைமுறையும் சுலபம்தான். நம் மனசுதான் எல்லாவற்றுக்கும் காரணம். 'பிடிவாதத்தைத் தளர்த்துவேன்; நல்ல யோசனைகளை ஏற்பேன்' என்ற மனப் பக்குவம் ஏற்பட்டு விட்டால் எல்லாமே எளிதாகிப் போகும். என்னால் இதை இதை, இந்த நேரத்துக்குள் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.''

''செய்ய இயலாமற் போனால்...?''

''முக்கியமானவற்றை முடித்து விடுவேன். ஒத்திப் போடக் கூடியதை ஒத்திப் போடுவேன். அதற்காக என்னையோ, மற்றவர்களையோ, வாழ்க்கையையோ நான் நொந்து கொள்வதில்லை...

''நான் இந்த மனோநிலையை எட்டுவதற்கு மிகவும் உதவியாய் இருந்தது வாஸ்வானி என்ற அறிஞர் ஒருவரின் டெக்னிக். அந்த டெக்னிக் இதுதான் :

காலை எழுந்ததும் நம்மை நாமே மூன்று கேள்விகள் கேட்டுக் கொள்ள வேண்டும் :

1. என்னை எனக்கே பிடித்திருக்கிறதா?
2. இன்றைய பொழுதை நான் ஆக்கபூர்வமாய்க் கழிப்பேனா?
3. இன்றைய பொழுதைப் புலம்பலிலும் புகார் சொல்வதிலும் கழிப்பேனா...?

இந்த மூன்று கேள்விகளுக்கும் உரிய பதில்கள் என்னவாக இருக்க வேண்டும் என்பது நமக்கே தெரியும். அந்த பதில்களை நமக்கு நாமே சொல்லிக் கொள்வோம்...''

- அலமு

அட்டையில் : வித்யா, மீனாட்சி சுந்தரம், வைத்யா, சுப்ரியா

வண்ணப்படம், குடும்ப உறவுகள் சிறப்புக் கட்டுரைகளுக்கான மற்ற படங்கள் : கோபிநாத்

பூவுலகத்தில் ஒரு சுவர்க்கம் போல் விளங்கிற்று, ராவணனின் அரண்மனை. ராவணனுடைய நிகரற்ற பராக்கிரமத்துக்கும் பலத்துக்கும் தகுந்த அரண்மனையாகவே இருந்தது. தோட்டமும் தோட்டத்தில் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்த பறவைகளும் ஆங்காங்கே மனத்தைக் கவரும் சித்திரங்களால் சித்திரிக்கப்பட்ட விஹார ஸ்தலங்களும் கண்டு ஹனுமான் ஆச்சரியத்தில் மூழ்கினான்.

'ஆகா! என்ன செல்வம்! என்ன அற்புத சுகம்!' என்று வியந்தான். உடனே வியப்பு கலைந்து, 'ஜானகியைக் காணவில்லையே! வந்த காரியம் முடியவில்லையே! அற்புதங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போவதில் என்ன பயன்?' என்று ராம காரியக் கவலையில் மூழ்கினான்.

அந்த மாளிகைகளுக்கிடையில் ராவணனுடைய பிரத்தியேக அரண்மனைக்குள் சென்று அங்கே எல்லா பாகங்களிலும் நுழைந்து பார்த்தான். 'இது சுவர்க்கமோ? இது தேவலோகமோ?' என்று ஆச்சரியமடையும்படியான அலங்காரங்களும் தங்கமும் வெள்ளியும் தந்தமும் ரத்தினங்களும் முத்தும் மிக நுண்ணிய சிற்ப வேலை செய்த கம்பங்களும் சித்திர வேலைப் பண்டங்களும் கண்டான். மத்தியில் புஷ்பக விமானத்தைப் பார்த்தான்.

அது பிரம்மாவிடம் குபேரன் அடைந்த அற்புத விமானம். குபேரனை ஜெயித்து ராவணன் அதை லங்கைக்குக் கொண்டு வந்து வைத்திருந்தான். வசிஷ்டருடைய பசுவைப் போல் எதை வேண்டினாலும் தரும் அந்த அற்புத விமானத்தைப் பார்த்தான்.

ராவணனுடைய அந்தப்புரத்தில் நுழைந்தான். அது ஒரு போக சமுத்திரமாகவே இருந்தது. எண்ணற்ற அழகிய ஸ்திரீகள் தூங்கிக் கொண்டிருந்த அந்த விஸ்தாரமான இடம், பல நிறப் பூங்கொடிகள் நிறைந்த வனம் போல் பிரகாசித்தது. வந்த காரியத்தை அனுசரித்து ஹனுமான் படுத்திருந்த ஸ்திரீகளையெல்லாம் பார்த்தான். படுத்துத் தூங்கியிருந்த அவர்கள் ஒருவரைக் காட்டிலும் ஒருவர் சௌந்தரியமாகவும் காம மயக்கத்தில் ஈடுபட்டவர்களாகவும் காணப்பட்டார்கள். எல்லாருமே சந்தோஷமாகவும் சம்மதமாகவும் இருந்த காட்சியை மாருதி அங்கே பார்த்தான். ராவணனுடைய காமரூபச் சக்தியும் பௌருஷமும் அந்த திவ்விய சௌந்தரிய ஸ்திரீகளை முற்றிலும் வசப்படுத்தியிருந்ததைக் கண்டான்.

"இந்த ஸ்திரீ கூட்டத்தில் சீதை இல்லையென்பது நிச்சயம். அவள் ஒரு நாளும் அரக்கனுக்கு வசப்பட்டிருக்க மாட்டாள் அல்லவோ? அவளை இங்கே நான் தேடுகிறேனே. நான் எவ்வளவு பைத்தியக்காரன்! சீதை இவர்களுக்குள் ஒருத்தியாக இருக்க முடியாது" என்று தீர்மானித்தான்.

பிறகு பார்த்துக் கொண்டே சென்றான். ஒரு அறையில் அநேக சிறந்த சயனாசனங்களைக் கண்டான். தந்தமும் தங்கமும் வைடூரியங்களும் இழைத்த பல அழகிய மஞ்சங்களுக்கிடையில் ஒரு மிகச் சிறந்த மஞ்சத்தைக் கண்டான். அதன்மேல் மேருமலை படுத்துத் தூங்குவதைப் போல் படுத்திருந்தான் ராவணன். அந்த அரக்கனுடைய வடிவத்தின் கம்பீர அழகும் பொலிவும் ஹனுமானை ஒரு கணம் நடுங்கச் செய்தது.

ஒதுங்கி நின்று பார்த்தான். யானை துதிக்கைகளைப் போன்ற கைகளும், மார்பில் ஐராவத யானையின் தந்தத்தால் குத்துப்பட்ட காயக்குறியும் உடம்பில் இந்திரனுடைய வஜ்ராயுதத்தாலும் விஷ்ணு சக்கரத்தாலும் உண்டான வடுக்களும் பார்க்கப் பார்க்க அரக்கனுடைய கம்பீர அழகு, மாருதியின் மனத்தைக் கவர்ந்தது.

அதன்மேல் அங்கே கற்றிலும் படுத்துத் தூங்கும் பல ஸ்திரீகளைப் பார்த்தான். கீதம்பாடிக் கொண்டே தூங்கிப்



போன பல ஸ்திரீகள் அவரவர்களுடைய வாத்தியச் சாமான்களைக் கட்டிக் கொண்டு அப்படியே கிடந்தார்கள்.

அப்பால் ஒரு திவ்விய மஞ்சத்தின் மேல் ஒரு ஸ்திரீ படுத்திருந்ததைக் கண்டான். அந்தப்புரத்துத் தலைவியாக விளங்கினாள். அவளுடைய அவயவ அழகும் முக லக்ஷணமும் கண்டு இவளே சீதை என்று ஹனுமான் ஒரு க்ஷணம் சந்தேகித்தான். முகத்தில் உத்தம குணங்களைக் கண்டான். 'கண்டு விட்டேன்' சீதையை என்று குதித்தான். அடுத்த க்ஷணம் ''சீ! இது என்ன மடமை! சீதை இப்படி சுகமாகத் தூங்குவாளா? இப்படி ஆபரணங்கள் பூண்டு அன்னிய புருஷனுடைய அறையில் படுப்பாளா? இப்படி நான் எண்ணியது பெருங் குற்றம்'' என்று தனக்குள் சொல்லித் துயரத்தில் மூழ்கினான்.

பிறகு, ''தனக்குச் சம்மதிக்காத படியால் சீதையை இந்த அரக்கன் கொன்று விட்டேயிருப்பான், நான் தேடித் தேடிச் செல்வதில் என்ன பயன்?'' என்று எண்ணினான்.

ராவணனுடைய அந்தப்புரம் முழுதும் பார்த்து விட்டான். படுக்கும் இடம், சாப்பாட்டுச்சாலை, பான சாலை, சங்கீத சாலை, இன்னும் பல இடங்களும் நன்றாகத் தேடிப் பார்த்தாயிற்று. எங்கும் சீதையைக் காணவில்லை.

''சீதையைத் தேடிக் காண்பதற்காக நுழையக் கூடாத இடமெல்லாம் நுழைந்து பார்த்தேன். ஸ்திரீகள் படுத்திருக்குமிடம் புகுந்து தருமத்

ஸ்ரீரங்கன்

பொன்மலர்

ஜனவரி '94

* எங்களை ஆளும் ஐயப்பன்
* ஆனந்தம் தரும் ஆதித்ய ஹ்ருதயம்
* ராகுகாலம் பார்க்க எளிய வழி
* ஸ்ரீ பரமாச்சாரியாள் கட்டுரை
* ஸ்ரீ ஜெயேந்திரர் பதில்கள்

தைக் கூட ஓரளவு புறக்கணித்து விட்டேன். காரியம் சித்தியாகவில்லை'' என்று துயரப்பட்டு பானசாலையை விட்டு வெளியே தோட்டத்துக்குள் சென்று அங்கே பற்பல கொடிகளால் பின்னப்பட்ட பந்தல்களிலும் கொட்டகைகளிலும் விஹார ஸ்தலங்களிலும் தேடினான். எங்கும் காணவில்லை.

''லங்கா நகரம் முழுதும் பார்த்தாகி விட்டது. ராவணன் அரண்மனை முழுதும் தேடியாகி விட்டது. இனி என்ன இருக்கிறது? சீதையைக் காணாமல் திரும்புவதா? இங்கேயே என் உயிரைத்தான் விடவேண்டும். அதுவே நான் செய்யக் கூடியது'' என்று தீராத துக்கத்தில் மூழ்கினான்.

மறுபடியும் ''சீ! சீ! இப்படி மனத் தாழ்ச்சி அடையலாகாது. தீரனுக்கு இது தகுந்த லக்ஷணமல்ல'' என்று கிளம்பி, மறுபடியும் ஓர் அங்குலம் மிச்சமின்றி எல்லா இடங்களையும் நன்றாகக் கவனித்துத் தேடிப் பார்த்தான். மூடியிருந்த கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து பார்த்தான். கோர ரூபமான ராக்ஷஸப் பெண்களையும், மிக சவுந்தரியமான பல மானுடப் பெண்களையும் நாக கன்னிகைகளையும், அரக்கன் அபகரித்து வந்த பல அழகிகளையும் கண்டான். சீதையைக் காணவில்லை.

இன்னது செய்வது என்று தோன்றாமல் ஹனுமான் மனம் மிகத் தத்தளித்தது. ''காரியம் கைகூடவில்லையென்று கிஷ்கிந்தைக்குத் திரும்பினால், கேட்போருக்கு நான் என்ன சொல்லுவேன்? சீதையைப் பற்றி இனி ஆசையில்லையென்றால் ராமன் கதியென்னவாகும்? உயிரை விடுவான். அதற்குப் பிறகு மற்றவர்கள் கதியென்ன? என் முயற்சி வீணாயிற்று என்று சுக்ரீவனிடம் சொல்வதைவிட இங்கேயே நான் காட்டிலும் சமுத்திரக் கரையிலும் வாழ்நாளைக் கழித்து விடுவது மேலாகும். அதுதான் ஏன்? தற்கொலை செய்துகொள்வதே நலம். சீதை லங்கையில் இருக்கிறாள் என்று சம்பாதி சொன்ன சொல் பொய்யா? அல்லது இவ்விடத்தில் இருந்தவள் துஷ்ட ராக்ஷசனால் கொல்லப்பட்டாளா? அவளை அரக்கிகள் தின்று விட்டுமிருக்கலாம். ஒன்றும் தோன்றவில்லையே. என்ன செய்வேன்!'' என்று இப்படி ஹனுமான் பல வாறாகச் சிந்தித்துச் சிந்தித்துக் கவலைக் கடலினின்று கரையேற வழி தெரியாமலிருந்தான். அச்சமயம் உயர்ந்த மதிலால் சூழப்பட்ட ஒரு விஹார வனத்தைக் கண்டான்.


''**ஆ**ஹா! இந்த இடம் நான் தேடவில்லை. இங்கே கட்டாயம் சீதையைக் காண்பேன்!'' என்று வாயு புத்திரன் ராமன், லக்ஷ்மணன், சீதை, சுக்ரீவன் இவர்களைத் தியானித்தான். ருத்ரன், இந்திரன், யமன், வாயு, சந்திரன், சூரியன், மருத் கணங்கள் இவர்களை மனதால் வணங்கிப் பிரார்த்தனை செய்தான்.

''இது ஒரு தனி நந்தவனமாக இருக்கிறது. நன்றாகக் காக்கப்பட்டு வருகிறது. இவ்விடத்திலே சீதை வைக்கப்பட்டிருக்கிறாள் என்பது நிச்சயம்'' என்று ஹனுமானுடைய உள்ளத்தில் ஒரு நம்பிக்கை தோன்றிற்று.

மறுபடியும் தேவர்களையெல்லாம் நமஸ்கரித்து விட்டு, அந்த அசோக வனத்துச் சுவர்மேல் குதித்து ஏறி நின்றான். மிக அழகிய ஒரு உத்தியான வனம் கண்டான்.

(தொடரும்)

எதிர்காலத்திற்காக திட்டமிடும் தருணம் இன்றே.



உத்தியோகக் கவலைகள், நம்பிக்கைகள் மற்றும் ஆசை அபிலாஷைகள். எதிர்காலத்திற்கான திட்டங்கள்... ஓய்வு காலம் மற்றும் அத்துடன் கூட வரும் பிரச்சனைகள். இத்தகைய நாளைக்காக திட்டமிடும் தருணம் இன்றே!

மிகக் குறைந்த வயதான 18 இல் அதாவது 18-23 வயதுப் பிரிவில் நீங்கள் இருந்தால் இத்திட்டத்தில் சேரலாம். மிகச் சிறிய தொகையான ரூ.2500 செலுத்தி உங்கள் முதுமைப் பருவத்தில் ரூ.5 இலட்சம் வரையிலான மருத்துவமனை செலவுகளை உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் தீர்க்க இத்திட்டம் வழிவகுக்கிறது. நீங்கள் செலுத்தும் தொகையை சுட்டிக் காட்டும் அட்டவணை இதோ. நீங்கள் செலுத்த வேண்டிய சரியான தொகையை அறிய, எங்கள் இலவச பிரசுரத்தை எந்த யூ.டி.ஐ கிளை யிலிருந்தும் பெறுங்கள்.

வயது	ரூ.	வயது	ரூ.
18	2500	40	9800
25	2800	45	15300
30	4200	50	24500
35	6300		

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டுடன் கூட்டிணைப்புடன் இத்திட்டத்தை உங்களுக்கு வழங்குகிறது யூ.டி.ஐ. இந்தியா முழுதும் பெரும்பாலான முக்கிய நகரங்களிலுள்ள 100 புகழ்பெற்ற மருத்துவமனைகளில் மருத்துவ செலவுகளை தீர்க்கும் வசதி உங்களுக்கு கிடைக்கிறது. மேலும் பல மருத்துவமனைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

இத்திட்டத்தில் நீங்கள் சேருங்கள் அல்லது உங்கள் பெற்றோர்களுக்கு உங்கள் அன்பின் காணிக்கையாக இதை வழங்குங்கள்.

இந்த புதுமையான, ஜனரஞ்சகமான திட்டம் மறுபடியும் விற்பனைக்கு வந்துள்ளது! டிசம்பர் 1, 1993 முதல்.

சிறப்பம்சங்கள்

- ஒருமுறை மட்டும் இத்திட்டத்தில் முதலீடு செய்யுங்கள். உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் இத்திட்டம் பூரண பாதுகாப்பு அளிக்கிறது.
- இந்தியாவில் ரூ.5 இலட்சம் வரையிலான மருத்துவமனை செலவுகளை தீர்க்கும் வசதி.
- உங்கள் சீனியர் சிட்டிசன்ஸ் அடையாள அட்டையை நியமிக்கப்பட்ட மருத்துவமனைகளில் காட்டுங்கள்; கையொப்பமிடுங்கள் மற்றும் சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் வெளியேறுங்கள்.
- 60 வயது வரையுள்ள நபர்கள் இத்திட்டத்தில் ஜூன் 1994 வரை சேர முடியும்.
- மருத்துவமனை நற்பயன்களை இழக்காமல், 61 ஆம் வயதில் திட்டத்தின் கீழுள்ள திரும்பப்பெறாத தொகையை எடுத்துக்கொள்ளும் வசதி.
- வருமான வரிச்சட்டம் பிரிவு 80 டீ கீழ் ரூ.10,000 வரை வரிச்சலுகை.
- சில கூடுதல் முதுமைக்கால நற்பயன்களைப் பெறும் வாய்ப்பு.

SENIOR CITIZENS' UNIT PLAN

உங்கள் ஓய்வு கால கவலைகளை ஒரு மொத்தமாக தீர்க்கிறது.


இத்திட்டத்தை **யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா** கூட்டிணைப்புடன் உங்களுக்கு வழங்குகிறது.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம். லிட்.
இந்தியாவின் மிகப் பெரிய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம்

எல்லா செக்யூரிட்டி முதலீடுகளும் மார்க்கெட் சிக்கலுக்கு கட்டுப்பட்டவையாகும். முதலீடு செய்யும் முன்பு உங்களுடைய முதலீட்டு ஆலோசகரை அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர். போன்: 210399 • சென்னை. போன்: 517101, 537190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 35619.

UTI 154.93 TMB



விட்டில் வீடு

“யாரங்கே! ஜானகிராமா, சந்திரசேகரா, மைதிலி, வைஜெயந்தி, பிள்ளைகளா, வாருங்கள் இங்கே.''

உற்சாகத் துடிப்புடன் உள்ளே நுழையும் ராமபத்திரன் குரலில் மோனிகா செலஸ் துள்ளல். அறுபத்தைந்து வயதிற்கு அத்தனை வீரியம் யாருக்கும் சாத்தியமா தெரியவில்லை. வெற்றிக் களிப்பும் வெற்றிலைக் கதுப்புமாக - அப்படி என்ன சாதித்து விட்டார், இப்படித் துள்ள?

கூடத்து ஊஞ்சலில் ராமபத்திரன் ஒயிலாக உட்காருகிறார். அருகே, இன்றும் மாறாத மரியாதையுடன் ரவிவர்மா சீதை போன்ற போஸில் (ஓல்டு எடிஷன்) தலை நரைத்த தர்மபத்தினி. எதிரே, தூணோடு ஒட்டினாற்போல் புகையிலை நிரம்பிய வாயுடன் ஆஞ்சநேயர் கெட்-அப் ஜானகிராமன் (வயது 40). வாரப் பத்திரிகையின் அசட்டுத் தொடர் கதையில் ஆழ்ந்தபடி சந்திரசேகரன் (வயது 43.) அவரவர் பின்னால் அவரவர் மனைவியர். மூன்றாவது தலைமுறை மருமகள்கள் இருவர், சமையலறையில் ஏதோ சப்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கருமமே கண்ணாயினார். வாலிபப் பிள்ளைகள் வீட்டில் இல்லை. அது சரி; ராமபத்திரன் என்ன சொல்லப் போகிறார்?

''போஸ்டாபீஸ"க்குப் போயிருந்தேனா? போஸ்ட் மாஸ்டர் புதுசா வந்திருக்கான். என்ன வயசுங்கறே? இருபத்தேழாம்! நாலு வார்த்தை பேசிண்டிருந்தேன். ரொம்பக் கிட்ட வந்துட்டான்! பயல் யார் தெரியுமோ? நம்ம மாயவரம் இச்சாமியோட பேரன்! கல்யாணம் ஆயிடுத்தாடான்னேன். இல்லை மாமான்னான். பளிச்சுனு மனசுல நம்ம லலிதா ஞாபகம்தான் வந்தது. சொன்னேன், என் ரெண்டாவது பையனோட பொண்ணு இருக்கா. பண்ணிக்கிறியாடான்னு. எனக்கொண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை; ஆத்துல வந்து பேசுங்கோன்னுட்டான். பய எப்படி இருக்கான் தெரியுமோ? கம்மா கார்த்திக், கமலஹாஸன் மாதிரி. டிராயர் போடாம, விரல் சூப்பிண்டு மாயவரத்துல புரண்டுண்டு கிடப்பான். அப்ப பார்த்தது. என்னமா வளந்துட்டான்?''

''அட! லலிதாவுக்கு இடம் பார்த்தாச்சா? பேஷ்!'' சந்திரசேகரன் சிலிர்த்தெழுந்தார். அனுமார் ஜானகிராமன் புகையிலையைத் துப்பி வர அவசரமாய் வெளியே போனார். கரை பெயர்ந்த வீட்டுச் சுவர்களுக்கும் உற்சாகம் தொற்றிக்



கொண்டது.

வாசலில், மாவசிக மோட்டார் சைக்கிளிலிருந்து ஜக்கு இறங்கினான். அந்த வீட்டின் லாஸ்ட் எடிஷன். ஜானகிராமனின் இலவச இணைப்பு.

உள்ளே வைஜெயந்தி. உடனடியாகக் கேஸரி கிளறப் போவதாகத் தலைப்புச் செய்திகள் சொன்னாள்.

''டேய், ஜக்கு! அப்படியே போ. பக்கத்தாத்து மாமிகிட்ட ஸ்டவ் பின் வாங்கிண்டு வா. ஓடு. உன் அக்காவுக்கு கல்யாணம் ஆகப் போறதுடா!''

ஜக்கு தயங்கினான். பக்கத்து வீட்டுக்கா? ஐயோ, கடவுளே! அங்கே மாலினி இருப்பாளே!

மாலினி ஒன்றும் பிரம்மராட்சஸி அல்ல. ஆறாங்கிளாஸ் ஜக்குவின் கிளாஸ் மெட். எப்போதும் காதோரம் பூ செருகிய ரெட்டைப் பின்னல் தேவதை. நொடிக்கொருதரம் சிரிப்பாள். சிரித்தால் கன்னத்தில் குழி விழும். ஜக்குவோடு அவள் ஒன்றும் 'டூ' இல்லை. ஜக்குதான் அவள் பேச்சு 'டூ'. கடந்த அரையாண்டுத் தேர்வில் அவனை இரண்டாமிடத்திற்குத் தள்ளி விட்டவள் அவள். அவன் ஆண்மை என்னாவது? அவள் சிரிக்கும்போதெல்லாம் அடி வயிற்றில் என்னமோ சங்கடம் எழுகிறது.

அடுத்த பரீட்சையில் ஜக்கு தன்னை மறுபடி நிரூபிப்பான். அதுவரை அவளைப் பார்க்க மாட்டான். அவளோடு பேச மாட்டான். ஆனால் இப்போது மன்னி, அவள் வீட்டுக்குப் போகச் சொல்லுகிறாள். எப்படிப் போவது? மாலினி அவனைப் பார்த்து விட மாட்டாளா? அவளுக்கு முன்னால், அவள் அம்மாவிடம் ஸ்டவ் பின் இரவல் கேட்பதா? நடக்காது. ஒருக்காலும் நடக்காது!

''மன்னி! எனக்கு கேசரி வேண்டாம். ஸ்டவ் பின் வாங்கிண்டு வர மாட்டேன்!'' உரக்கக் கத்தி விட்டு வெளியே ஓடிப் போனான்.

இரவு. வாசலில் குல்பி ஐஸ் மணி கேட்கிறது. கறுப்பு கடிகாரம் எட்டு என்கிறது. இளைய தலைமுறை உள்ளிட்ட ராமபத்திரன் குடும்பம் கூடத்தில் கூடியிருக்கிறது. பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள், அன்றைய முக்கியச் செய்தியான லலிதா கல்யாணம் பற்றி மும்முரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர். ராமபத்திரன், அன்று மாலையே அந்தப் போஸ்ட் மாஸ்டர் பையன் வீட்டுக்குப் போய்ப் பேசி, ஜாதகம் வாங்கி வந்து விட்டார். கையோடு, மேற்கு மாம்பலம் வெங்கிட்டு ஜோசியரையும் பார்த்தாகி விட்டது. கடவுளே! இருவர் ஜாதகமும் என்னமாய்ப் பொருந்துகின்றன? லலிதா கொடுத்து வைத்தவள். போஸ்ட் மாஸ்டர். சென்ட்ரல் கவர்ன்மெண்ட். அது சரி, இன்னும் ஏன் அவனைக் காணோம்? மேனேஜர் கிழம் ஓ.டி. பார்க்கச் சொல்லி விட்டதா?

வாசலில் இரும்பு கேட் இழுபடுகிற சப்தம் கேட்கிறது.

''அட, லலிதா! உனக்கு நூறு வயசு. வா, வா. முதல்ல ஸ்வீட் எடுத்துக்கோ. அப்புறம் மூஞ்சி அலம்பிக்கலாம்.''

''என்ன விசேஷம், பெரியப்பா?''

''சொல்றேன், சொல்றேன்!''

''அக்கா! உனக்குக் கல்யாணம் பண்ணப் போறா. யாரோ போஸ்ட் மாஸ்டராம். சார், தபால்!''

ஜக்கு முந்திக் கொள்கிறான்.

''அவசரம் பாரு. நாங்க சொல்ல மாட்டோமா?''

பாட்டி, தலையில் செல்லமாகக் குட்டுகிறாள். ஜக்கு நழுவி, உள்ளே ஓடுகிறான்.

''என்னப்பா விஷயம்?''

''தாத்தா உனக்கு வரன் பார்த்திருக்கார் லலிதா. கச்சேரி ரோடு போஸ்ட் ஆபீஸ்ல புதுசா வந்திருக்காராம். போஸ்ட் மாஸ்டர்! மாசச் சம்பளம் நாலாயிரத்தி முன்னூறு!''

''ஜாதகம் கூடப் பார்த்தாச்சு!

பா.ராகவன்



தரகர் : ஒரு குறையும் வைக்காம பொண்ணு வீட்டுல நல்லா செய்வாங் களாம்.

பையன் தந்தை : மெதுவாப் பேசுங்க... என் பெஞ்சாதிக்கு இது தெரிஞ்சா இந்தச் சம்பந்தம் வேணாம்னு சொல்லிடுவா.

– பி.ஜி.பி. இசக்கி.

ஏக்கிளாஸாப் பொருந்தறது. பையன் என்ன லட்சணம் தெரியுமா?''

ராமபத்திரன் பூரிப்பில் ஜொலிக்கிறார்.

லலிதா மெள்ள நகர்ந்து மேசையருகே போய், ஹேண்ட் பாக்கை வைத்து, பிரித்து, டிபன் பாக்ஸை வெளியே எடுத்து வைத்தாள். கொல்லைப்புறம் போய் முகம் கழுவி, துடைத்தபடி ஹாலுக்கு வந்தாள். ஹாலில் ஒருவித நிசப்தம். ஊஞ்சலின் கிக்கீ. கவர்க் கோழியின் கீச் கீச். எதிர்வீட்டு டீவியில் ஏரியல் மைக்ரோ சிஸ்டம்.

''என்னடீ, ஒண்ணும் சொல்ல மாட்டேங்கற?''

லலிதா ஒருகணம் தலையைக் குனிந்து நிமிர்ந்தாள். தொண்டையை லேசாகச் செருமி, பின் கேட்டாள் :

''என்னைக் கேட்காம, நீங்களே முடிவு பண்ணிடறதா?''

2

சினிமாத்தனமான வசனப் போராட்டங்கள் ஏதுமின்றி லலிதா தனது நிலையை குடும்பத்தினர் முன் சமர்ப்பித்தாள். அதன் சாராம்சம் பின்வருமாறு :

அவள் வேலை பார்க்கும் அலுவலகத்தில், ஸ்டீபன் என்கிறவனைக் கடந்த ஒன்றரை வருடங்களாகக் காதலித்து வருகிறாள். அவளுக்கு திருமணத்திற்கு அவசரமில்லை. இவ்விஷயத்தை இப்போது வீட்டில் சொல்லி, பிரளயம் உண்டாக்கும் உத்தேசமும் அவளுக்கு இருக்கவில்லை. எனினும் விதி, சொல்ல வேண்டியதாகி விட்டிருக்கிறது. போஸ்ட் மாஸ்டர் பையனுக்கு அவளது ஆழ்ந்த வருத்தத்தையும், அவன் நல்வாழ்வுக்கான வேண்டுதல்களையும் சொல்லி விடலாம். வில்லத்தனம் ஏதும் செய்ய முயற்சிக்க வேண்டாம். விளைவுகள் விபரீதமாயிருக்கும். ஜாதி உள்பட்ட ஏனைய சம்பிரதாயங்களை அவர்கள், அவள் விஷயத்தில் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். இது சம்பந்தமாக இனி யாரும் அவளிடம் பேச வேண்டாம். அலுவலகப் பணியின் பளு காரணமாக அவளுக்குத் தலை வலிக்கிறது. யாரேனும் ஒரு காப்பி போட்டுத் தர முடியுமானால் உபகாரமாயிருக்கும். தாத்தாவுக்கு ஒரு சிறப்பு வேண்டுகோள். பேத்திக்காக, அவரது பொன்னான நேரத்தை வரன் பார்ப்பதில் செலவிடுவதை விடுத்து, கிண்டி ரேஸில் கூடுதல் கவனம் செலுத்தலாம். நாளைய ரேஸில் 'புளூ ஜாக்'கிற்கு அதிக வாய்ப்பிருப்பதாக இன்றைய மாலை முரசு சொல்லியிருக்கிறது. பெஸ்ட் ஆஃப் லக்.

''சம்பாதிக்கிற திமிர். கேட்க ஆளில்லை என்று நினைத்தாளா? கூப்பிடு அந்த நாயை! தாத்தாவையே கிண்டல் பண்ணுகிற அளவுக்கு வளர்ந்து விட்டாளா? இவள் எக்கேடு கெட்டு, எந்தக் கழுதையோடும் ஓடிப் போகட்டும். யாருக்கும் கவலையில்லை.''

''பெரியப்பா, அளந்து பேசுங்கள். வீணாகப் பிரச்னை பண்ண வேண்டாம்.''

''ஓஹோ. உடன் பிறப்பு பரிந்து பேசுகிறதோ? என்ன பேச்செல்லாம் பேசினாள் அவள்! மரியாதை வேண்டாம்?''

ராமபத்திரனின் அரசோச்சலுக்கு இது முதல் அடி. முதன் முறையாக அவரது வரம்பு கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. எப்போதாவது கையில் கொஞ்சம் அதிகம் பணமிருந்தால் கிண்டிக்குப் போய் வருபவர்தான். ஒருமுறை ஆயிரம் ரூபாய் விழுந்தபோது, முன்னூற்றைம்பது ரூபாய்க்கு லலிதாவுக்குத்தான் அவர் புடைவை வாங்கித் தந்திருக்கிறார். அதே புடைவையைக் கட்டிக் கொண்டுதான் அவள் இன்று, இந்தப் பேச்சு பேசியிருக்கிறாள். பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். பெரியவர்கள் ஒதுங்கிக் கொள்ளும் நேரம் போலும். நல்லது. அவர் தீர்மானித்து விட்டார்.

''வைதேஹி. கிளம்பு. இது நம் வீடு தான். ஆயினும் இனி இங்கிருப்பது உசிதமல்ல. உன் பிள்ளைகளும் பேரன்களும் எக்கேடு கெடட்டும். நீ கிளம்பு. இன்றைய இரவு ரயிலிலேயே நாம் மன்னார்குடி போய் விடலாம். நாசமாய்ப் போவதென்று முடிவு செய்து விட்டவர்களுக்கு கோபதேசம் அனாவசியம்.''

பாட்டி பதில் பேசவில்லை. பெட்டி ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை. எழுந்து

விட்டாள். அவள் கிருதயுக புருஷி: ராமனுக்கேற்ற சீதை. எனவே, ராமபத்திரனுக்கு முன்னால் எழுந்து நின்றாள்.

''யோசிச்சி செயல்படணும் தாத்தா. மன்னார்குடியிலே குதிரை ஓடாது. குதிரை வண்டிதான் ஓடும்!''

மறுபடி கிண்டல். குத்தல். இளமை வீரியம். ராமபத்திரன் ஒன்றும் புத்தர் அல்ல. ஒரு பாய்ச்சலில் லலிதாவை நெருங்கினார்.

''ஒழிஞ்சு போ!''

கை தூக்கியது தவறு. மூன்றாவது கண் மூடி இருப்பதே மரியாதை. ரவி முன்வந்தான்.

''தாத்தா, திஸ் இஸ் யுவர் லிமிட். நீங்கள் போகிறீர்களா? நாங்கள் போகட்டுமா?

சாந்தி. சாந்தி. சாந்தி.

3

புளியமரத்துச் சிட்டுக் குருவிகள் கிரீச் கிரீச் என்றன. பேப்பர்காரன் மணியடித்து விசிறிப் போனான். சாக்கடைச் சாலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அதிகாலைக் கோலங்கள். எப்போதும் ஐந்து மணிக்கு எழுந்து கடக்கட பேப்பரைப் பிரித்து, மேயும் தாத்தா இன்று இல்லாததால் பேப்பர், போட்டபடி கிடந்தது. அவரது ஈஸிசேரும் அங்ஙனமே கிடந்தது. ஜக்கு, இரவு வெகுநேரம் தூங்கவில்லை. நடந்து விட்ட மூன்றாம் உலகப் போரில் சேதங்கள் ஏராளமாய் நிகழ்ந்து விட்டன. குதிரைப் படை, யானைப் படை எல்லாம் தோற்றுச் சிதறின. தாத்தா புறமுதுகிட்டுப் போன சில வினாடிகளில் மீண்டும் தொடங்கின யுத்தத்தில், பெரியப்பா குடும்பம் நார் நாராய்க் கிழிபட்டது. அவரது இரண்டாவது மகன் திருட்டுத்தனமாய் சிகரெட் பிடிப்பதும், மூத்தவனின் மனைவி, யாருமில்லாத போது டெக்கில் புளூஃபிலிம் போட்டுப் பார்த்து விஸிஆரின் பவித்திரத்திற்கு பங்கம் விளைவித்ததும் சென்ஸார் இல்லாது ஒலிபரப்பப்பட்டது.

''யார் இருப்பார்கள் இந்த வீட்டில்? இந்த க்ஷணம் கிளம்பியாக வேண்டும். நாளை காலை வேறு வீடு பாருங்கள். வாடகைக்கு இல்லாவிட்டால் சொந்தமாக வாங்கிப் போவோம். இன்று இரவு, லாட்ஜில் தங்குவோம். இந்த நீசர்களோடு இனியும் வாழ்கிலேன்!''

தனது ரோலர் உடலைத் தூக்கிக் கொண்டு, பெரியம்மா குதித்த குதியில் அன்றைய இரவு மகாராஷ்டிர பூகம்பம்.

சூத்திரதாரி லலிதா, ஒன்றுமே நிகழாதது போல ஒருவித நரசிம்மராவ் பாவத்தில் இரவு வெகுநேரம் மரப்பசு படித்துக் கொண்டிருந்தாள். இடையிடையே 'லவ் பண்றது தப்பா?' என்று அண்ணனிடம் ஓட்டு சேகரித்துக் கொண்டிருந்தாள்.

ஜானகிராமன் ஏதும் பேசவில்லை. நடந்து விட்ட அசம்பாவிதங்களுக்கு அவர் எப்படிப் பொறுப்பாவார்? பெண்ணை ஒழுங்காக வளர்க்கத் துப்பில்லை என்று சந்திரசேகரன் காறி துப்பி விட்டுப் போய் விட்டார். சரியான சர்ட்டிஃபிகேட்தான். ஆயினும் வளர்ந்து விட்ட பிள்ளைகளை பெஞ்ச் மேல் நிறுத்தியா பாடம் சொல்லித் தர முடியும்? அவருக்கு மட்டும் வருத்தம் இல்லையா என்ன? போஸ்ட் மாஸ்டர் வரன். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் உத்தியோகம். ராமபத்திரன் எந்த வேளையில் அவனைப் போய்ப் பார்த்தார்?

ஜக்கு எழுந்தான். இருட்டு இன்னும் விலகவில்லை. மெல்லிய விடிவிளக்கு வெளிச்சத்தில் ஊஞ்சல் வெறிச்சோடிக் கிடந்தது. தாத்தாவின் ஊஞ்சல். கல்யாணச் சத்திரம் மாதிரி கலகலக்கும் வீடு, காலியான உண்டியல் மாதிரி காட்சியளித்தது. லலிதா. அவள் ஏன் அப்படி நடந்து கொண்டாள்? சமையலறையில் நேற்று செய்த கேசரி யாரும் சாப்பிடாமல், அப்படியே இறந்து

சிதம்பரம் நகர வாசகர்களே!

ஞாபகமிருக்கிறதா?
நீங்கள் தயாரிக்கப் போகும் உங்கள் ஊர்ச் சிறப்பிதழுக்கான செய்திகளை, தகவல்களை, கதை, கட்டுரை, துணுக்குகளை எங்களுக்கு எழுதியனுப்பக் கடைசி நாள் 14.1.94!
உறையின் மீது மறக்காமல் 'சிதம்பரம் சிறப்பிதழ்' என்று குறிப்பிட்டு எழுதுங்கள்!

- ஆசிரியர்.



"என்னங்க.... உங்களைத் தலைவர்னு நூறுபேர் கூப்பிடறது நிசமானா... போர்க்கால நடவடிக்கை எடுத்து...."

"என்ன பண்ணனும்...!"

"உங்கம்மா இங்கே வராம தடுக்கணும்!"

– கார்த்திக்.

கிடந்தது.

ஜக்கு உள்ளே போனான். அப்பா. தூக்கம் எப்படி வருகிறது இவருக்கு? ரவி. லலிதா செய்ததை இவன் எப்படி நியாயமென்கிறான்? ஒருவேளை அவனும் ஒரு 'புதிய ஏற்பாட்டை'ச் செய்து கொண்டிருக்கக்கூடும். எக்கேடு கெடட்டும். ஜக்கு இப்போது படிக்க வேண்டும். விரைவில் மன்த்லி டெஸ்ட் வருகிறது. அதில் அவன் மாலினியை வென்று, ஜெயக்கொடி நாட்டியாக வேண்டும். அம்மா, எழுந்திரேன். காப்பி போட்டுத் தா. நான் படிக்க வேண்டும்.

அம்மா எழுந்திருக்கவில்லை.

4

நடந்து முடிந்த மூன்றாம் உலகப் போரில் அம்மா பங்குபெறவில்லை. அவள், கூட்டுசேரா நாடுகள் சங்கத்தின் உறுப்பினள். நியாயமாக, லலிதாவின் இன்டர்வெலுக்கு முந்தைய குட்டி கிளைமாக்ஸ் காட்சியின் முடிவிலேயே அவள் ஹார்ட்-அட்டாக்கில் இறந்திருக்க வேண்டும். திரைக்கதையின் கோளாறினால் இரவு, தூக்கத்தில் இறந்தாள்.

ஜக்கு அதிர்ந்து போனான். அம்மா அவனது ஒரே சரணாலயம். தலைமுறை இடைவெளியினாலும், சின்னப் பையனுடன் என்ன பேச்சு என்கிற பரவலான ஒதுங்கலினாலும் அவன், அந்த வீட்டின் குட்டித் தீவு. அப்பா கூட அவனோடு அதிகம் வைத்துக் கொள்வதில்லை. அம்மா மட்டும் அவ்வப்போது கொஞ்சுவாள். அவனது பள்ளிக் கதைகளை அக்கறையோடு கேட்பாள். இனி அவளும் இல்லை.

தொடர்ந்து வந்த தினங்கள் துக்கத்தில் போயின. பத்தாம் நாள் காரியத்திற்கு லலிதாவின் ஆபீஸ் தோழன் வந்திருந்தான். இறுகிய முகத்துடன் தாத்தா எங்கோ பார்த்துக் கொண்டிருந்தார். தாடியும் மீசையுமாக ரவியைப் பார்க்கச் சகிக்கவில்லை. பெரியப்பா, தன் பங்குக்கு ஒரு மூலையில் மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார். லலிதா, அந்த ஸ்டீபனின் தோளில் சாய்ந்து அழுதது பார்க்க, அருவருப்பாயிருந்தது. அப்பா யாரிடமோ, தான் காசிக்குப் போய் வரப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தது ஜக்குவுக்குக் கேட்டது. அவனுக்கு உடனடியாக அந்தத் திருவல்லிக்கேணி பிரும்மதீர்த்தக் கட்டடத்தை விட்டுப் போய் விட வேண்டும் போலிருந்தது.

ஜக்கு யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. சட்டென்று கிளம்பி, பஸ் பிடித்து, வந்து விட்டான். வீடு, திறந்தபடி இருந்தது. அம்மா போய் விட்டாள். இனி யார் எங்கு போனால் அவனுக்கு என்ன? அந்த வீட்டில் எதுவுமே அவனுக்கு இனி முக்கியமாகப்படவில்லை. மன்த்லி டெஸ்ட் வருகிறது. படித்தாக வேண்டும். புத்தகத்தைப் பிரித்தான். பசியால் தலை சுற்றியது. காலையிலிருந்து அவன் ஒன்றுமே சாப்பிட்டிருக்கவில்லை. இரண்டு நாளாய் வீட்டில் சமையலில்லை. பசியோடு படிப்பது சிரமம். சட்டென்று எழுந்தான். தெருவில் இறங்கி, பக்கத்து வீட்டுக்குப் போனான்.

மாமிதான் முதலில் கண்ணில் பட்டாள். ''வா, ஜக்கு!''

பின்னாலேயே மாலினியும் தெரிந்தாள். அதே ரெட்டைப் பின்னலும் பளீர் சிரிப்பும்.


''மாலுகிட்ட ஏதாவது நோட்ஸ், புத்தகம் வாங்கிண்டு போலாம்னு வந்தியா?''

''இல்லை மாமி. கார்த்தாலேர்ந்து ஒண்ணுமே சாப்பிடலை. பசிக்கிறது. சாதம் போடறேளா?''

''அதுக்கென்ன, வாடா குழந்தே!''

பின்னாலேயே புன்னகைத்தபடி வந்த மாலினியை ஒருகணம் திரும்பிப் பார்த்தான்.

''மாலு, இனிமே உன் பேச்சு பழம்!'' என்றான் ஜக்கு.



ஒரு நிசப்த கணத்தின் முடிவில்...

ஆழ்ந்த மௌனத்தில்
அகன்ற கடல்பரப்பு
தென்றல்
தேகத்தில் சுகமேற்றும்
கோவளக் கடலின்
மணல் மேடை.

அஸ்தமன அழகை
முத்தமிடும் விழிகளுடன்
நான்...

வானத் திரையில்
கூட்டணிக் கொடி போல்
குழப்ப வண்ணங்கள்...

அங்கே அதென்ன
தேவ ஆப்பிளா?
ஓ! சூரியன்!

அந்தச் செங்கனி வட்டத்தை
மெல்லத் தின்னும்
சமுத்திர தேவதை

ஒரு நிசப்த கணத்தில்
முழுவதும் விழுங்கியதும்
ஒரு சோக இருள் -

அடி வானத்திலும்
என் மனத்திலும்!

– குமரி அமுதன்

24

மடிமீது தலை வைத்து

செத்தவன் உயிர்த்தெழ ஆசைப்படு.

செத்தவன் உயிர்பெறுவான்.

வெற்றி பெற விரும்பு.

வெற்றி பெறுவாய்.

''ஏய்... சுசி... சுசிக்குட்டி.. கண்ணம்மா.. சுசிதா!''

கன்னங்கள் வருடப்பட்டு, உதடுகள் மெல்ல நீவி விடப்பட்டு சுசிதா கண் விழித்தாள். நேர் எதிரே அவளுடைய ரங்காவின் முகம். சுசிதா தானிருக்கும் இடம் எது என்று கண்களைச் சுழற்றிப் பார்த்தாள். அவளுடைய அறை. ரங்காவின் ஆளுயரப் படம் அங்கே. இங்கே அவளை மடியில் தாங்கிக் கொண்டு ரங்கா. அவனுடன் வந்த கிழவர் அதே தாடியுடன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்க, ரங்காவின் முகம் தாடி எதுவுமின்றித் தெரிய, சுற்றிலும் பிரமிப்பான, நம்ப முடியாத, அதி மகிழ்ச்சியான விசாலிப் பாட்டி, நளராஜன், துர்வாசன், ஆறுமுகம், காவேரிப்பாட்டி, எல்லோருமே.

''பாட்டி... ரங்கா! நளராஜா... ரங்கா. டேய் துர்வாசா.. என் ரங்காடா...!''

''ஆமாண்டி கண்ணு ஒன் ரங்காதான்.''

எப்படி இது சாத்தியம்? ரங்கா விபத்தில்...

சுசிதா எழுந்து உட்கார்ந்தாள். அவன் கன்னங்களை வருடினாள். கையைத் தொட்டுத் தடவினாள். அவன் மார்பில் கை வைத்துத் துடிப்பு கேட்கிறதா என்று பார்த்தாள்.

''ரங்கா ஆஆஆ...'' என்று பெருங்குரலில் அழத் தொடங்கினாள்.

''ஸ்ஸ்ஸ —அழாதே சுசிதா. அதான் நான் இருக்கேனே. வந்துட்டேனே. உங்கூடயே இருக்கப் போறேனே.''

சுசிதா அவன் மார்பில் சாய்ந்து 'ஓ' வென்று அழுதாள். விம்மி, விம்மி. குமுறிக் குமுறி.

கிழவர் மெல்ல எழுந்து ஜாடை காட்ட, ரங்காவைச் சுற்றி இருந்தவர்கள் எல்லோரும் பிரமிப்பு மாறாமல் ஒருவர் பின் ஒருவராக அறையிலிருந்து வெளியேறினார்கள். கிழவர் கடைசியாக வெளியேறினார்.

ரங்கா, அவள் முகம் நிமிர்த்தினான். கன்னங்களில் வழிந்த நீரை ஒற்றியெடுத்தான். அவளது துடித்துக் கொண்டிருந்த உதடுகளில் தன் இதழ்களைப் பொருத்தி வெப்பமான முத்தமொன்றை ஈந்தான்.

''ச்... ச்... ச்'' அதான் வந்துட்டேனே. இனிமே நீ அழலாமா?''

''என்ன ரங்கா இது? எனக்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனை? நான் உங்களை அலைக்கழிச்சேங்கறதுக்காகவா? உங்களை போலீஸ்ல மாட்டி விட்டுட்டேன்ங்கறதுக்காகவா?''

''ம்ஹ—ஹ—ம்!''

''பின்ன?''

''சொன்னா நீ நம்ப மாட்டே.''

''இல்ல. சொல்லுங்க. இனிமே நீங்க எதைச் சொன்னாலும் நம்புவேன். நான் முன்ன மாதிரி வெளையாட்டுப் பைத்தியம் இல்லே!''

''நான் செத்துப் போகல சுசிதா. செத்துப் போன மாதிரி ஒரு டிராமா!''

''அப்படின்னா? எதுக்கு இந்த டிராமா?''

''என்னை இந்தியால சாகடிச்சாத்தான், வேற ஒரு எடத்துல, வேற ஒரு புதுப் பேரோட, வேற ஒரு புது மனுஷனா போய் செட்டில் ஆக முடியுங்கற நெலமை. அதனால அரசாங்கமே அப்படி ஒரு டிராமாவுக்கு ஒத்துக்கிச்சி. நான் இந்த ஆறு வருஷமா பாகிஸ்தான்ல இருந்தேன். அங்க என் பேர் லால்ராம்''

சுசிதா அவன் மடியில் படுத்தபடியே கழுத்தை நிமிர்த்தி அவனைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினாள். ஒன்றும் புரியவில்லை என்கிற மாதிரி. அவளுக்கு ஒன்றும் புரிய வேண்டாம் என்றுதான் தோன்றியது. அவளுடைய வைரம் கிடைத்து விட்டது. இழந்த சொர்க்கம் மீண்டு விட்டது. இனி அவன் என்ன சொன்னால் என்ன? என்ன சொல்லாவிட்டால் என்ன?

''எங்க ஊரு பெருமாள்தேவன் பட்டி. காமராஜர் டிஸ்ட்ரிக்ட்ல இருக்கு. எங்க ஊர் போஸ்ட் மாஸ்டருக்கு கையையும், கால்லயும் நாலஞ்சி வெரல் இல்ல.

சுபா

மிலிட்டிரில இருந்தவரு அவரு. ஒரு தடவை பனிக்காத்துல மாட்டி வெரலெல்லாம் வெறைச்சிப் போய் வெண்டைக்கா ஒடையற மாதிரி ஒடைஞ்சி போச்சின்னு சொல்லு வாரு.''

''நெஜமா?''

''இப்ப சொல்றதெல்லாம் சத்தியம் கவிதா. எங்க ஊர்ல போஸ்ட் மாஸ்டர் மாத்திரம் மிலிட்டரியில இருந்தார்னு நெனைக்காதே. ஒவ்வொரு குடும்பத்திலேர்ந்தும் ஒவ்வொரு ஆம்பிளை மிலிட்டரியில சேந்துடுவாங்க. எங்க ஊரால முடிஞ்ச தேச சேவை அது. எங்க ஊர் ரத்தத்துல எப்படியோ தேசப் பற்று ஊறியிருக்கு. எங்கப்பா அப்படிச் சேந்துதான் குண்டடி பட்டு செத்துப் போனாரு. நேருக்கு நேர் சண்டையில்ல அது. நம்ப ஆளுங்களிலேயே ஒருத்தன் திடீர்னு பாகிஸ்தான் ஆளா மாறிக் காட்டிக் கொடுத்துட்டான். அதுல எங்கப்பா இருந்த பட்டாலியனே செதறிப் போச்சி. என்னை என்னோட மாமா தான் வளர்த்தார்னு ஒங் கிட்ட சொல்லியிருக்கேன் இல்ல? அது வேற யாருமில்ல. எங்கூட இருக்காரே தாடியோட. அவர்தான். தாடியில்லாம அவரை, நீ டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் மானேஜராப் பாத்திருக்கே...''

''சஸ்பென்ஸ் மேல சஸ்பென்ஸா இருக்கு?''

''வேற வழியில்ல கவிதா. நாங்க அப்படித்தான் இருக்க முடியும்.''

''நாங்கன்னா?''

''போலீஸ்காரன்னா ஒரு யூனிஃபார்ம் இருக்கும். மிலிட்டிரிக்காரன்னா ஒரு யூனிஃபார்ம் இருக்கும். ஆனா ஒற்றனுக்கு ஏது யூனிஃபார்ம்? அவன் யாருன்னு தெரிஞ்சிட்டா அதுக்கு மேல அவன் ஒற்றன் இல்லே!''

''ரங்கா... நீங்க... நீங்க...''

''ஒரு இந்திய ஒற்றனா இருந்தேன் கவிதா. அதுக்கு எங்க மாமா ஒரு காரணம். இந்த நாட்டுக்கு ஏதாவது செய்யணும்னு எனக்குள்ள இருந்த வைராக்கியம் ஒரு காரணம்.''

''புரியலை ரங்கா!''



அடுத்த இதழில்...

●● **பிரபு - 100**

- கவர் ஸ்டோரி

●● **மாறிவரும் இந்தி சினிமாக்கள்!**

- ஓர் அலசல்

''எங்க மாமா மிலிட்டரில சேரணும்னு ஆசைப்பட்டாரு. ஆனா வேற மாதிரி ஆயிட்டாரு. பொலிடிகல் சைன்ஸ், எகனாமிக்ஸ் படிச்சி கவர்ன்மெண்ட்ல 'ரா'வுல சேந்துட்டாரு. 'ரா'ன்னா என்னன்னு கேக்காதே. அது ஒரு புத்திசாலிப் படை. நமக்கும் பாகிஸ்தானுக்கும் நடுவுல எப்பவும் நாய்ச் சண்டைதான் கதோ. அவுங்க ஆளுங்க நமக்கு நடுவுல உளவாளிங்களா கலந்து இருப்பாங்க. நம்ம ஆளுங்க அங்க உளவாளிங்களா இருப்பாங்க. பொதுவா மிலிட்டரில இருக்கிறவங்க உளவாளிங்களா இருக்க மாட்டாங்க. ஆனா விதிவிலக்கு எல்லாத்துக்கும் இருக்கு. எங்கப்பா செத்தது அந்த மாதிரி ஒரு விதிவிலக்கு உளவாளியாலதான். ஒரு நாள் மாமா என்னைக் கூப்பிட்டு அனுப்புனாரு. நான் போனேன். ரங்கா, இந்த தேசத்துக்கு நீயும் ஏதாவது பண்றியான்னு கேட்டாரு. ஒத்துக்கிட்டேன்.

'முதல்ல என்னை மாமான்னு கூப்பிடறதை நிறுத்து. நம்ம ஊர்லயே பாகிஸ்தான் ஆளுங்க இருக்காங்க. அவங்க இந்தியர்களா இருந்துக்கிட்டு பாகிஸ்தானுக்கு விசுவாசமா இருக்காங்க. அவங்களை நாங்க கண்டுபிடிக்கப் போறோம். அடையாளம் கண்டு அவங்க இனிமே இந்தியாவுக்கெதிரா எதுவும் பண்ணாம செய்யப் போறோம். உங்கப்பா செத்துப்போனது கூட இந்த மாதிரி கூட இருந்தே குழி பறிச்ச ஒருத்தனாலதான். நாங்க எடுத்துக்கப் போற இந்த வேலையில நீ எங்களுக்கு உதவியா இருக்கியா? உன் சபரி ஒரு பொது இடம். நம்ப ஆளுங்க ஒங்கூட தொடர்பு வச்சிக்க வசதியான எடம். அவங்ககிட்ட நான் கொடுக்கற செய்தியை ரகசியமாக் கொடுக்கணும். நான் சொல்ற சின்னச் சின்ன வேலையை எல்லாம் செய்யணும், செய்வியா'ன்னு கேட்டாரு.

சந்தோஷமா ஒத்துக்கிட்டேன். அவங்க செயல்பட்ற முறை தெரியாது. அதுல நான் தலையிடவும் விரும்பல. எங்க மாமா நிச்சயம் நல்லவர். நாட்டுக்காக ஒழைக்கிறவர். அவருக்கு ஹெல்ப் பண்ணேன். அவர் அடையாளம் காட்னவங்களுக்கு அவர் கொடுக்கச் சொன்ன செய்தியெல்லாம் சிக்லெட்டாவும், சிகரெட்டாவும் குடுத்தேன். கடலோரம் போய், படகுல வர்ற மீன்களை வாங்கிட்டு வந்தேன். மீன்களோட ஒடம்புலயும் செய்திதான் இருந்தது. என்ன செய்தின்னு என்னைக் கேக்காதே. தெரியாது. நான் ஒரு கருவி. ஒரு செஸ் காயின். அவ்வளவுதான். நான் செஸ் காயின்னு தெரிஞ்சிக்கிட்டு முட்டுக்காடு படகுத் துறைல உங்கூட இருக்கும் போது நீத்துக் கட்டப் பாத்தாங்க. ஆனா மாமாவோட படை அவங்களைப் புடிச்சிருச்சி. கடைசியா, நான் ஒருத்தனைக் கொன்னுட்டதா சொன்னியே, அவன் ஒரு டபிள் ஏஜெண்ட். அவன் மெட்ராஸ்ல இருக்கற டபிள் ஏஜெண்ட்டுங்களோட பெயரெல்லாம் எடுத்துக்கிட்டு வர்றாங்கற நியூஸ் மாமாவுக்கு வந்திருக்கு. அவன் நண்பன் மாதிரிதான் வந்தான். சங்கேத மொழி சொல்றதில தப்பு பண்ணிட்டான். நான் கேட்டவுடனே மாட்னா என்ன கதியாகுமோன்னு மாத்திரை சாப்ட்டு உயிரை விட்டான். அவன்கிட்ட இருந்த பர்ஸினாலேதான் இங்க இருக்கற துரோகிங்களை கத்திவளைக்க முடிஞ்சது. மெட்ராஸ்ல என் வேலை ஓவர். பாகிஸ்தான்ல இருக்கற இந்திய உளவாளிகளிலேயும் சில டபிள் ஏஜண்ட்ங்க இருந்தாங்க. அவங்களையும் கண்டுபிடிக்கணும்னுதான் என்னை மாமா லால்ராம்ங்கற பேர்ல அங்க அனுப்புனாரு. நான் எப்படி லால்ராம்ங்கற பேர்ல அங்க போய் செட்டில் ஆனேங்கறதெல்லாம் ஒனக்கு வேணாம். ஒரு நாடே திட்டம் போட்டுச் செய்யறது இது. அதுல எல்லாம் தப்பு வராமப் பாத்துப்பாங்க. நான் அங்க

யாருக்கு அனுப்பலாம்?

விடைகள் :

1. கருணாநிதி
2. நரசிம்மராவ்
3. சேஷன்
4. ஜெ.
5. வைரமுத்து
6. செந்தில்

போய் ஆறு வருஷம் இருந்து, இந்திய உளவாளிங்கன்னு சொல்லிக்கிட்டு டபிள் ஏஜண்ட்டுங்களா வேலை செய்றவங்களை அடையாளம் கண்டுபிடிச்சி அவங்களை எல்லாம் முடக்கிட்டோம். என் வேலை முடிஞ்சி போச்சி. நான் வந்துட்டேன். சாதாரண மனுஷனா. 'செத்துப் போனி யே'ன்னு கேட்டா, 'இல்ல, ஆக்ஸி டென்ட்ல நான் அம்னீஷியா பேஷண்ட்டா யிட்டேன். இத்தனை நாளும் ஆஸ்பத்திரில இருந்தேன். நான்னு நெனச்சி வேற யாரையோ எரிச்சிட்டாங்க'ன்னு சொல்லி சமாளிப்பேன். என் பேர்ல எரிஞ்சது ஒரு அனாதைப் பொணம். நாம சினிமாவை யெல்லாம் நம்பறவங்க. இதையும் நம்பிடு வோம், கலபமா!'' அவன் கலகலவென்று சிரித்தான்.

''எங்கிட்ட சொல்லியிருக்கலாம் இல்ல?''

''யார்கிட்டயும் சொல்லக் கூடாதுங் கறதுதான் இந்த மாதிரி வேலைக்கே மொதல் தகுதி கஸ்தூ. எனக்குப் பொம் பளை சபலம் இருக்கான்னு கூட, மாமா மாலினின்னு ஒரு பொண்ணு மூலமா சோதிச்சிப் பாத்தாரு. பாகிஸ்தான்ல போய் நான் மாறிடுவேன்னு பயம். சந்தேகம். நான் என் காதல்ல மட்டும் உறுதியா இருக்கறது தெரிஞ்சிக்கிட்டு என்னை அனுப்புனாரு. ஆறு வருஷமா ஒன்னை, மாமா ஒனக்குத் தெரியாம கவனிச்சிட்டிருந்தாரு. கார்டியன் மாதிரி. நான் சாகாமத் திரும்பி வந்துட்டா மறுபடி ஒங்கூட சேந்து வாழலாங்கறதுதான் எனக்கு அவர் நீட்டின காரட். நான் பொறந் ததுக்கு என் நாட்டுக்கு ஏதாவது செய்ய ணும்னுதான் போனேன். இப்ப நெறைவா இருக்கேன். உங்கூட சந்தோஷமா சாதாரண ரங்காவா வாழப் போறேன். கொலைகார ரங்காவா இல்ல. என்னை இன்ஸ்பெக்டர் ஏன் ரிலீஸ் பண்ணாருன்னு இப்பப் புரிஞ் சிருக்குமே...?''

''ச்சீ.. போ!''

''சொல்லு. ஒனக்கு என்ன வேணும்?''

''என் ரங்கா. ரங்காவோட மடி. அந்த மடில நான் தலை வெச்சிக்கிட்டு இப்படியே அக்கடான்னு இருந்தாப் போதும்!''

''மத்ததெல்லாம் வேணாமா?''


''அப்படீன்னா?'' என்று கேட்டவள், அவன் கேள்வியில் இருந்த குறும்பை உணர்ந்து, ''ச்சீய்...'' என்றாள், நாணமாக.

''வயசாய்டிச்சிடா!''

''இன்னும் 'டா' போடறே. வயசாயி டிச்சின்னு சொல்றியா... ஒன்னை.. ஒன்னை...''

''ஐயோ.. வேணாமே.. வேணாமே.. ம்ம்ப்ச்ச்ச்... ச்சீய்...''

(முற்றும்)



ESTD : 1980. PHONE : AMINJIKARAI - 6265194, CHROMPET : 403994

THE AMINJIKARAI BENEFIT FUND LTD.

(Incorporated under the Indian Companies Act. 1956)

A RECOGNISED NIDHI

REGD & H.O : 653, P.H. Road, Aminjikarai, Madras - 600 029

WISHING YOU ALL PROSPEROUS NEW YEAR & PONGAL GREETINGS

Opening their I Branch

at 90, Station Road, Radha Nagar, Chrompet, Madras - 600 044.

ON 17.1.94 MONDAY

Your presence & participation in our following schemes Highly & Heartily solicited.

FIXED DEPOSIT :

Less than 1 year 15% 1 to 3 years : 18% 4 years 19% 5 years : 20%
For Pensioners/Widows/Handicapped/Destitudes : Extra 2%


SAVINGS DEPOSIT :

for minimum Balance of Rs. 100/- 12%
for Pensioners etc. Extra 1%
Please step in for your brighter tomorrow. We will enlighten you
with our other valuable schemes also.

	AMINJIKARAI	CHROMPET
Office Hours :	8.30 to 11.00 a.m.	9.00 to 12.00 Noon
	1.30 to 4.00 p.m.	3.00 to 6.00 p.m.
Sundays :	8.30 to 11.00 a.m.	9.00 to 12.00 Noon
Weekly Holiday :	FRIDAY	TUESDAY

Transactions with members only.

SARVE JANA SUKHINO BHAVANTHU



சுஜாதா : புதிய பக்கங்கள் ரூ.21.00, தோரணத்து மாவிலைகள் ரூ.26.00, அனுமதி ரூ.27.00, நீர்க்குமிழிகள் ரூ.11.00, கணையாழியின் கடைசி பக்கங்கள் ரூ.15.00, அடுத்த நூற்றாண்டு ரூ.24.00, நடைமலர் ரூ.11.00, வஸந்த்! வஸந்த்! ரூ.30.00, ஆ...ரூ.30.00, நகரம் ரூ.18.00, நிர்வாண நகரம் ரூ.21.00, வடிவங்கள் ரூ.22.00, வாய்மையே சில சமயம் வெல்லும் ரூ.26.00, கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு ரூ.25.00, 18 கதைகள் ரூ.30.00, உயிராசை ரூ.24.00, இருள் வரும் நேரம் ரூ.24.00, நில்,கவனி,தாக்கு ரூ.18.00, 24 ரூபாய் தீவு ரூ.22.00, பாதி ராஜ்யம் ரூ.24.00, என் இனிய இயந்திரா ரூ.30.00, மீண்டும் ஜீனோ ரூ.35.00, காகிதச் சங்கிலிகள் ரூ.15.00, தேவன் வருகை ரூ.19.00; பாலகுமாரன் : பயணிகள் கவனிக்கவும் ரூ.50.00, இனி,இரவு,எழுந்திரு ரூ.30.00, உள்ளம் விழித்தது மெல்ல... ரூ.25.00, மேய்ச்சல் மைதானம் ரூ.22.00, A.M.பிள்ளை யின் மனையடி சாஸ்திரம் ரூ.15.00, திருப்பாவை, திருவெம்பாவை (விளக்க உரையுடன்) ரூ.3.00, தினமணியில் நாடோடி எழுதிய ஆன்மீகம் 3 பாகங்களும் ரூ.180.00, தினமலர் வாரமலரில் ஞானானந்தம், வைரம் ராஜகோபால் எழுதிவரும் கட்டுரைகள் 7 பாகங்களும் ரூ.72.00, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 19 புத்தகங்களும் ரூ.223.00

தேவையான புத்தகங்களின் விலையை மட்டும் M.O. செய்யவும். 100 ரூபாய்க்கு மேல் புத்தகம் வாங்கினால் எங்கள் செலவில் அனுப்பி வைக்கிறோம்.

குமரிப் பதிப்பகம்

8, நீலா தெற்கு வீதி
R.R.காம்ப்ளக்ஸ்
நாகப்பட்டினம் - 611 001.



அது நாலு தெரு கூடும் இடம். தெருக்கள் ஒன்னும் அப்படி அகலம் இல்ல; முப்பது அடி தான். அந்த இடத்திற்கு இப்படி ஒரு ஆபத்து வரு முன்னு யாரும் நெனைவச்சதில்லை!

ஒருநாள் காலையில அஞ்சாறு பேரு, என் வீட்டுக்கு வந்தாங்க. அப்ப அவுக கட்சி ஆட்சியில இருந்திச்சி! ஆளுங்கட்சிக்காரங்கன்ற தோரணை வேட்டி, துண்டுல பளிச்சின்னு தெரிஞ்சிச்சி. அதுல ஒருத்தர்தான் உருப்படி. வக்கீலு. நல்ல மனுஷன்தான். அவருக்கு என்ன நெருக்கடியோ, இவுக பின்னாடி அலைஞ்சிட்டிருந்தார்.

'இவுக எதுக்கு நம்மகிட்ட?....' என்னிடம் நீட்டப்பட்ட நோட்டீசைப் பார்க்கிறேன். அவுக கட்சித் தலைவருக்குச் சிலை எடுப்பு விழா. அதுவும் இந்த நாற்சந்தியில! கடவுளே! இருக்கிற நெருக்கடியில இது வேறயா!

நடுத்தெரு நந்திகள்!

''சிலை... சரிதான்; ஆனா.... இந்த இடம் சரிப்படாதே!''

''ஏன்? எதனால அப்படிச் சொல்றீங்க?''

''இல்லை, ஏற்கெனவே இங்க போக்கு வரத்து நெருக்கடி அதிகமா இருக்கு. இங்க எத்தனை ஆக்சிடெண்டு ஆகியிருக்குன்னு உங்களுக்கும் தெரியும். நான் முக்கு வீட்டுக்காரனா இருந்து பல நாளு அந்தக் கோரக் காட்சிகளைப் பாக்கிறேன். பரிதாபம். ராத்திரி தூக்கமே வர்றதில்லை; அதனால தான் சொல்றேன்.''

''உங்களுக்குத் தூக்கம் வாரதில்லைங்கிறதுக்காகத் தலைவருக்குச் சிலை வைக்காம இருக்க முடியுமா? வயசானா தூக்கம் வரத்தான் செய்யாது'' - அவர்களில் ஒரு விடலைப் பேர்வழியின் கேலி; அதைத்தான் அவர்கள் என்னமா ரசிச்சாங்க!

''நீ சொல்றதிலயும் உண்மை இருக்கு தம்பி; ஆனா எனக்குத் தூக்கம் வராததுக்கு வயசு காரணம் இல்ல. பயங்கரமான விபத்துப்பா! பாவம், அதுகளை நம்பி இருக்கிற குடும்பங்க இப்ப என்னென்ன பாடுபடுதுகளோ?''

''இதெல்லாம் நம்ம கையிலயாங்க இருக்கு? எல்லாத்துக்கும் மேல ஒருத்தன் இருக்கான். அவன் எழுதினதை மாத்தி நாம எழுதிற முடியுங்களா? அவுகளுக்கு இங்கதான், இப்படித்தான்னு எழுதியிருந்தா அதைத் தடுக்க நாம யாரு?'' - இது வக்கீல் வாதம். அவருக்குக் கொஞ்சம் கடவுள் பக்தி உண்டு. அது இப்படியா இருக்கணும்?

''அப்படிப் போடுங்க வக்கீலய்யா! பின்ன என்ன? நாலும் படிச்சவரே சொல்றாரு; சும்மா வளவளன்னு பேசாம உங்களால ஆன நிதியைக் குடுங்க.''

''இல்லீங்க; நாம நாலையும் யோசிச்சுச் செய்யணுமில்ல? இப்ப பெரிய பெரிய லாரி, பைக், சைக்கிள், ரிக்ஷா, ஆட்டோ, கைவண்டி, தள்ளுவண்டின்னு வாகனங்க பெருத்துப் போச்சு. வாகனம் மட்டுந்தானா? ஜனத் தொகையுந்தான்!'' - இப்படிச் சொல்லி விட்டு நானாகச் சிரித்துக் கொண்டேன்; அது தப்பாப் போச்சு!



''ஆமா, உமக்குப் பிள்ளை இல்லைன்னா ஊரே பெறக்கடாதுன்னு சட்டமா? பெரிய மனுஷனா லட்சணமாப் பேசய்யா!'' - கொதித்தார் ஒருவர். அவருக்கு ஒன்பது பிள்ளைகள். ரெண்டு மனைவி.

''தப்பா நெனக்காதீங்க, நம்ம சர்க்

காரு பிரசாரத்தை மீறி ஜனத்தொகை கூடு தேன்னுதான் சிரிச்சேன். அத விடுங்க. இத்தனை நெருக்கடியில இந்த இடம் சரியான்னு அதைப் பாருங்க. நாளைக்கு வாகனங்களும் ஜனத்தொகையும் இன்னும் கூடத்தான் செய்யும். நாம வாகனத்தை வாங்கலாம், ரோட்டை வாங்க முடியாதே....! நம்ம ஊர்ப் பக்கத்தில் வந்திருக்கிற ஆலையில வேலை செய்யுற ஜனங்க நம்ம ஊருக்குள்ள வீடு தேடி அலை மோதுறாங்க. அதனால நெறையக் காம்பவுண்டு வீடுக உருவாகிக்கிட்டு இருக்கு; வளர்ற ஊருக்குள்ள ரோட்டை, விரிக்கப்பாக்கணுமே தவிர மறிக்கப் பாக்கக் கூடாது... இந்தா பாருங்க, வள்ளுவரு, கம்பரு, சேக்கிழாரு இவுகள்லாம் பெரியவங்கதானே; அந்தக் காலத்திலயே வீதியில சிலை வைக்கலே. கோவில் வளாகங்கள்ல வச்சுப் பெருமைப்படுத்தினாங்க. நாம ஒண்ணு செய்யலாம். ஒரு நிதி திரட்டித் தலைவர் பேருல பேங்கில போட்டு, அதுல வர்ற வட்டியை வச்சி வருஷா வருஷம் ஏழைப் பிள்ளைங்க படிக்க உதவலாம். இல்லை, நம்ம ஊர்ப் பள்ளிக்கூடம் இப்பவோ, நாளையோன்னு இருக்கு. அதை எடுத்துக் கட்டலாம். அதும் பிடிக்கலையா, இங்க நல்ல ஆஸ்பத்திரி இல்ல; அதுக்கு ஒரு கட்டடம் கட்டலாம். இதெல்லாம் காலா காலத்துக்குத் தலைவர் பேரைச் சொல்லும். நிதி உயிருள்ள நிதியா இருக்கும். சிலைன்னா, வச்சவங்க பேரு உயிருள்ளதாகி, நிதி செத்துப் போகும். எது சரின்னு யோசிங்க.''

''நான் அப்பவே இந்த ஆளு முட்டுக்கட்டை போடுவாரு, வேண்டாம்னேன். இந்த ஆளுகிட்ட என்னய்யா பேச்சு? எந்திரிங்கய்யா!''

''யோவ் பெரிசு! உன் கண்ணு முன்னாடி இதே இடத்தில அந்தச் சிலை கம்பீரமா நிக்கிதா இல்லையான்னு பாரு!'' - வந்தவர்கள் போய் விட்டார்கள்.

இனி என்ன செய்யுறது? குழம்பித் தவிக்கிறதை விட ஒரு கூட்டைத் தேடினேன். சிலை வைக்கிற கட்சியைச் சேர்ந்தவர் வீடு அது. படித்தவர்; பண்பாளர். கட்சி வெறியை விடச் சமுதாய நெறி அவருக்கு ரொம்பப் பிடிக்கும். எனவே நம்பிப் போனேன்.

''ஐயா, நீங்க வரலாமா? நானில்ல வரணும்?'' என்று ஆரம்பித்தார். ''நல்லதைச் சொன்னா யார் கேக்குறாங்க? கட்சிப் பிரமுகர் அந்தஸ்தோட சரி. எல்லா இடத்திலயும் ஒரு கலங்கல் மேல மிதக்குது. தண்ணீர் தெளிய இன்னும் எவ்வளவு நாளாகுமோ? பார்க்கிறேன்... எதுக்கும் நீங்க காவல் துறை, டிராபிக் அதிகாரிகளுக்கும் தலைவருக்குமே கூட ஒரு பெட்டிஷனைப் போடுங்க'' என்றார்.

மகஜர்களை அனுப்பிட்டேன்! கொஞ்ச நாள் சென்று ஒரு டிராபிக் ஆள் வந்தாரு. அளந்தாரு. உதட்டைப் பிதுக்கி, தலையைக் குலுக்கினாரு. போயிட்டாரு.

ஒரு நாள் பெரும் பரபரப்பு. திடீர் ஊர்வலம்! கடை அடைப்பு. ரோடு மறியல். உண்ணாவிரதம். 'ஏழைகளின் தலைவனுக்கு இங்கேயே சிலை! வேண்டும், வேண்டும்! அனுமதி வேண்டும்!' ஏழைகள், ஏதுமறியாப் பாமரர்கள், பள்ளிப் பிள்ளைகள், ஊர்ப் பெரியவர்கள் கலந்து கொண்டாங்க! விளைவு, அந்த நல்ல டிராபிக் அதிகாரி மாற்றம்!

அப்புறம்? அப்புறம் என்ன? சிலை உயரத்திற்குக் கமிட்டி மெம்பர்கள் பெயர் பொறித்து சலவைக் கல் பதித்த பீடத்தின் மேல் அதோ அந்தச் சிலை! தலைவர் சிலையும் அதன் தலைமேல் அமர்ந்து எச்சமிடும் காகமும் போக்குவரத்துக்கு இடையூறு செய்தபடியிருக்கின்றன!


– சாலமன் பாப்பையா.

கணையாழி

ஜனவரி 1994
பொங்கல் சிறப்பிதழ்

- சென்ற ஆண்டின் சிறப்புகள் :
  அரசியல், பொருளாதாரம், இலக்கியம், கலை நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்.
- கவிதைப் பக்கங்கள்
- முழுநீளக் குறுநாவல்
- சிறுகதைகள்
- என். எஸ். ஜெ.
- சுஜாதா
- முஸ்தபா

'திடுக்' தகவல் :



●● தமிழகத்திலுள்ள கோ-ஆப்டெக்ஸ் மாதிரி, கேரளாவில் ஹேண்டெக்ஸ்! இதிலும் அரசுத்துறையின் வழக்கமான நஷ்டம். காரணத்தை ஆராய விஜிலென்ஸ் முற்பட்ட போது, திடுக்கிட வைக்கும் பல தகவல்கள் ஒவ்வொன்றாய் வர ஆரம்பித்தன. அதில் ஒன்று : கடந்த 92 - ம் ஆண்டு மே மாதம் 25 - ம் தேதி திருவனந்தபுரத்திற்கு வந்திருந்த மத்திய அமைச்சர் ஒருவருக்குப் பரிசளிப்பதற்காக ஹேண்டெக்ஸ் ஷோ ரூமிலிருந்து 10,783 ரூபாய் பெறுமானமுள்ள துணிவகைகள் எடுக்கப்பட்டன. இதில் என்ன ஊழல் என்கிறீர்களா? அந்தத் தேதியிலோ அல்லது அதற்கு

கேரள அதிசயங்கள்!

முன் பின்னான தேதிகளிலோ எந்த டெல்லி அமைச்சருமே திருவனந்தபுரம் வரவேயில்லையே!



அந்தமான் அதிர்ச்சி!

●● கேரள சட்டசபை ரூல்ஸ் கமிட்டி, மற்ற மாநிலங்களிலுள்ள சட்ட சபை ரூல்ஸ் கமிட்டிகளைச் சந்தித்து, அங்குள்ள செயல் முறைகளைத் தெரிந்து கொள்வதற்காகச் சபாநாயகர் தங்கச்சன் தலைமையில் அந்தமான் தீவுகளுக்குப் புறப்பட்டுச் சென்றது. இதில் எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்களும் இருந்தார்கள். இதெல்லாம் சகஜமான விஷயம்தான் என்றாலும் சட்டசபையே இல்லாத அந்தமானுக்கு இவர்கள் எப்படிப் போனார்கள் என்பதுதான் அதிர்ச்சியாக இருக்கிறது!

சந்தனத்தைலம் சாத்தியமே!

●● கேரளாவிலுள்ள மலபார் ஏரியாவில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட சந்தனத் தைலத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆயினும் மலபார் பகுதிகளில் மருந்துக்குக் கூட சந்தன மரங்கள் கிடையாது. இருந்தாலும் தைலத் தயாரிப்பு அமோகமாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. எப்படி சாத்தியம் என்கிறீர்களா? இந்தத் தொழிற்சாலைகள் தமிழக, கர்நாடக எல்லைப்பகுதிகளில் அமைந்திருக்கும் போது அப்புறமென்ன கேள்வி?

- திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ்.எஸ். மணி.



உங்கள் செலவில் ஒரு சுற்றுலா!

◆ "Securities and Exchange Board of India" வின் தீர்மானம் சிறு முதலீட்டாளர்களுக்குப் பேரிடி என்பதில் ஐயமில்லை. நமது மக்கள் சேமிக்க முன்வருவதே கடினமான நேரத்தில் இப்படி யொரு தீர்மானம் SEBI விதித்திருப்பது விநோதம்! பங்குச் சந்தையே படுபாதாளத்தில் சிக்கிச் சிதைவுண்டு தற்போதுதான் புனர்வாழ்வு பெற்று வருகிறது. சிறு துளி பெருவெள்ளம் என்பதை மறந்து செயல்படும் SEBI க்கு நமது நிதி அமைச்சகத்தின் மாற்று உத்தரவு கிடைத்தால்தானே சமநீதி, சமவாய்ப்பு என்ற ஜனநாயகப் பண்புக்கே ஒரு அர்த்தம் இருக்கும்?

மேல்பட்டி, எல். மாறன்.

◆ பிற்படுத்தப்பட்டோருக்காக உழைக்க முன் வந்துள்ள கன்ஷிராமைப் பாராட்டலாம். அதே தருணத்தில் அவரும் மற்றவர்களைப் போலவே 'ஏற்றி விட்ட ஏணியை எட்டி உதைப்பது போல' 'காலத்தின் கட்டாயத்தால்' மாறிவிடாமல், கொள்கைப்பிடிப்போடு இருந்தால் தேவலை.

திருச்சி - 8, தி.மா. தமிழ்முருகன்.

◆ ஒரே மேடையில் 'தனி ஆவர்த்தனம்' நடத்தும் (காங்கிரஸ்) தலைவர்கள், 'வீரப்பனைக் காட்டில் தேடாமல், கம்ப்யூட்டரில் தேடும் காவல் துறை - கார்ட்டூன்கள் பிரமாதம்! கார்ட்டூனிஸ்ட் 'கரோ'விற்குக் 'கணையாழி'யே போடலாம்!

திருச்சி - 4, வினை ராம்ஜி.

◆ 26.12.93 இதழில் இடம் பெற்ற ஜோக்குகள் அனைத்தையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டது தராசு சொல்லிய பிரதமருக்கான ஜோக்!

தக்கோலம், அ. முஸ்தபா.

◆ இன்று பூத்து நாளை வாடிவிடக்கூடிய பூக்களைக் கொண்டே ஒரு கிராமம் கோடிக்கணக்கில் வியாபாரம் காணும் செய்தியைப் படிக்கும் போதே மனம் 'பூ'ரிப்படைகின்றது!

திருவெண்ணெய்நல்லூர், வைத்யா.

◆ 'மங்காவிளை ஒரு மங்காத ஆச்சர்யம்' என்ற தலைப்பில் தாங்கள் இவ்வாரம் எழுதிய செய்தியைப் படித்தேன். மங்காவிளை கிராம மக்கள் பழங்காலம் தொட்டு, தங்கள் ஊரிலுள்ள அனைவரையும் சகோதர சகோதரிகளாக பாவித்துப் பழகி வருவதைப் பார்க்கும் போது எல்லா ஊர்களுக்கும் ஓர் உதாரணமாகத் திகழும் இக்கிராமத்தை, அகில இந்திய அளவில் ஒருமைப்பாட்டிற்கான மாதிரி கிராமமாக அரசாங்கம் தேர்ந்தெடுக்கலாமே!

லால்குடி, எம். இராஜேந்திரன்.

◆ 90 பேரைக் காப்பாற்றிய ராஜகோபாலின் செயல் பாராட்டப்பட வேண்டியதென்றால் அவரது இந்த சாதனை, கண்டு கொள்ளப்படாமல் இருப்பது வருந்தப்பட வேண்டியது.

கிருஷ்ணாபுரம், கே.பி. கிருஷ்ணகுமார்.

◆ டயர் தொழிற்சாலை நடத்த, பூர்வாங்க வேலைகள் நடக்கிறது எனக் கூறும் அமைச்சர் லாரன்ஸின் பணி பாராட்டத்தக்கது.

மேலகிருஷ்ணன்புதூர், ஆர்.கே. லிங்கேசன்.

◆ "நாகர்கோவில் - கன்யாகுமரி சிறப்பிதழ்" உங்கள் செலவில் ஒரு 'சுற்றுலா'வாக அமைந்தது. தொடரட்டும் உமது 'டூரிஸ'ப் பணி!

சென்னை - 49, மயிலை கோபி.

◆ கற்பித்த ஆசிரியருக்கு மரியாதை கொடுக்கும் பழக்கம் நகரங்களில் தேய்ந்து வருவதையும், கிராமங்களில் குருவே தெய்வம் என்னும் நற்பண்பு பசு மரத்தாணியாய் இன்னமும் நிலை பெற்றிருப்பதையும் அழகாக விளக்கியிருந்தது. 'திருச்சியிலிருந்து திருவோணம் வரை' சிறுகதை. பாராட்டுக்கள்!

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

◆ பொங்கல் சிறப்பிதழிலிருந்து தொடரப் போகும் புதிய தொடர் விளம்பரம் கண்டேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு சுஜாதாவின் தொடர் கதை கல்கியில் வெளிவரப் போவதினால், கல்கி வாசகர்களுக்குக் கொண்டாட்டம் தான்!

பெங்களூர் - 21, கி. ஜனார்தனன்.

◆ தாக்கோல், உருப்படி, சப்பட்டை, கொள்ளாம், பச்சக்காரன், ஊச்சாளி, கர்சவடம், தப்பளையன், தேச்சியம் என்னும் பேச்சு வழக்குச் சொற்கள் எல்லாமே மலையாள மொழிச் சொற்களாகும். சொல்லப் போனால் கன்யாகுமரி மக்களின் பேச்சு முழுவதுமே மலையாள வாடை நிறைந்ததாகத்தானிருக்கும்!

சின்னமனூர், எம். இந்திரா கனிப்ரியன்.

வட்டமேஜை

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன், ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

சைக்கிள் துறையில் தமிழகத்தின் சாதனை!



சுதந்திர பாரத நாட்டின் முதல் சைக்கிள் தொழிலகம் தமிழகத்தில்தான் 1949ல் சென்னைக்கருகே, அம்பத்தூரில் தொடங்கப்பட்டது என்பது நமக்குப் பெருமை. அந்த டி.ஐ. சைக்கிள் நிறுவனத்தின் ஆரம்ப நாளிலிருந்தே அதன் வளர்ச்சியில் பங்கேற்று, வழிகாட்டி வரும் மூத்த தலைவர் ஏஎம்எம் அருணாசலம் அவர்களை இந்த மடலுக்கு ஓர் அணிந்துரை வழங்குமாறு கேட்டுக் கொண்டோம் :

'இந்த தேசத்தின் பல்லாயிரக்கணக்கான சாமானியருக்கு ஒரு எளிய வாகனம் தயாரித்துத் தர வேண்டும். அதன் மூலம் அந்நியச் செலாவணியையும் மிச்சப்படுத்த வேண்டும்' என்பதே டி.ஐ. நிறுவனம் தொடங்கப்பட்டதன் நோக்கம். இந்த நோக்கம் நன்கு நிறைவேறியுள்ளது என்பதுடன், பல்வேறு சைக்கிள் நிறுவனங்கள் நாட்டில் தோன்ற முன்னோடியாகவும் டி.ஐ. தொழிலகம் அமைந்தது. அந்நியச் செலாவணி மிச்சப்படுத்துதல் என்ற நிலை மாறி இன்று ஏராளமாக அந்நியச் செலாவணி நாட்டுக்குச் சம்பாதித்துத் தரும் நிறுவனமாகவும் மாறிவிட்டது!

ஆசியாவின் மிகப் பெரிய சைக்கிள் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாக இன்று டி.ஐ. நிறுவனம் விளங்குகிறது. இந்த வளர்ச்சி, சைக்கிள் உற்பத்தி எண்ணிக்கையில் மட்டுமல்ல; தொழிலகத்தை நவீனப்படுத்துதல், பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப புதிய புதிய மாடல்களை உருவாக்குதல் என்ற முறையிலும் முன்னேற்றம். டி.ஐ. சைக்கிள்கள் இந்தியாவில் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் பிரபலமடைந்தன.

இத்துடன் திருப்தி அடையாமல் அயல் நாட்டுச் சந்தைகளை - குறிப்பாக ஐரோப்பா - ஆராய்ந்ததில் எதிர்கால ஏற்றுமதி வாய்ப்புக்கள் நிறையவே இருப்பது அறியப்பட்டது. கோலோன், மிலான் போன்ற நகரங்களில் நடந்த சைக்கிள் கண்காட்சிகளில், டி.ஐ. சைக்கிள் பங்கு பெற்றது. நானும் நேரில் சென்று நண்பர்களுடன் விவாதித்ததில் ஒரு லட்சியம் உருவாயிற்று. உலகளாவிய சைக்கிள் சந்தையில் நாமும் பங்கு கொள்ள முடியும் என்பதும் அப்படிப் பங்கேற்பதன் மூலம் உலகச் சந்தையைப் போட்டா போட்டி மிக்கதாகச் செய்ய முடியும் என்பதும்தான் அந்தத் தீர்மானம்.

இந்த இலக்கை நிறைவேற்ற ஏற்றுமதிக்கேற்ற சைக்கிள்களை உருவாக்கவென்றே ஒரு தொழிலகம் திட்டமிட்டுத் தொடங்கப்பட்டது. இதனை நமது முந்நாள் ஜனாதிபதி ஆர். வெங்கடராமன் 1993, ஏப்ரலில் தொடங்கி வைத்தார். இது, உலகில் சிறந்த சைக்கிள் தொழிலகங்களுள் ஒன்றாக விளங்குகிறது.


ஏற்றுமதி வர்த்தகத்தைப் பிடிக்க, அயல் நாட்டவரின் தேவைக்கு ஏற்ற சைக்கிள்களை உருவாக்க வேண்டும். இதற்கு அயல் தேச நவீன சைக்கிள் உற்பத்தியாளருடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் செய்து கொள்வதோடு, அங்குள்ள விநியோகஸ்தர்களுடனும் நெருங்கி வரவேண்டும். இதற்கேற்ப கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சைக்கிள்களை ஏற்றுமதி செய்தால் மட்டும் போதாது. சைக்கிள்களைப் பராமரிக்கவும் உதவ வேண்டும். ஏதாவது ரிப்பேர் என்றால் மாற்று உறுப்புக்கள் பூட்டிப் பழுதுபார்க்கப் பயிற்சி பெற்ற சரியான நபர்கள் தயாராய் இருக்க வேண்டும். இதற்காகத்தான் நம்பகமான வர்த்தக ஒப்பந்தங்கள் தேவைப்படுகின்றன.

டி.ஐ. சைக்கிளின் தலைமைப் பொறுப்பில் உள்ள பத்மநாபனும் அவரைச் சேர்ந்த இளமைத் துடிப்பு மிக்க நிர்வாகக் குழுவும் உலகச் சந்தைக் கனவை நினைவாக்கிக் காண்பித்திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு தொழில் பயிற்சி மட்டுமின்றி, தொழில் ஆர்வத்திலும் மனத்தளவில் பயிற்சி தரப்படுகிறது.

இந்தச் சாதனையும் திறமையும் எதிர்காலத்தில் மேலும் சிறப்புற்று நாட்டுக்கு நன்மை புரியும் என்று நம்புகிறேன்.

தமிழகத்தின் இந்தச் சாதனையைத் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் எடுத்துச் சொல்ல முன்வந்துள்ள கல்கிக்கு எனது வாழ்த்துக்கள்.

– ஏஎம்எம் அருணாசலம்



* பிரெஸ் வெல்டிங்




சர்வதேசச் சாலைகளில் தமிழக சைக்கிள்கள்!

ஒரு சைக்கிளை உருவாக்க சுமார் 320 பாகங்கள் தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் சேகரித்து, இணைத்து, தரம் சோதித்து ''இந்தா பிடி'' என்று வாடிக்கையாளரிடம் கொடுக்கும்போது அவர் முகம் திருப்தியில் மலரவேண்டும். அதுவும் வாடிக்கையாளர் மேலைநாட்டுவாசி என்னும் போது அவரது எதிர்பார்ப்பு அறிந்து செயல்பட வேண்டும்; இந்திய சைக்கிள்களின் மதிப்பும் உலக அளவில் உயர வேண்டும். அந்நியச் செலாவணி வரவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்க வேண்டும்.

இதையெல்லாம் நிறைவேற்றிக் காட்டவே சென்னையை அடுத்துள்ள பருத்திப்பட்டு கிராமத்தில் டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனத்தின் 'பிளான்ட் டு' (இரண்டாவது தொழிற்சாலை) ஆரம்பிக்கப்பட்டது.

சென்ற ஆண்டு டி.ஐ. நிறுவனம் முப்பது கோடி ரூபாய் மதிப்புள்ள சைக்கிள்கள் ஏற்றுமதி செய்தது; இந்த ஆண்டின் ('93) இலக்கு 75 கோடி ரூபாய். இதில் கணிசமான பங்கு பிளான்ட் டூவினுடையது. இந்த அதிநவீன ஆலையைப் பார்க்கப் போனோம். தொழிற்சாலை மேலாளர் ரத்தினவேலு ஒவ்வொரு கட்டத்தையும் விளக்கியபோது ஆச்சரியமாய்



* பெட்ரோலிய எரிவாயு மூலம் வெல்டிங்



* தரப் பரிசோதனை

இருந்தது.

● சைக்கிள் தயாரிப்புக்குத் தேவையான டியூபுகள் - அதாவது உலோகக் குழல்கள் - மட்டும் டியூப் புராடக்ட்ஸ் ஆஃப் இந்தியா என்ற சகோதர நிறுவனத்திலிருந்து தருவிக்கப்படுகின்றன. மற்ற பாகங்கள் வெவ்வேறு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கிப் பொருத்தப்படுகின்றன.

● தனித் தனித் துண்டுகளாக உள்ள குழல்களை இணைத்து, மெடல் ஃப்ரேம் செய்வது முதல் கட்டம். ஒரு டியூப் முனை மற்றொரு ட்யூபில் பொருந்தும்படி வெட்டுதல், நீட்டுதல், குமிழ் கொண்டு மூடுதல், மூடிய முனையை இலேசாக பிளத்தல் என்று பல்வேறு காரியங்கள். இவற்றைச் செய்ய நவீன இயந்திரங்கள். அவற்றைப் பக்குவமாக இயக்கத் தொழிலாளர்கள்...

ட்யூப்களை இணைக்க, பித்தளை (brass) பயன்படுத்தி வெல்டிங் செய்கிறார்கள். பித்தளை உருகி இரு பாகங்களையும் இறுக்கமாக இணைக்கிறது.


● இம்முறையில் வெல்டிங் செய்யும் போது டியூப் இணையும் இடங்களில் அதிகப்படியாகக் கொஞ்சம் பித்தளை உட்கார்ந்து, மேடு கட்டிக் கொள்கிறது. பின்னால் இதைச் சுத்தம் செய்ய வேண்டி வருகிறது. இந்தத் தொல்லை இல்லாத புதிய முறைகளில் டியூப்களை இணைக்கும் டெக்னிக்கையும் அறிமுகப்படுத்தி விட்டார்கள். இப்போதைக்கு இரண்டு விதங்களிலும் வேலை நடந்து வருகிறது.


● சீட்டும் பின் சக்கரமும் பொருந்தும் ட்யூப்கள் இம்முறையில் ஒரு பக்கம் தயாராக, மறுபக்கம் முன் சக்கரம் பொருந்த வேண்டிய ஃபோர்க்குகள் தயாரிக்கப்படுகின்றன.



● பெயின்ட் மூலம் பக்குவம்


● டியூப்கள் ஒட்டுதல்...


● நட்டை சுற்றிய ஃப்ரேம் தயார்!


● சக்கரங்கள் தயாராகின்றன...





* கியர் அசெம்ப்ளி

உலோகக் குழல்களை வெல்ட் செய்து ஃபோர்க் தயாரிக்கும் விசேஷ இயந்திரம், தாய்வனிலிருந்து இறக்குமதி.

● ஃபோர்க்குகளும் ஃப்ரேம்களும் பின்னர் ஊறுகாய் போடப்படுகின்றன! ஆமாம், இந்த பாகங்களை பல்வேறு திரவங்களில் முக்கி எடுத்துப் பின்னர் கொதி நீரில் கழுவி எடுக்கும் முறையை 'pickling' என்கிறார்கள்! கொதி நீரின் சூடு உலோகத்தில் ஏற, கொதிகலனை விட்டு வெளியே வரும் பாகங்கள் துப்புறவாகி, சுக்காகக் காய்ந்த நிலையில் உள்ளன!


● சுத்தமான பாகங்களுக்கு ஃபாஸ்பேட்டிங் நடக்கிறது - அதாவது மரத்துக்கு பிரைமர் அடிப்பது போன்ற ஒரு செயல் முறை. பாஸ்பேட்டில் குளித்த பாகங்கள் பெயின்ட் ஷெட்டுக்குக் கன்வேயர் பெல்ட் மூலம் போகின்றன.

● பெயின்ட்டிங் செக்ஷனில் பெயின்ட் பாய், உலகத் தர நிர்ணயப்படி வர்ணங்களைச் சேர்த்துத் தயாரிக்க, கொக்கிகளில் தொங்கியபடி வரும் ஃப்ரேம்கள் ஆடோமாடிக் ஸ்ப்ரே முறையில் வண்ணமூட்டப்படுகின்றன. Electro static painting என்ற இம்முறையில் பெயின்ட் சிதறி வீணாவது குறைவு என்பதுடன் சீராகவும் பரவுகிறது.


● இயந்திர பெயின்டிங் முடிந்தபின் ஊழியர்கள் paint gun கொண்டு அப்பாகங்களை touch up செய்கிறார்கள். ஈரம் காய்வதற்கு முன்னரே மேலும் ஒரு நிறம் பூசக்கூடிய wet over wet முறையில் பளபளவென்று அழுத்தமான நிறத்துடன் பிரகாசிக்கின்றன ஃப்ரேம்கள்.

● இதற்குப் பின்னர் இந்த ஃப்ரேம்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி, கனமான பிரவுன் அட்டை சுற்றி ஊழியர்கள் அனுப்ப, ஹான்டில்பாரும் சக்கரமும் பொருத்தும் முக்கியமான பணி நடைபெறுகிறது.

● சக்கரங்கள் தனியாக மேல் தளத்தில் தயாராகின்றன. கம்பிகளை வட்ட பிரேமில் பொருத்துதல், சரிபார்த்தல், மையத்தில் பல் சக்கரம் பொருத்துதல், (gearகளுடன் கூடிய multispeed சைக்கிள் என்பதால் இந்த ஏற்பாடு) ரப்பர் பட்டை மாட்டுதல், மீண்டும் சரி பார்த்தல் என்ற கட்டங்களைக் கடந்து முன்-பின் சக்கரங்கள் ஜோடி ஜோடியாகக் கன்வேயர் பெல்ட்டுக்குப் போகின்றன. அந்தரத்திலெல்லாம் பயணம் செய்து ஒரு கிலோ மீட்டர் பாதை கடந்து, கீழ்த்தளத்தில் உள்ள ஃப்ரேம்களைக் கைப்பற்ற வருகின்றன. சர்வ ஜாக்கிரதையாக ஃப்ரேம்



* விதவிதமாய் இயக்கம்...



* கன்டெய்னர் ஏறிவிட்டன...

களுக்கும் சக்கரங்களுக்கும் (செயின் மாட்டி) கல்யாணம் செய்து வைக்கிறார்கள். ஆறு ஸ்பீடுகளுக்கு உரிய கியர் மாற்றங்கள் செய்து சோதிக்கிறார்கள்.

● இறுதியில் மீண்டும் ஒருமுறை ஆராய்ந்து, குறையொன்றுமில்லை என்று உறுதிப்படுத்தி, சைக்கிளை அகலமான அட்டைப் பெட்டிகளுக்குள் இறக்கி பாக் செய்து, கன்டெய்னருக்குள் ஏற்றினால்... கப்பல் ஏறத் தயார்!

● இந்தத் தயார் நிலையை எட்டுவதற்கு முன் உள்ள ஒவ்வொரு கட்டத்திலும் சம்பந்தப்பட்ட ஊழியர்களே தரச் சோதனை செய்கிறார்கள் என்பதுதான் குறிப்பிடத்தக்க விஷயம்.

- ''இதுவே டி.ஐ.யுடைய வெற்றியின் ரகசியமும் கூட....'' என்கிறார் ஃபாக்டரி மேலாளர் ரத்தினவேலு.

'91 இல் வெறும் ஃப்ரேம்களையும் ஃபோர்க்குகளையும் மட்டுமே தயாரித்து ஏற்றுமதி செய்த பிளான்ட் - டூ இன்று நாளொன்றுக்கு 600 முதல் 700 சைக்கிள்கள் வரை உற்பத்தி செய்கிறது. ''சீக்கிரமே நாளொன்றுக்கு இரண்டாயிரம் சைக்கிள்கள் இந்த ஃபாக்டரியிலிருந்து வெளிவரச் செய்ய வேண்டும் என்று திட்டம் இருக்கிறது'' என்கிறார்.

ஐ.எஸ்.ஓ. 9000 என்ற உலகத் தர அங்கீகாரச் சான்றிதழைப் பெறும் விளிம்பில் நிற்கிறது இந்தத் தொழிற்சாலை. ஜனவரி இறுதியில் நடக்கவுள்ள இன்ஸ்பெக்‌ஷனுக்குப் பிறகு, சான்றிதழ் கிடைத்து விடும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

'91 பிப்ரவரியில் ஆரம்பித்த தொழிற்சாலை '93 பிப்ரவரிக்குள் ISO 9000 சான்றிதழ் பெற வேண்டுமெனில் எத்தகைய உழைப்பும் திட்டமிடலும் நிகழ்ந்திருக்கும் என்பதை எண்ணி வியக்கிறோம்.

''எல்லாம் டீம் ஒர்க்தான் காரணம்'' என்கிறார் பெர்சானல் அதிகாரி ராக்கி ரஸ்ஸல். ''இந்தத் தொழிற்சாலையில் உள்ள ஊழியர்கள் எந்தப் பிரிவில் வேண்டுமானாலும் பணியாற்றப் பயிற்சி பெற்றவர்கள். பத்தாவது பாஸ் செய்த இளைஞர்களை, தொழில் திறமைக்கு மட்டுமின்றி ஒத்துழைக்கும் மனோநிலை உள்ளதா என்றும் பரிசோதிக்கிறோம். பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள் தொழில் பயிற்சி மட்டுமின்றி, மனவளப் பயிற்சியும் பெறுகிறார்கள். ஆரம்பம் முதலே, 'இந்தத் தொழிற்சாலையின் வெற்றியில் ஒவ்வொருத்தருக்கும் பங்கு உண்டு என்பது அறிவுறுத்தப்படுவதால் ஆசையுடனும் பெருமிதத்துடன் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் ஊழியர்களுடன் சந்திப்பு நடத்துகிறோம். பிரச்னைகள் அலசித் தீர்க்கப்படுகின்றன, சாதனைகளும் திட்டங்களும் விவரிக்கப்படுகின்றன. பலன் : ஈடுபாட்டுடன் கூடிய உழைப்பு... மனத்திருப்தியான சூழ்நிலை.



* ரத்தினவேலு

தொழிற்சாலையைச் சுற்றி வந்த போது இதைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. கரி படிந்த சுவர்களோ, எண்ணெய்ப் பிசுக்குடன் தரையோ காணப்படவில்லை. மனம் ஒன்றிய நிலையில், சீருடை அணிந்த தோள்கள் அங்கே தங்கள் முன்னேற்றத்துக்கும், டி.ஐ.யின் முன்னேற்றத்துக்கும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கும் உழைத்துக் கொண்டிருந்தன!

– சீதா ரவி

சைக்கிள்கள் தொடர்பான படங்கள் :
கோபிநாத்

எக்ஸ்ட்ரா ஃபிட்டிங் ஏகமாய்ப் போடுவார் கிராமத்துவாசி!



● பிராட்வேயில் சைக்கிள் கடை

ஒரு காலகட்டத்தில், சென்னை பிராட்வே சைக்கிள் கடைகளில் இறக்குமதி செய்த சைக்கிள்கள்தான் விற்றார்கள் என்றால் ஆச்சரியமாயில்லை? ''1950களிலெல்லாம் கூட அப்படித்தான் விற்றோம் சார்...'' என்கிறார் அரவிந்த் செலட். இவருடைய தாத்தா உமாசங்கர் செலட்தான் முதன் முதலாகச் சென்னையில், 1923-ல், பிரிட்டிஷ் சைக்கிள் கம்பெனி என்ற பெயரில் சைக்கிள் மொத்த விற்பனை வியாபாரத்தைத் துவக்கியவர். பின்னர் குடும்ப பாகப்பிரிவினையில், அந்தக் கம்பெனி உறவினர்கள் கைக்குப் போக, 'பிராட்வே சைக்கிள் கம்பெனி' என்று துவக்கினார். அதன் இன்றைய அதிபர் அரவிந்த் தொடர்கிறார்: ''இன்று உலகத்திலேயே அதிக சைக்கிள்கள் உற்பத்தி செய்வது இந்தியாதான்! ஹீரோ சைக்கிள்காரர்கள் மட்டுமே ஒரு நாளைக்கு 13000 சைக்கிள்கள் தயாரிக்கிறார்கள்.''

இருபது வருடத்துக்கு முன்பு 235 ரூபாய் விற்ற சைக்கிள் இன்று 1500 ரூபாய்! 1100 ரூபாயிலிருந்து 3000 ரூபாய் வரை சைக்கிள்கள் உண்டு. சாதாரண சைக்கிள்கள் போய், ஃபான்ஸி சைக்கிள்கள்தான் இப்போதைய அட்ராக்ஷன். பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர் ஃபான்ஸி சைக்கிளைத்தான் விரும்புகிறார்கள். ஓட்டுவதற்குச் சுலபமாகவும் இருப்பதால், இவை ஏகமாக விற்பனையாகின்றன.

தொழிற்சாலையிலிருந்து சக்கரம், ஃப்ரேம், மட்கார்ட் என்று தனித்தனி பாகங்களாகத்தான் மொத்த விற்பனைக் கடைக்கு வருகின்றன. மொத்த விற்பனையாளர் அவற்றை இணைத்து, முழு சைக்கிளாக்கி விற்கிறார். சைக்கிளின் விலையில் ஸீட் கவர், பெல், ஸ்டாண்ட், கேரியர், முழு செயின் கவர், பூட்டு முதலியவை அடக்கம். டைனமோ, கண்ணாடி, பம்பர் என்று எக்ஸ்ட்ரா பிட்டிங்களும் உண்டு.


''கிராமத்து ஆளுங்க வந்தால், எல்லா எக்ஸ்ட்ரா பிட்டிங்கும் போட்டுத்தான் வாங்கிக் கொண்டு போகிறார்கள். 'நம்ம ஊர்ல இது மாதிரி வண்டி யார்கிட்டேயும் இருக்கக் கூடாது' என்று சொல்கிறார்கள். அதில் ஒரு பெருமை அவர்களுக்கு'' என்கிறார் அரவிந்த்.

இப்போது ஸ்பீட் சைக்கிள்களும் வந்திருக்கின்றன. சாதாரண சைக்கிளை ஐந்து முறை பெடல்களை அழுத்திச் சுற்றினால் 50 அடி

சமீபத்தில் ஒரு நண்பரது சைக்கிளை யாரோ 'சுட்டுக்' கொண்டு போய் விட்டார்கள். நண்பர் கொஞ்சம் செல்வாக்கு மிக்கவர். காவல் துறை மேலிடத்தில் ஆட்களைப் பிடிக்க, சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனிலிருந்து, தொலைந்து போன பழைய ஹெர்குலஸ் சைக்கிளுக்குப் பதிலாகக் கொஞ்சம் புதிய ஹீரோ சைக்கிளே கொடுக்கப்பட்டது. நண்பருக்கு ஏகக் குஷி. ஆனால் சைக்கிள் தொலைந்து போன எல்லோருக்கும் இது போன்று அதிர்ஷ்டம் அடிக்குமா? காவல் துறை அய்வாளரான நண்பரிடம் கேட்டோம்.

''சைக்கிள் திருட்டுப் போய் விட்டது என்று வருகிற புகாரை, சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவின் கீழ் பதிவு செய்து விசாரிப்போம். ஒரு ஏரியாவில் 'சைக்கிள் சூடு' கொஞ்சம் அதிகமாக இருந்தால், ஹோட்டல்கள், அலுவலகங்கள் முன்பு, மப்டியில் ஆட்களைப் போடுவோம். எவனையாவது கையும் களவுமாகப் பிடித்து விட்டால், செமை திமித்து திமித்து எங்கெல்லாம் திருடினான் என்பதைத் தெரிந்து கொண்டு அந்த சைக்கிள்களைத் திரும்பப் பெற முயற்சி எடுப்போம். வழக்குப் பதிவு செய்து அவனை ஜெயிலுக்கு அனுப்பி விட்டு, பின்பு புகார்களைப் பார்த்து, உரிமையாளர்களுக்கு சைக்கிளைக் கொடுப்போம். அதற்குள் சைக்கிளின் நிலை என்னவாகும் என்று உங்களுக்கே தெரியும்'' என்று சிரித்தார் அவர்.

சாலையில் சைக்கிளை நிறுத்தி விட்டு ஹோட்டலில் பார்ஸல் வாங்கப் போனாலோ, அல்லது மாலை முரசு போஸ்டரைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாலோ



போருமென்றால் ஸ்பீட் சைக்கிள்கள் 80 அடி வரை போகும். இதுதவிர, ஷாக் அப்ஸார்ப்பர் வைத்தும் சைக்கிள் உண்டு.

இப்போது சைக்கிள் வாங்க வருபவர்கள், ''இந்த விலைக்கு மொபெட்டே வாங்கிடலாம் போலிருக்கு'' என்று கமெண்ட் அடிக்கிறார்களாம். ''அது சரி.. தினசரி அதற்கு 'தீர்த்தம்' ஊற்றிக் கட்டுப்படியாகுமா?' என்று கிண்டலாகக் கேட்கிறார் அரவிந்த்.

''இப்போதெல்லாம் கார் வைத்திருப்பவர்கள் கூட, அருகில் இருக்கும் இடங்களுக்குப் போய் வர சைக்கிளைப் பயன்படுத்துகிறார்கள். நகரம், வளர்ச்சியுற்றுக் கொண்டு போக, புறநகர்களில் உள்ள மக்கள் அருகில் உள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு வர சைக்கிளைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆக சைக்கிள்களுக்கு மார்க்கெட் குறையுமென்ற பேச்சே கிடையாது. மழைக் காலத்தில் கொஞ்சம் விற்பனை குறையும், அவ்வளவுதான்'' என்றார் அரவிந்த்.

– ஆரெஸ்வி

காயலான் கடையாகும் காவல் நிலையங்கள்!

இதற்கெனத் தயாராக இருக்கும் ''தோழர்'' கண்ணிமைக்கும் நேரத்தில் உங்கள் சைக்கிளைக் கடத்திக் கொண்டு போய் விடுவார். ''ஒரு நிமிடம்தான் என்றாலும் பூட்டி வைத்துச் செல்வது நல்லது'' என்றார் நண்பர்.

ஆனால் பூட்டப்பட்டிருக்கும் காரையே அபேஸ் செய்து கொண்டு போகும் நிலையில் சைக்கிள் எம்மாத்திரம்?

பெரும்பாலான சைக்கிள் திருடர்கள் திருடிய சைக்கிளை உடனே மார்வாடிக் கடையில் 'வைத்து'ப் பணம் வாங்கிச் சென்று விடுவார்கள். மார்வாடிக்கு போலீஸை எப்படிச் சமாளிப்பது என்று தெரியும்.


சென்னை நகரில் மட்டும் தினசரி, சராசரி 10லிருந்து 15 சைக்கிள்கள் திருட்டுப் போகின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் சைக்கிளைப் பறிகொடுத்தவர்கள், பெரும்பாலும் சம்பந்தப்பட்ட ஸ்டேஷனோடு தொடர்பு கொண்டு 'கிடைத்து விட்டதா' என்று நச்சரிப்பதில்லையாம். அதனால்தான் 'கேட்பாரற்றுக் கிடக்கும் சொத்து' ஸ்டேஷன்களில் அதிகமாகி விட்டதாம்.

பல போலீஸ் ஸ்டேஷன்களில் காயலான் கடை போல் சைக்கிள்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கலாம். ஏகமாகச் சேர்ந்தபின், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு எழுதி, அவர்கள் வந்து ரிக்கார்டுகளைப் பார்த்து ஏலம் விடுவார்கள்.

''படா பேஜாரான வேலை ஸார் அது'' என்று அலுத்துக் கொள்கிறார் ஒரு ஏட்டு.

– ஆர். எஸ்.

● இப்படி 'அம்போ'ன்னு விட்டுட்டுப் போனா திருட்டுப் போகாம என்ன செய்யுமாங்களாம்?



சைக்கிள்

அன்றிலிருந்து இன்று...

சைக்கிளை யார் கண்டு பிடித்தார்கள்? எல்லோரும் மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். பிரான்சும் ஜெர்மனியும் தாங்கள்தான் சைக்கிளின் பரமபிதா என்று மோதுகின்றன.

உலகின் முதல் சைக்கிள் தோன்றியது, 4-2-1645 என்கிறது வரலாறு. ஆச்சரியம்தான். அப்போது இதன் பெயர் சைக்கிள் இல்லை. யாரோ ஒரு நபருக்கு சைக்கிள் போன்று இருந்த ஒன்றை முப்பது வருடம், ஆண்டு அனுபவிக்க பதிவுரிமை வழங்கப் பட்டிருக்கிறது. அதை இப்படிக் கூறியிருக்கிறார்கள் : 'நான்கு சக்கரங்கள் கொண்ட, குதிரைகள் தேவைப்படாத, இரண்டு நபர் அமரும் வாகனம்.'

முதல் இரண்டு சக்கர வாகனம் தெரிய வருவது, 1818, ஏப்ரல் 6 ஆம் தேதி தான். அன்று பாரீஸில் நடந்த கண்காட்சியில், பாரன் கார்ல்டி டிரெய்ஸ் டி சார்பர்ன் என்ற கண்டுபிடிப்பாளர் இதை வைத்திருந்தார்.

அது மரத்தால் செய்யப்பட்டிருந்தது. ஓட்டுபவர் காலால் தள்ளித் தள்ளி அதை ஓட்டினார். அதைக் காப்பியடித்து பிரிட்டனில் டென்னிஸ் ஜான்சன் சைக்கிள் செய்தார். இங்கிலாந்தில் இதனை hobby horse என்றோ, dandy horse என்றோ அழைத்தனர்.

சுயமாக நகரக்கூடிய சைக்கிளைச் செய்து புண்ணியம் கட்டிக் கொண்டவர் ஸ்காட்லாந்தின் க்ரெக் பாட்ரிக் மாக்மில்லன். நான்காண்டு ஆராய்ச்சிக்குப் பின் 1839ல் இவர், பின் சக்கர ஆக்ஸிலை இணைத்த நீண்ட தண்டில் காலால் மிதித்து இயக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். இதுவே இன்றைய செயினும் ஸ்போர்கட்டும் உள்ள முறைக்கு முன்னோடி.

1861ல் பிரெரி மீஷோ மற்றும் அவரது மகன் எர்னஸ்ட் இருவரும் இணைந்து சைக்கிள் பெடல்களை உருவாக்கினார்கள். அதை அவர்கள் முன்சக்கர ஆக்ஸிலுக்குப் பொருத்தினார்கள். அதை 'எலும்பு குலுக்கி' என்று செல்லமாய் அழைத்திருக்கிறார்கள். மரச் சக்கரங்களும் இரும்புத் தண்டுகளும் உடலை அப்படிக் குலுக்கின!


சைக்கிள் ரப்பர் டயர்களைக் கண்டது 1869 ல். பிரேக்குக்கு அவர்கள் ஒரு கயிறைப் பிடித்து இழுத்து நிறுத்தினார்கள். இக்கயிறு ஒரு தோல் பிடிப்பானைக் கொண்டிருந்தது. அது சக்கர ஓரம் ஒதுங்கியிருந்தது.

முதன் முதலில் 'சைக்கிள்' என்று பதிவுரிமை செய்யப்பட்ட வருடம் 1869.

1877 லேயே அமெரிக்காவில் சைக்கிள் உற்பத்தி தொடங்கிவிட்டது. பாஸ்டனைச் சேர்ந்த ஆல்பர்ட் ஏ. பாப், டபிள்யு. எஸ். ஆட்வெல்லிடமிருந்து 313 டாலருக்கு சைக்கிள் செய்து வாங்கியிருக்கிறார். மேலும் அவர் சைக்கிள் வேண்டும் என்று கேட்ட போது, வீட் கவிங்மெஷின் கம்பெனியால் அதை உற்பத்தி செய்ய முடியவில்லை. அதனால், உடனே போப் உற்பத்தி நிறுவனம் துவங்கப்பட்டது.


அப்போதைய சைக்கிள்கள் கனமானவை. எடையைக் குறைக்க 1870ல் ஜேம்ஸ் ஸ்டார்லி முயற்சிகள் துவங்கினார். இவர் முன்னால் பெரிய சக்கரமும் பின்னால் சிறிய சக்கரமும் கொண்ட சைக்கிளை உருவாக்கினார். சக்கரங்களை இரும்பில் செய்து, இறக்கிய

* இருவருக்கான சைக்கிள்





* 150 ஆண்டுகளுக்கு முன்...



கம்பிகளால் ஸ்போக்ஸ் செய்தார். ஐம்பது பவுண்ட எடை கொண்ட இதை, ரேஸுக்காக இருபத்தியொரு பவுண்டாகப் பின்னால் குறைத்துக் கொடுத்துள்ளார்.

பின்னரே, உபயோகமான சைக்கிள்கள் வந்தன. இதற்கு பெயரே 'பாதுகாப்பு சைக்கிள்!' உருவாக்கியவர் ஹாரி ஜே. லாசன்.



* நீண்ட கைகளுடன் : ஜெர்மனியின் புதுமை

வருடம் 1874. இதில் சாதாரண அளவுடைய இரண்டு சக்கரம், மிதிக்கும் பெடலுக்கும் பின் சக்கரத்திற்கும் வட்டமான செயின் போன்றவை இருந்தன. சில ஆண்டுகள் இந்தப் பாணி தாக்குப் பிடித்தது.

* பரிணாம வளர்ச்சி...

ஜான் பாய்ட் டன்லப் இங்கேதான் எட்டிப் பார்க்கிறார். 1888ல் நியூமேடிக் டயர்களை அறிமுகப்படுத்தினார். பாதுகாப்பு சைக்கிள் நியூமேடிக் டயர்களுடன் ஒரு பெரிய சுற்று வந்திருக்கிறது. 1893ல் டயமண்ட் பிரேம்கள் புழக்கத்தில் வந்துள்ளன. பெரும்பாலும் குறைந்த விலை என்ற காரணத்துக்காகவே.

1863 லிருந்து 1962 வரை சைக்கிள் டிசைன் பெரும்பாலும் அப்படியேதான் இருந்திருக்கின்றன. சிற்சிறு முன்னேற்றங்களே சேர்க்கப்பட்டன.

1893 ல் பெண்கள் சைக்கிள் உருவானது. நடுத்தண்டு, பெண்கள் நீண்ட அங்கியுடன் ஓட்டுவதைத் தடுத்தது. அதனால், குறைந்த எடையுடைய, நடுத்தண்டு வளைந்த மாடல்கள் பெண்களுக்காகத் தயாரிக்கப்பட்டன. 'பாதுகாப்பு சைக்கிளின்' ஒரு வகை இது.

இந்தியாவில் முதலில் சைக்கிள் 1890 ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னையில் இந்திய சைக்கிள் கம்பெனி 1938 ல் துவங்கியது. '93 ல் பாட்னாவில் இந்துஸ்தான் சைக்கிள் நிறுவனமும் பம்பாயில் ஹிந்த் சைக்கிள் கம்பெனியும் தோன்றின. இவை உற்பத்தியை முறையே 1942 ஓம், 1941 ஓம் துவக்கின.

பின்னர் இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டது. இரும்பு விலை குறைந்தது. கூடவே தொழிலாளர் மத்தியில் சைக்கிள் ஆர்வம் பெருகியது. அவர்களின் ஊக்கம் உற்பத்தியை அதிகப்படுத்தியது.

இந்திய அரசு, மூன்று நிறுவனங்களுக்கு சைக்கிள் உற்பத்தி செய்ய அனுமதியளித்தது 1949 ல். அவை டி.ஐ. சைக்கிள் நிறுவனம், சென்-ராலி நிறுவனம் மற்றும் அட்லாஸ் நிறுவனம். பின்னரே வோர்வெல் நிறுவனமும், ரோட்மாஸ்டரும்.

– வெங்கி.

டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

சைக்கிளைப் பராமரிப்பது எப்படி?

இதோ, சில டிப்ஸ்கள் தருகிறார் தி.நகரில் உள்ள சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரியும் தேவராஜன்.

★ தினமும் ஐந்து பத்து நிமிடங்கள் செலவழித்து, துடைக்கத் தவறக் கூடாது.

★ மழையில், சேற்றில் நனைந்தால், பொறுமையுடன் சைக்கிளைத் துடைத்து, லேசாக எண்ணெய் போட வேண்டும்.

★ போதிய அளவு காற்று, சக்கரங்களில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். போதிய காற்று இல்லாத போது டயர்ல் அடித்தால், டயர், டியூப் மிகவும் பாதிக்கப்படும். வேகமாய்ச் செல்ல அதுவே தடையாய் அமையும்.

★ பயன்படுத்தும் அளவை ஒட்டி, ஆறு மாதத்துக்கு ஒருமுறையோ அல்லது ஆண்டுக்கு ஒருமுறையோ சைக்கிளை முழுமையாய்க் கழற்றி, சர்வீஸ் செய்து, பூட்ட வேண்டியது முக்கியம்.

★ நட் ஏதும் லூசாதல், உராய்வு போன்ற சிறு விஷயங்களை உடனடியாய்க் கவனிக்காமல் விட்டு விட்டால் பிற்பாடு, கணிசமான செலவில் கொண்டு போய் விட்டு விடும்.

– கௌதம் ராம்



ஏற்றுமதி அலையில் இந்திய சைக்கிள்கள்!

இந்தியாவில், இன்றைக்கு சைக்கிள் உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் நிறுவனங்கள் என்றால், நம்மூர் டி.ஐ. சைக்கிள் தவிர, வடக்கே அட்லஸ், மற்றும் முதல் இடத்தை ஏற்கெனவே பிடித்திருக்கும் ஹீரோ சைக்கிள்ஸ். அட்லஸ் நிறுவனத்துக்கு சோனேபட், சாஹிபாபாத் என்ற இரண்டு இடங்களிலுமே தொழிற்சாலைகள் இருந்தாலும், மத்தியப் பிரதேசத்தில் இன்னொரு நவீன தொழிற்கூடம் கட்டி வருகிறது. காரணம் : எக்ஸ்போர்ட். சோனேபட்டில் மோபெட் தயாரிப்பை நிறுத்திவிட்டு, ஏற்றுமதிக்கான சைக்கிள்களைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள்! 'ஹீரோ' சும்மாயிருக்குமா? மாதத்தில் பதினைந்தாயிரம் சைக்கிள்கள் கூடுதலாக ஏற்றுமதி செய்யும் அளவுக்குத் தொழிற்சாலையையே அதிநவீனமயமாக்கி வருகிறார்கள், எட்டு கோடி ரூபாய் முதலீட்டில்! வெல்டிங் வேலையை எல்லாம் ரோபோ செய்து விடுமாம்! இன்னும் இரண்டு வருடங்களில் ஏற்றுமதி, நூறு கோடி ரூபாயைத் தொட வேண்டுமாம். நிச்சயம் தொடுவார்கள். அதற்கு முன்னால்தான் வாங்குகிறவர்களின் மனசைத் தொட்டுவிடுகிறார்களே!

கொஞ்ச நாள் முன்புவரை நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்த குஜராத் சைக்கிள்ஸ் (ஹீரோ) கூட இப்போது கனடாவுக்கும் ஜெர்மனிக்கும் யு.கேவுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு தலை நிமிர்ந்திருக்கிறது.

''இன்னும் ஐந்து வருடங்களில், ஐரோப்பிய நாடுகள் அத்தனையும் இந்தியாவிலிருந்துதான் இறக்குமதி

ஸ்ட்ரீட் கேட்டும்



அட்லஸ், ஹீரோ, ஃபிலிப்ஸ், ஹெர்கு லிஸ் என்று பலத்தை உணர்த்தும் பெயர்கள் போய் ஸ்ட்ரீட் கேட், ராக் ஷாக், வைல்ட் கேட் மங்கூஸ் என்ற ஜாலி பெயர்கள் மார்க் கெட்டில் முளைத் துள்ளன.

இது குறித்து டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனத் தின் ரீஜனல் சேல்ஸ் மானேஜர் ஆர். ராமச் சந்திரனிடம் கேட்டோம்.

''இந்த மூன்று அல்லது நான்கு வருடங்களில் இந்திய சைக்கிள் மார்க்கெட்டின் முகமே மாறிப் போய் விட்டது. புதுப்புது மாடல்களின் அறி முகமும், அவற்றுக்குக் கிடைத்த வர வேற்பும்தான் காரணம். டீவி விளம் பரங்களின் பங்கும் கணிசமானது!'' என்றார் ராமச்சந்திரன்.

● ஃபேமஸ் மேனுடன் சந்திரேஷ்

ஒரு 'ஸ்ட்ரீட் கேட்' சைக்கிளை நம் மிடம் காட்டி, ''இது 18 - ஸ்பீடு பைக். இதில் பொருத்தப் பட்டிருக்கும் ஷிமானோ கியர், ஜப்பானிலுள்ள கியர்வீடர் என்று சொல் லப்படும் ஷிமானோவின் தயாரிப்பு!'' என்றார்.



ஏப்ரல், மே, ஜூன் ஆகிய விடுமுறைக் காலம், சைக்கிள் விற்பனையின் உச்சகட்ட காலமாம். பிறகு

● ஸ்ட்ரீட் கேட்களின் அணிவகுப்பு

செய்யப் போகின்றன. இதுதான் உண்மை!'' என்கிறார் அட்லஸ் சைக்கிள் நிர்வாக இயக்குநர் கௌதம் கபூர்.

''பன்னிரண்டு நாடுகள் கொண்ட ஐரோப்பியச் சந்தையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பதினைந்து மில்லியனிலிருந்து இருபது மில்லியனாக விற்பனை உயர்ந்தாலும், பாதிக்கும் குறைவானதுதான் ஐரோப்பிய உற்பத்தியாளர்கள் தயாரித்திருக்கிறார்கள். மீதி அத்தனையும் அங்கே இறக்குமதி செய்யப்பட்டவைதாம். காரணம், அங்கு சம்பளம் மிக அதிகம். உற்பத்திக்கு அதிகமாகச் செலவாகிறது. இறக்குமதி, சீப்பாக முடிகிறது! அதனால் இந்த அரிய வாய்ப்பை நாம் இப்போது நழுவ விட்டால், நிச்சயம் திரும்பப் பெறப் போவதில்லை!'' என்கிறார் ஹீரோ சைக்கிள்ஸ் மானேஜிங் டைரக்டர் விஜய் முஞ்சால்.

வோர்ல்ட் வாட்ச் இன்ஸ்டிட்யூட்டின் சமீபத்திய அறிக்கையில், கூரியர் சர்வீஸ்களும், ஃபாஸ்ட் ஃபுட் நிறுவனங்களும், போலீஸ் ஸ்டேஷன்களும் கூட, சைக்கிள்களைத்தான் பெருவாரியாகப் பயன்படுத்துகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் அமெரிக்காவில் போதை மருந்துக்காரர்களைப் பிடிப்பதற்குச் சைக்கிள் ஸ்குவாடுகள் நூறுக்கு மேல் இருக்கின்றனவாம். காரில் போய்ப் பிடிக்கப் போனால் தப்பிச் சென்று விடுகிறார்கள் என்பதால் சைக்கிள் என்கிறது யு.எஸ். காவல் துறை!



• உலக நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி... டி.ஐ. நிறுவன அணிவகுப்பு....

– சாருகேசி

ராக் ஷாக்கும்!

மறுபடி கிறிஸ்துமஸ் விடுமுறையில் சூடு பிடிக்குமாம்.

''கடந்த 15 வருடங்களாகவே டி.ஐ., புதிய வகை சைக்கிள்களை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக இருந்து வந்திருக்கிறது. பி.எஸ்.ஏ., எஸ்.எல்.ஆர். ஐ இளம் வயதினருக்காக அறிமுகப்படுத்தியபோது, கிடைத்த உற்சாகமான வரவேற்பு, புதிய புதிய மாடல்களை மேலும் அறிமுகப்படுத்தத் தூண்டியது. கவர்ச்சிகரமான வடிவங்களில், இளைஞர்களின் விருப்பத்தை உணர்ந்து ஸ்ட்ரீட் கேட், ராக் ஷாக், என்ற பிராண்ட் பெயர்களில் புதிய தலைமுறைக்குத் தகுந்த, முன்புற சஸ்பென்ஷன், ஷாக் அப்சார்பர்களுடன் இவை விற்பனைக்கு வந்த போது பலத்த வரவேற்பு. இதில் வெகு சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஃபோல்டுமேன்' ஏற்றுமதி நோக்கில் உருவாக்கப் பட்டது என்றாலும் உள்ளூர் மார்க்கெட்டிலும் நல்ல ஆதரவு இருக்கிறது!'' என்றார் ராமச்சந்திரன்.




• ராமச்சந்திரன்

தி.நகரில் உள்ள பி.எஸ்.ஏ. ஷாப் அதிபர் சந்திரேஷ், ராமச்சந்திரன் சொன்னதை ஊர்ஜிதப்படுத்தினார் : ''அவரவர் விருப்பப்படி புதிய புதிய பிராண்ட் பெயர்களில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லி வாங்கிப் போகும் வாடிக்கையாளர்கள்தாம் இப்போது அதிகம். பெண்களும் வந்து வாங்குகிறார்கள். ஆனால் 80 சதவிகித கஸ்டமர்கள் ஆண்கள்தான்!''

– சித்தார்த்

சைக்கிள் விஷயத்தில் செம தில்வண்டு!



* விஸ்வநாதன்

சைக்கிள் துடைப்பது, காற்று அடிப்பது, கடைக்குப் போய் டீ வாங்கி வருவது, இப்படிப் பட்ட வேலைகளைத் தான் தருவார்களாம், சைக்கிள் கடைகளில் வேலைக்குச் சேரும் பையன்களுக்கு. படிப்படியாய் வேலை கற்றுக் கொண்டு, சைக்கிளை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றிப் போட்டு, கெரஸின் ஸ்நானம் செய்து வைத்து, ஃபீனிக்ஸ் பறவையாய், மீண்டும் அதை உருவாக்குவதுதான் தொழில் கற்றுக் கொள்ளு வதன் க்ளைமாக்ஸ்! எட்டு, பத்து வயதில் வேலைக்குச் சேருகிற பையன், ஒரே வருடத் திலோ, ஒருசில ஆண்டு களிலோ சைக்கிள் வைத்தியம் பார்ப்பதில் 'பிஸ்தா'வாவது, அவனது புத்திசாலித்தனத்தைப் பொறுத்த விஷயம்.

"ரொம்ப அடிவாங்குவாங்களோ?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. அதுவும் இப்பல்லாம் பசங்க படிச்சுட்டு வராங்க; அடிக்கிற வேலையெல்லாம் இவங்ககிட்ட நடக்காது!" என்கிறார் தி. நகரில் விக சைக்கிள் ஒர்க்ஸ் வைத்திருக்கும் விசுவநாதன்.

சில பையன்கள், ரிப்பேர் பார்ப்பதில் கில்லாடியாய் இருப்பார்கள். ஆனால் சொந்தமாய் கடை போட விட்டமின் 'ப' இருக்காது. அப்படிப்பட்டவர்கள், தொழிலில் தன்னம்பிக்கை இருந்தாலும், சுயமாய்த் தொழில் தொடங்க வசதி ஏற் படும் வரை காத்திருக்க வேண்டியது தான். சிலர், பிளாட்பாரங்களில் ஒரு பெட்டி, ரெண்டு மூணு டயர்களை வைத்து, தம் தொழிலை அடையாளம் காட்டிக் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்.

"வாடகை சைக்கிள் கடையும் சைக்கிள் ரிப்பேர் சர்வீசும் இணைந்து நடத்தினால் லாபகரமாய் இருக்கும். முதலீடும் அதற்கேற்ப அதிகம் தேவைப்படும். சுயதொழில் வாய்ப்புக்கு மிகவும் ஏற்றது சைக்கிள் கடை. குறைந்தபட்சம் பத்து சைக்கிளாவது இருந்தால்தான் ஓரளவு நல்லபடியாய் பிசினஸ் நடக்கும். இரண்டரை வருடங்களுக்கு முன் இருபது சைக்கிள்களுடன் கடையைத் துவக்கிய



என்னிடம் இப்போதுள்ள சைக்கிள்களின் எண்ணிக்கை ஐம்பது'' என்கிறார் விசுவநாதன்.

''சைக்கிள் ரிப்பேர் பார்த்துக் கொண்டு, வாடகைக்குச் சைக்கிள்களை விடுவதுடன், உதிரி பாக விற்பனையையும் துவக்கினால், லாபம் அதிகரிக்கும்'' என்கிறார் அனுபவசாலியான கார்த்திகேயன். ''இப்போது நகர்ப்புறங்களில், சைக்கிள் கடைகளில், பொதுத் தொலைபேசியொன்றையும் வைத்து விடுகிறார்கள். இது வருவாய்ப் பெருக்கத்துக்கு மிகவும் உதவிகரமாய் இருக்கிறது.''


ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் (ஐ.ஆர்.டி.பி) கீழ், கிராமப்புறங்களிலும் சைக்கிள் கடை நடத்தக் கடனுதவி கிடைக்கிறது. நகர்ப்புறங்களிலும், சைக்கிள் கடைகள் நடத்த வங்கிகளில் கடன் தருகிறார்கள். கிராமப்புறங்களில், வாடகை சைக்கிள்களுக்கு நல்ல கிராக்கி என்றால், நகர்ப்புறங்களில் சைக்கிள் ரிப்பேர் மூலம் வருமானம் கணிசமாய்க் கிடைக்கும்.

- ஜூலி

லாபமும் பிரச்னைகளும் ஒரே அளவு!

எப்படி, மாரியாத்தா பாடலில்லாத தமிழ் சினிமா இல்லையோ அதே போல் சைக்கிள் ஸ்டாண்ட் இல்லாத ரயில்வே ஸ்டேஷனும் இல்லை. மக்கள் தொகை பெருகி, பெட்ரோல், டீசலும் விலையேறி விட்ட இக்காலத்தில், நடுத்தர மக்களின் அத்தியாவசிய வாகனமாகி விட்டது சைக்கிள். எனவே, நகரெங்கும் ஏராள சைக்கிள் ஸ்டாண்டுகள்.

ரயில்வே ஸ்டேஷனிலும், சில தனியார்களும் சைக்கிள்கள் நிறுத்துவதற்காக ஆங்காங்கே ஸ்டாண்டுகள் அமைத்திருப்பதில் பல சௌகரியங்கள் உண்டு. நாம் வெளியே சென்று வரும் வரை, நமது சைக்கிள்களுக்கு அவர்கள் பாதுகாப்பு தருகிறார்கள். இதற்கு மாதக்கட்டணம் சுமார் பனி ரெண்டு ரூபாயி லிருந்து பதினாறு, பதினேழு ரூபாய் வரை அந்தந்தப் பிரதேசத்துக்கேற்றாற் போல வாடகை அமைகிறது.



* பாலமுருகன்


ரயில்வே ஸ்டேஷனில் சைக்கிள் ஸ்டாண்ட் அமைப்பதற்கு, ரயில்வே நிர்வாகம் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை 'டெண்டர்' மூலம் அழைப்பு விடுக்கிறது. அதிக 'கொட்டேஷன்', 'டெண்டர்' கேட்பவரின் முன் அனுபவம் இவற்றைக் கொண்டே அனுமதி வழங்கப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு டெண்டர் எடுத்தால் முந்தின வருடத்தின் டெண்டர் தொகையில் 5% ஐக் காப்பீட்டுத் தொகையாகச் செலுத்தியாக வேண்டும். தவிர, குத்தகை எடுப்பவர் வருமான வரி வேறு கட்டியாக வேண்டும்.

இத்தனை பணம் அரசுக்கு அளித்தாலும் சைக்கிள்களின் பராமரிப்பு போன்ற விஷயங்களுக்கான செலவு, குத்தகை எடுப்பவர்களைச் சார்ந்ததே.

தனியார், சைக்கிள் ஸ்டாண்ட் நிறுவினால் செலவு, பராமரிப்பு, பாதுகாப்பு சகல பொறுப்புகளும் அவர்களைச் சார்ந்ததே.

ஒருவகையில் ரயில்வே டெண்டர் எடுப்பவர்களை விட இவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில், வருமானம் ஒரே அளவு தான் என்பது தவிர டெபாஸிட் போன்ற இதர சம்பிரதாயங்கள் இவர்களுக்கு இல்லை!

ஒரு சைக்கிள் ஸ்டாண்டில் தோராயமாக 600 - 700 சைக்கிள்கள் நிறுத்தப்படுகின்றன. கணிசமான வருமானம் தானென்றாலும் பிரச்னைகளும் கணிசமானவே.



உதாரணமாக, அத்தனை சைக்கிள் களையும் தினசரி வரிசைப் பிரகாரம் அடுக்கி, 'நம்பர்' கவனித்து, திருட்டு போகாமல் காத்து, சேதாரம் ஏற்படாமல் பராமரிப்பது அந்தந்த உரிமையாளர்களின் பணிதான்.

சைக்கிளுக்கு ஏதாவது 'டேமேஜ்' ஏற் பட்டால் பழி அவர்கள் மீதுதான்!

''சமயங்களில் புதிய சைக்கிள்களே வாங்கித் தரும்படியும் நேர்ந்து விடுகின் றது'' என்கிறார் ஒரு சைக்கிள் ஸ்டாண்ட் உரிமையாளர் பாலமுருகன்.

இதில் என்ன சோகம் என்றால் சில குறும்புக்கார கஸ்டமர்கள், ரிப்பேர் ஆன தங்கள் சைக்கிளை (உதா : பிரேக் பெல் இல்லாது போதல், பஞ்சர் ஆகிவிடுதல்) ஓசைப்படாமல் ஸ்டாண்டில் நிறுத்தி விட்டு, பிறகு ''நான் கொண்டு வரும் போது ஒழுங்காகத்தானே இருந்தது! அதற் குள் இப்படியாகி விட்டதே!'' என்பதாக ஒரு மினி டிராமா நடத்தி செலவை, ஸ்டாண்ட் ஓனர் தலையில் கட்டிவிடுவதும் உண்டு.

இது மாதிரி சில்லறைப் பிரச்னைகள் சமீப காலத்தில் அதிகமாகி வருவதால், சில சைக்கிள் ஸ்டாண்டுகளில் - பத்திரிகை களில், 'எதையும் யாரையும் குறிப்பிடுவ தல்ல' என்று சாமர்த்தியமாகக் குறிப்பிடு வது போல - டேமேஜ்களுக்கு நாங்கள் பொறுப்பல்ல'' என்று முன்னதாக எழுதி, கையெழுத்து வாங்கி விடுகிறார்கள்!

கலவரம், லோக்கல் தகராறு சமயங் களில் பெரும்பாலும் அதிக பாதிப்புக்களுக் குள்ளாவது சைக்கிள் ஸ்டாண்டுகளே! (சோடா கடை இப்போது out of fashion!)

ஏழெட்டு சைக்கிள்கள் இதுமாதிரி சம யங்களில் பாதிப்புக்குள்ளானாலும் ஓனர் களுக்கு, செலவு கணிசமானதாகவே இருக் கும்.

எனவே தற்போது அநேகமாக எல்லா சைக்கிள் ஸ்டாண்டுகளிலும் இன்சூரன் ஸ்"க்கென்று வருடத்திற்கொருமுறை சைக் கிள் சொந்தக்காரர்களிடம் ஒரு தொகை (அதிக பட்சம் மூன்று ரூபாய் மட்டுமே!) வாங்கி விடுகின்றனர்.

''இன்சூரன்ஸ் பணம் எங்கே உடனே கிடைக்கிறது? அது வரும் வரை கஸ்டமர் கள் பொறுத்திருப்பதில்லை. 'தண்டம் அழ' வேண்டியது நாம்தான்!'' என்கிறார் பதிமூன்று வருடங்களாகக் குரோம்பேட் டையில் சைக்கிள் ஸ்டாண்ட் நடத்தி வரும் ஒரு அன்பர்.

'இத்தனை பிரச்னைகளை வைத்துக் கொண்டு இத்தொழில் நடத்துவது சிரமமா யில்லையா?' என்றால் -

'லாபம் கணிசம்' என்பதுதான் ஒரே பதில்!

– மாலதி சந்திரசேகரன்.

ரேஸ் சைக்கிள் விலை இருபதாயிரம் ரூபாய்!

''எனக்கு ஒரு வேலை கிடைத்தால் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து, முதலில் எனக்காக ஒரு ஸ்போர்ட்ஸ் சைக்கிள் வாங்கிக் கொள்வேன்!'' என்றார் 23 வயதுத் தமிழ்ச்செல்வன்.

''இந்த சைக்கிள் என் நண்பருடையது. ரயில்வேயில் வேலை பார்க்கிறார். சைக்கிள் ரேசுக்குப் போகும் போது எல்லாம், அவர்தான் தன் சைக்கிளை எனக்குக் கொடுத்து உதவுவார்.''

காரணம் : ஸ்போர்ட்ஸ் சைக்கிளின் விலை எக்கச்சக்கம். சுமார் 20,000 ரூபாய் ஆகிறது!

''டயரும் ட்யூபுமே மூவாயிரம் ரூபாய் ஆகி விடுகிறது!''

பீஹாரில் ஜம்ஷெட்பூரில் நடந்த ஜூனியர் நேஷனல் போட்டியில்

தங்கப்பதக்கம் வென்றவர் தமிழ்ச் செல்வன். தென்மண்டல அளவிலான போட்டி கோவையில் இந்த வருடம் நடந்த போது, முதலிடத்தைப் பிடித்தவர். செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட சைக்கிள் ஓட்டக் குழுவில் பல சான்றிதழ்களைப் பெற்ற இளைஞர்.

மாநில அளவிலான சாம்பியன்களுடன் கலந்து கொண்டு பிராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்தார் தமிழ்ச்செல்வன். ''எந்த சைக்கிளில் பிராக்டிஸ் பண்ணுகிறோமோ, அதையே போட்டிக்கும் உபயோகிக்கணும். அப்போதான் போட்டியில் ஓட்டுவதற்கும், வெல்வதற்கும் வசதியாய் இருக்கும்!''

அலுமினிய வார்ப்பும், நான்கு கியர்களுமாக அமர்க்களமாக இருக்கிறது ஸ்போர்ட்ஸ் சைக்கிள். ஜப்பானிய மாடல்.


● தமிழ்ச்செல்வன்

''பெல்ஜியம், அமெரிக்க சைக்கிள்கள் கூட இருக்கின்றன. 30,000, 40,000 ரூபாய் விலை ஆகும்!'' என்று தமிழ்ச் செல்வன் சொன்ன போது வியப்பாக இருந்தது.

''இதில் எத்தனை தூரம், எத்தனை நேரம் ஓட்டினாலும் களைப்போ, வலியோ தெரியாது. மற்ற சைக்கிள்களில் இது மாதிரி வேகமாக, நீண்ட தூரம் ஓட்டினால் முதுகுவலியும் கால்வலியும் வரும்!''

இரண்டு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்கள் வைத்திருக்கும் தமிழ்ச் செல்வன், தினசரி ஐம்பது கிலோ மீட்டர் சைக்கிள் ஓட்டி பிராக்டிஸ் செய்கிறார். பீச் ரோட்டில் காலை நாலுமணி முதல் ஆறு மணிவரை எந்தத் தொந்தரவும் இல்லாமல் பிராக்டிஸ் பண்ண முடியுமாம்!

– எஸ். வி. என்.

சிறுத்தையில் சவாரி செய்யும் சிங்கம்!

அட்டைப் படத்தில் சைக்கிள் ஓட்டும் ஹீரோ கிரிஸ் போர்ட்மன். பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸில் தங்கம் பெற்ற 23 வயது பிரிட்டிஷ் புயல்! இவருடைய சூப்பர் சைக்கிளைப் பிரத்யேகமாக வடிவமைத்தவர் மைக் பர்ரோஸ் என்ற இஞ்ஜினியரிங் டிசைனர். 'Wind Cheetah' (wind - காற்று; cheetah - சிறுத்தை) என்ற பெயரை அதற்கு வைத்தார். மைக் பர்ரோஸின் டிசைன்படி, சைக்கிளைத் தயாரித்து கிரிஸ் போர்ட்மனுக்கு உதவியது லோடஸ் நிறுவனம். ரேஸ் கார்களுக்குப் பெயர் போன இந்நிறுவனம் மிக அற்புதமாக 7.7 கிலோ எடையில் wind cheetah வைத் தயாரித்தது. 'சிறுத்தையில் பாய்ந்த பர்ரோஸ், தங்கத்துடன் திரும்பி நாட்டுக்கே பெருமை சேர்த்தார்.

படமும் தகவலும் : லண்டன் பிரெஸ் சர்விஸ்.

உடற்பயிற்சிக்கு சைக்கிள் உதவுமா?



* சிறு வயது முதலே...



* நகராத சைக்கிள்...

சைக்கிள் ஓட்டுவது நல்ல உடற்பயிற்சி என்று கருதப்படுகிறது. பல உடற்பயிற்சி நிலையங்களில் நகராத, ஆனால் பயிற்சி அளிக்கின்ற சைக்கிள்கள் உள்ளன. எப்படி இது உபயோகப்படுகிறது? டாக்டர் ஆர். ராஜேந்திரன் சொல்கிறார் :

"சிறு வயதிலிருந்தே சைக்கிள் ஓட்டுவதைப் பழக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும். நாற்பது வயதுக்குப் பின் திடீரெனத் துவங்குவது தவறு. மெல்ல மெல்ல சைக்கிள் பழகுவது ஆடுசதைகளுக்குப் பெரும் பயிற்சி. நடக்கும்போது கூட இந்தப் பகுதி பயிற்சி பெறுகிறது. ஆனால் சைக்கிள் ஓட்டுவது இந்தத் தசையை மேலும் கீழும் நகர வைத்து உறுதிப்படுத்துகிறது.

"கால்களில் ரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது. அதன் மூலம் நரம்பு மண்டல அமைப்புக்கும் உதவுகிறது. இருதயத்தில் ரத்த வெளியேற்றத்தையும் சீர் செய்கிறது. சிறந்த சுவாசப் பயிற்சியும் அளிக்கிறது.

"சைக்கிள் ஓட்டுவது உடல் முழுவதற்கும் பலனளிப்பதாகச் சொல்ல முடியாது. தொப்பை குறையும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

"சைக்கிள் போட்டிக்குச் செல்வது போல் பயிற்சியை ஆரம்பித்து விடக் கூடாது. எனக்குத் தெரிந்து பலருக்கு, சைக்கிளில் போகும் போதே, அதிக அழுத்தம் உண்டாகி மாரடைப்பும் ஏற்பட்டிருக்கிறது.

"சைக்கிள் உடற்பயிற்சி செய்பவர்கள், தங்கள் சக்திக்கு ஏற்ப பயிற்சி செய்ய வேண்டும். இப்போது 'ஜிம்'மில் பயிற்சி சைக்கிள்களில் வேகம் அளக்கும் கருவி, difficulty levels போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கள் பயிற்சியை அதிகப்படுத்தி, ஆரோக்கியமாய் விளங்க வேண்டும்.

"அளவுக்கு மிஞ்சினால் சைக்கிள் ஓட்டுதலும் அபாயம்தான்!"

* டாக்டர் ராஜேந்திரன்



- துளசி


கல்கி
9.1.94 இதழுடன்
இலவச இணைப்பு
GREAT BRITAIN
சைக்கிள்:
நம் உயிர்த் தோழன்!

Suits Every Pocket



Begin 1994 with

135 Quality Collection

eagle diaries

eagle press
'DIARY HOUSE', 15, M.S. Koil Street,
Madras - 600 013,
PHONE : 552694, 552695, 552696
GRAMS : SPREADEGLE, MADRAS
TELEX : 41-6265 EGLE IN
FAX: 044-556463


Efficient

Available at all Book Sellers & Stationers


"The runway is cleared for take-off"
Vault aboard the new Street Cat Rock 'n' Roll. Aglow in dramatic Laser Red and Marble Blue. Twist the lever of its silky new 18-speed Shimano* gears. Hit the pedals and blast off. Boom boom.
The front shocks soak up turbulence as you slam past gravity. Boom boom shake lake boom...
What are you waiting for? Come on and buckle up. Ten, nine, eight, seven...
ROCK 'N' ROLL
Streetcat
WITH
SHIMANO
Rs.2300/-
L.T. EXTRA
* Shimano of Japan makes the most sophisticated gear systems in the world. Check out the world's finest racing bikes... you're sure to find Shimano.

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka



என் குழந்தைகளுக்காக நான் சாக்லேட் வாங்கினேன்

(வழக்கம்போல ஸ்ரீத்தது
அதை தின்று தீர்த்துவிட்டது)



இதுதான் சாக்லேட்! இதுதான் சுவை!

O&M 2976 TAM R

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka



Insight-3840

சௌந்தரபாண்டி
ஸ்டோர்ஸ்

சிட்டி பாங்க் கார்டுகள் ஏற்கப்படும். 73, G.A. ரோடு, சென்னை - 600 021 போன்: 551777, 555444.